18 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 18 பாலம் 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 01, 2008

# ஈரான் - இலங்கை உறவு

## அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல் அச்சம்!

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ ரீதியான உறவுகள் குறித்து அமெரிக்கா, இஸ்ரேல், இந்தியா ஆகிய நாடுகள் தீவிர கவனம் செலுத்தியுள்ளன. ஈரான் தற்போது இலங்கையின் பொருளாதார மற்றும் பாதுகாப்புத் துறையில் பிரதான முதலீட்டாளராக மாறியுள்ளதாகவும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால், ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹமதி நிஜாத்துடனான உறவை மறைக்க முடியவில்லை எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈரான் அரசுடன் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நெருக்கமான உறவுகளை அடுத்து இலங்கைக்கான படைத்துறை உதவி-களை இஸ்ரேல் நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கும் புதிய இராணுவ தொழில்நுட்பங்கள் மற்றும் ஆயுத தளபாடங்கள் குறித்து இலங்கையிடமிருந்து ஈரான் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் என இஸ்ரேல் அஞ்சுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்ரேல் நீண்ட காலமாக இலங்கைக்கு இராணுவ தொழில்நுட்பங்களை விநியோகிக்கும் முக்கிய நாடாக இருந்து வருகிறது. வருடாந்தம் இரு நாடுகளுக்குமிடையிலும் நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இராணுவ கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன. இஸ்ரேல் இலங்கைக்கு கிபீர் விமானம், புதிய கடற்படை உபகரணங்கள், ஆளில்லா விமானம், எறிகணைக் கப்பல்கள் உள்ளிட்ட பல்வேறு இராணுவத் தளபாடங்களை விநியோகித்துள்ளது" எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கைக்கு உதவிகளை வழங்கிவரும் நாடுகளில் ஈரான் முதல் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈரான் இலங்கையின் பொருளாதாரத் துறையில் சுமார் அரை பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பொருளாதார முதலீடுகள், படைத்துறை உதவிகளை அது மேற்கொண்டு வருகின்றது. இதனிடையே கொழும்புக்கான ஆயுத விநியோகத்தை இஸ்ரேல் அதிகார பூர்வமாக நிறுத்தியுள்ள போதும் ஏற்கனவே வழங்கிய ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்களைத் தொடர்ந்து வழங்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், சிறிலங்கா அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மூதூர் படுகொலையை விசாரணை செய்வதற்கு பிரான்ஸ் அரசு, நீதிபதி ஒருவரை சிறிலங்காவுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் ஊடகத்துறை அதிகாரி லூசிலி குறோஸ்ஜுன் தெரிவித்துள்ளதாவது: 'திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பகுதியில் 2006 ஆம் ஆண்டு பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த பணியாளர் மீதான படுகொலைகளை விசாரணை செய்வதற்கு பிரான்ஸ் அரசு நீதிபதி ஒருவரை சிறிலங்காவுக்கு அனுப்பியுள்ளது.

ஜூலை மாதம் தொடக்க காலப்பகுதியில் சிறி லங்காவை சென்றடைந்த நீதிபதி, அங்கு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். இங்கு மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை அவர் பிரான்ஸ் அரசிற்கு எதிர்வரும் மாதம் சமர்ப்பிக்கவுள்ளார்.

நீதிபதி பிரான்ஸ் திரும்பிய பின்னர், பிரான்ஸ் அரசு இது தொடர்பில் தனது கூட்டணி நாடுகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளதுடன், இந்த கலந்துரையாடல்களின் பின்னர் படுகொலை தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் தேவையா என்பது தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

பிரான்ஸ் அரசும் பட்டினிக்கு எதிரான அமைப்பும் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நீதிபதியின் அறிக்கையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். மூதூர் படுகொலைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுப்பதாக பிரான்ஸ் அரசு எமது அமைப்புக்கு உறுதி அளித்துள்ளது என்றார். இதனிடையே பிரான்ஸ் நாட்டு நீதிபதி மூதூர் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதை சிறி லங்காவுக்கான பிரான்ஸ் தூதரகமும் உறுதிப்படுத்தி உள்ளது.

பிரான்சின் இத்தகைய நடவடிக்கைகளை சிறிலங்கா அரசாங்கமும் மகிந்த சகோதரர்களும் விரும்பாத போதும் பிரான்சின் வற்புறுத்தலிலேயோ இது நடைபெறுகின்றது. இதற்கு சிறிலங்கா அரசாங்கம் எவ்விதமான ஒத்துழைப்புகளை பிரான்ஸ் நீதிபதிக்கு கொடுப்பார் என்பது பெரிய கேள்வியாக உள்ளது. மேலும் பிரான்ஸ் நாட்டு நீதிபதி இலங்கையில் இருக்கும் இவ்வேளையில் தென்னாசிய நாடுகளின் ஒருங்கமைப்பான 'சாக்' மாநாடு நடைபெறுகின்றது. தென்னாசிய நாடுகளின் தலைவர்கள் சிறிலங்காவில் இருப்பதனால் சிறிலங்கா அரசாங்கம் பிரான்ஸ் நீதிபதியுடன் ஓரளவு தனது ஒத்தாசைகளை செய்யவேண்டிய நிர்பந்தத்தில் உள்ளது. இம்மாநாடு ஜூலை 27 இலிருந்து ஒகஸ்ட் 3ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறுகின்றது. கறுப்பு ஜூலையின் 25 ஆவது ஆண்டு நினைவுநாள் இடம்பெறும் இவ்வேளையில் சாக் மாநாடு நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பில் சிறிலங்கா அரசாங்கம் தனது அங்கத்துவத்தை இழந்திருக்கும் இவ்வேளையில் சாக் மாநாட்டில் உலகில் ஐந்தில் ஒரு பகுதி மக்களைக் கொண்டுள்ள நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

றிப்ளக்ஸ் REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

MORTGAGES • Residential • Commercial • Line of Credit
• Low Interest • 40 Lenders • Pre-approval • Re-finance • Debt Consolidation
• Bad or No Credit OK • Self-employed OK • New Immigrant OK • Private funds also OK
STANDARD MORTGAGES INC.
ANANDA, M.Com., CA
Mortgage Specialist /Financial Consultant
Direct: 416-319-2520
Gold Coin Group Inc.
INSURANCE • All Insurance Companies • Life • Critical illness • Disability • Health & Dental • Travel • Visitors • Mortgage
RESP RRSP • Govt. grants • Highest scholarships paid till now • Flexible • Excellent growth • Reduced taxes • unrestricted
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES

அடமானக் கடன் செய்து கொடுப்பதே! என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam, B.Com.
Sales representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife GTA Realty Inc.
Real Estate Brokerage,
Independently owned & operated
1711 McCowan Rd. Suite 206, Scarborough, ON

கதிர்
GTA Square SOLD OUT ! Only 12 units left
Middlefield & finch
GTA SQUARE
Great Opportunity Don't Miss Out
24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Kathir S Kathirgamanathan P. Eng.
kathirs@rogers.com Sales Representative
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto
Independently owned and operated

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

பங்குச் சந்தை (Stock Market) கனடாவிலும், அமெரிக்காவிலும் தொடர்ந்து ஏறுவதும், இறங்குவதுமாக சறுக்கு மர விளையாட்டாக இருந்து வருகின்றது. பொருளாதார மந்த நிலை என்பதில் இப்போது பலருக்கும் சந்தேகம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் ஜுலை 15 அன்று Bank of Canada வட்டி வீதங்களை மாற்றாமல் விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கனடிய அரசாங்கம் Bank of Canada விடமிருந்து விலைவாசி உயர்வை ஒன்றிலிருந்து மூன்று சதவீதத்துக்குள் வைத்திருக்குமாறு எதிர்பார்க்கின்றது. அதற்குத் தேவையான பணம், வட்டி சார்ந்த நடவடிக்கைகளை எடுப்பது Bank of Canada கடமையாகின்றது. விலைவாசி உயர்வு, நடுத்தர மற்றும் கீழ்த்தர மக்களை வெகுவாகப் பாதிக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஏறிவரும் பெட்ரோல் (Gas) மற்றும் உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு கனடாவில் மூன்றாண்டுகளில் முதன்முறையாக ஜுன் மாதத்தில் 3 சதவீதத்தைக் கடந்திருக்கின்றது. புள்ளியியல் கனடா அறிவிப்பின் படி துல்லியமாகச் சொல்ல வேண்டும் என்றால் ஜுன் மாத விலைவாசி உயர்வு (inflation) 3.1 சதவீதம், உணவுப் பொருட்களில் பேக்கரி அயிட்டங்களின் (items) விலை உயர்வு மட்டும் 12.3 சதவீதமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வீட்டுப் பராமரிப்பு, எரிவாயு (Gas), கார் இன்ஸ்ரன்ஸ் என்று எல்லாவற்றிலுமே ஜுன் மாதத்தில் விலைவாசி உயர்வு இருந்துள்ளது. இதற்கு ஒரே விதி விலக்கு, கார் வாங்குவதற்கு அல்லது லீசிற்கான விலைகள் தான். கார் விலைகள் ஜுன் மாதத்தில் இறங்குமுகமாக இருந்துள்ளன. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தக் கார் விலை வீழ்ச்சி 8.4 சதவீதமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

வட்டி வீதத்தை உயர்த்தாமல் விட்டதற்கு Bank of Canada தெரிவித்த காரணங்கள் மூன்று.

1. தொடர்ந்து இருந்து வரும் அமெரிக்கப் பொருளாதாரத்தின் பலவீனம்.
2. உலக நிதிச் சந்தையில் தொடர்ந்து இருந்து வரும் குழப்பமான, நிலையற்ற சூழ்நிலை.
3. விரைவாக அதிகரித்துள்ள பொருட்களின் விலைகள்.

இந்த நிலையில் இனிவரும் மாதங்களில் வட்டிவீதம் எப்படி இருக்கும்? கனடாவின் முக்கிய வங்கிகளின் கணிப்பைப் பார்ப்போம். Canada TD Trust, Bank of Montreal, Royal Bank, CIBC ஆகிய எல்லா வங்கிகளுமே 2009 முற்பகுதிவரை இப்போதுள்ள வட்டிவீதங்கள் தொடர்ந்து நீடிக்கும் என்று கணிக்கின்றன. Scotia Bank மட்டும் 2009 முற்பகுதியில் 0.25 சதவீதம் வட்டிவீதம் குறைய வாய்ப்புள்ளதாகக் கணிக்கின்றது.

வீட்டுக் கடன்களில், அமெரிக்காவைப் போன்று சில புதுமைகள் இரண்டு வருடங்களுக்கு முன் கனடாவிலும் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் முக்கியமான இரண்டை இப்போது நினைவு கூர்வோம்.

• 40 வருடம் வரை வீட்டுக்கடனைத் திருப்பிச் செலுத்துவது (amortization). (முன்பு 25 வருடம் வரை தான் காலம் தரப்பட்டிருந்தது)



**பெரி. முத்துராமன்**

• பணமே போடாமல் (Zero Down Payment) முற்றிலும் கடனில் வீடு வாங்குவது.

இந்த நிலையில் அமெரிக்காவைப் போன்று கனடிய பொருளாதாரத்திலும் பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்காக கனடிய அரசாங்கம் சில புது விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்தப் புது விதிமுறைகள் முதன்முறை வீடு வாங்குபவர்களை நிச்சயம் பாதிக்கும் என்பதிலும் வீட்டு விலைகளில் சற்றே சரிவையும் உண்டாக்கும் என்பதிலும் சந்தேகம் ஒன்றுமில்லை.

மேலே தொடருமுன் அந்த புது விதிமுறைகளின் சுருக்கத்தை இங்கே பார்ப்போம்.

• வீட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம். நாற்பதிலிருந்து 35 வருடங்களாகக் குறைக்கப்படுகின்றது.

• குறைந்தபட்சம், வீடு வாங்க Down Payment என்று சொல்லப்படும் சொந்தப் பணம் ஐந்து சதவீதமாவது இருக்க வேண்டும்.

• குறைந்த பட்சம் Credit Score 620 இருக்க வேண்டும். மேலும் இந்த குறைந்த பட்ச Credit score க்கான காரணங்களும் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்று முடிவு செய்யப்படும். (முன்பு Credit Score 580 இருந்தாலே வீட்டுக்கடன் கொடுக்கப்பட்டது)

• வீட்டுக் கடனுக்கான புதிய படிவங்கள் (கடினமான முறையில்) அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

கனடாவில் 20சதவீத முன்பணம் அல்லது Down Payment இல்லாமல் கடன் வாங்குபவர்கள் வீட்டுக்கடனுக்கான காப்பீட்டை CMHC என்ற அரசு நிறுவனத்தினிடமிருந்தோ GE போன்ற தனியார் நிறுவனங்களிடமிருந்தோ பெற்றிட வேண்டும் என்பது விதி. பெரும்பாலான காப்பீட்டை நடைமுறையில் வழங்குவது CMHC தான். இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் CMHC க்குத்தான் பொருந்தும் என்றாலும் தனியார் நிறுவனங்களும் அவற்றைப் பின்பற்றலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. மேலும் கனடிய வங்கிகள் ஏற்கனவேயே வீட்டுக்கடன் வழங்குவதைக் கடினமாக்கியுள்ளன. இந்நிலையில் அரசின் அறிவிப்பை பல வங்கிகள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு நடைமுறையில் எல்லாவித வீட்டுக்கடன்களுக்குமே அவற்றை பொதுவிதியாகக் கருதிச் செயல்படத் துவங்கியுள்ளன. அரசின் புதுவிதிமுறைகள் ஒக்ரோபர் 15 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

ஏற்கனவே பணமே போடாமல் வீட்டுக்கடன் வாங்கியவர்களையும், 40 வருடங்களுக்குத் (Amortization) திருப்பிக்கட்ட அனுமதி பெற்றவர்களையும், இந்தப் புதுவிதிகள் பாதிக்காது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாறிவரும் இந்த சூழ்நிலையில் என் அறிவுரைகள் இதோ - கடன்கள் பெறுவது என்பது பொதுவில் கனடாவில் கடினமாகி வருகின்றது. இந்த நிலையில் உங்கள் Credit Score ஐ 720 க்குக் குறையாமல் வைத்துக் கொள்ள முயல வேண்டும். அப்படி இருக்குமானால், (தகுந்த வருமானமும் இருக்கும் போது) புதிதாக எத்தகைய வீட்டுக்கடன்களையும் பெறுவதில் சிரமம் இருக்காது.

கூடிய Score குறைந்த வட்டியில் கடனைப் பெற்றுத் தரும் என்பதையும் மறந்து விடக்கூடாது. 720 Score ரைப் பெறுவது ஒன்றும் சிரமம் அல்ல. கடன்களைத் தவணை தவறாமல் உரிய காலத்துக்குள் செலுத்தி வரும் போதும் உங்களிடம் இருக்கும் Credit line, Line of Credit போன்றவற்றைப் பாதிக்கும். குறைவாக (50 சதவீதத்துக்குக் குறைவாக) உபயோகித்து வரும் போதும் எளிதில் 720 Score பெற்று விடலாம்.

அதற்கு நீங்கள் தயாரா? புதிய விதி முறைகள் Credit Score குறைந்த பட்சம் 620 இருக்க வேண்டும் என்று சொன்னாலும், 620 இருக்கும் எல்லோருக்கும் கடன் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. 620 ஆக, (அதாவது குறைவாக) இருப்பதற்கான காரணங்களும் ஆராயப்படும். இத்தகைய குறைந்த Score, காலதாமதம், மற்றும் Bankruptcy காரணமாக இருந்தால் கடன் மறுக்கப்படலாம். Credit Card, Line of Credit போன்றவற்றில் கூடுதல் கடன் இருப்பதன் காரணமாக Score குறைந்திருந்தால் கடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சுருங்கச் சொன்னால் வரவுக்கு ஏற்ற செலவு இருக்க வேண்டும். விரலுக்கு ஏற்ற வீக்கம் இருக்க வேண்டும். தாத்தா பாட்டி சொன்ன மாதிரி பணத்தைக் கையாண்டால் பிரச்சினை வராது. இல்லையேல் பிரச்சினைதான். இதைத்தான் அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் தற்சமயம் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்தக் கண்டு பிடிப்பின் அடிப்படையில் தான் கனடிய அரசாங்கமும் விதிமுறைகளை மாற்றுகின்றது. இன்றைய சூழ்நிலையில் முன் எப்போதையும் விட கவனத்துடன் கடன் மற்றும் முதலீடுகளைக் கையாள்வது முக்கியத்துவம் பெறுகின்றது.

உங்கள் முதலீடுகள் பற்றி இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010



# அடையாளம்

தளிர்
மஞ்சள் நிறத்தில்
உடுத்த வேட்டி

அதே நிறத்தில்
முளங்கால்வரை
அணிந்துள்ள
நைசனல் மேற்சட்டை

தோளில்
தாழ்வாகத் தொங்கும்
சீலைப்பை

கறுப்பு வெள்ளை
கலந்த
தாடியும் மீசையும்

குழிவிழுந்த கண்கள்
ஒட்டிய கன்னங்கள்

ஊசி உடல்
கொட்டாவி விடும்
வயிற்றுடன்

'சங்க இலக்கிய'
விமர்சனக் கூட்டத்தின்
முன்வரிசையில்
அமர்ந்திருப்பது

'தொல்சீர் செந்தமிழ்'



முத்துராஜா


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife GTA Realty Inc.** Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# சகானாவின் இராகங்கள்

## அனைவரையும் கண்ணீர் மல்கவைத்த மாறுபட்ட கலையிரவு

கடந்த 26.07.2007 அன்று மாலை சேர். ஜோன் மக்டொனால்ட் கலையரங்கில் முற்றுமுழுதாக வித்தியாசமாக நிகழ்ந்தது சகானாவின் இராகங்கள். கனடிய மண்ணில் வலுவளர் சவால்களை எதிர்கொள்ளுவோரின் நிலைமையினை மக்கள் மத்தியில் இனங்காட்டுவதற்காக எடுக்கப்பட்ட ஒரு நிகழ்வாக முன்வைக்கப்பட்டது "சகானாவின் இராகங்கள்". திரு, திருமதி பத்மநாதன் யோகமலர் தம்பதியினரின் புதல்வி செல்வி சகானா பத்மநாதனின் கர்நாடக இசை, பரதநாட்டிய நிகழ்வுகள் இடம்பெற்றன. இவை இரண்டிற்கும் இடையே "வாழ்வின் திருப்பம்" என்னும் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இரண்டு விடயங்கள் அங்கு வந்திருந்த அனைவரதும் கண்களில் நீர் மல்க வைத்தமையைப் பார்க்கமுடிந்தது. ஒன்று செல்வி சகானா தனது தந்தை தனக்காக மேற்கொள்ளும் அர்ப்பணிப்பையும், அன்பையும், இடர்பாடுகளையும் கருத்தில்கொண்டு பாடப்பட்ட பாடல். "எப்படிப் பாடுவேனோ என் தந்தையின் உள்ளந்தன்னை" என்னும் பாடலைப் பாடும்போது சகானா தனது தந்தையை அழைத்து முன் ஆசனத்தில் இருக்க வேண்டிப் பாடினார். அவர் பாடும்போது சபையில் இருந்த அனைவருமே கண்ணீர் மல்க அவரது பாட்டைக் கேட்டு மனமுருகினர்.

அடுத்த நிகழ்வு 'வாழ்வின் திருப்பம்' என்னும் நூல்வெளியீடு சற்று வித்தியாசமான முறையிலே இடம்பெற்றமை மண்டபத்தில் இருந்த அனைவரதும் கவனத்தையும் முழுமையாக ஈர்த்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. யாருமே செய்திருக்காத முறையில் நூலில் ஆக்கங்களைப் படைத்திருந்தவர்கள் அனைவரையும் மேடையில் அமரவைத்து அவர்களை அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இந்த நூலைப்பற்றிய கருத்துக்களைத் தொகுத்துத் தந்ததோடு எழுத்தாளர்கள் அதாவது உடலால் அல்லது உளத்தால் வலுக் குன்றியவர்கள் அதாவது வலுவளர் சவால்களை எதிர்நோக்குவோரால் அல்லது அவ்வித இழப்புக்களால் பாதிப்புக்கு உள்ளானவர்களின் அனுபவங்களைத் திரட்டித் தந்துள்ளது இந்த நூல். அவர்களில் சிலர் முன்னரே எழுதிப் பரிச்சயம் உள்ளவர்கள். சிலரோ முதன் முதலாகத் தங்கள் அனுபவத்தை அப்படியே வடித்துத் தந்துள்ளனர். அவர்கள் வாழ்வில் பட்ட அனுபவங்களை எல்லாம் நெஞ்சுருகத் தந்துள்ளார்கள். ஆரம்பத்தில் இவற்றை அறிமுகம் செய்துவைத்தவர் சகாப்தன் என அறியப்பட்ட பிரபல நாடக இயக்குனரும் எழுத்தாளருமான வேல்ரைதன் ஆவர்.

இந்த நூலையும் அதனை எழுதியவர்களையும் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார் தனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தையும் கருத்திற் கொள்ளாமல் பொன்னையா விவேகானந்தன் என்றால் அவரை இந்த நூல் எவ்வளவிற்கு ஆட்கொண்டுள்ளது என்பது வெளிப்படை. "ஊனம் வாழ்வின் முடிவல்ல என்பதனை தமது வாழக்கையின் மூலம் நிரூபித்துச் சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதைகள் அடங்கிய நூல்" என்னும் வாசகம் அந்த சிவப்பு வண்ணப் பின் அட்டையை நட்சத்திரங்களின் ஒளிக்கீற்றிடையே அலங்கரிக்கின்றது. இந்த நூலைத் தனது மகளை 15 மாதங்களில் இழந்த சகானாவின் தாய் யோகா பத்மநாதன் தொகுத்துத் தந்துள்ளார். யோகா பத்மநாதன் உரையாற்றும்போது தனக்குத் தனது இளைய மகளின் இழப்பிலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினையே நான் இன்று மேற்கொள்ளும் இந்தச் சேவையும் எனது மகள் சகானாவை இதில் ஈடுபட வைத்தமையும் ஆகும் என்ற அவர், ஒரு இழப்பைச் சந்தித்தவர்களுக்குத் தான் அந்த இழப்பின் அல்லது அனுபவிப்பவர்களாற்றான் அதன் தாக்கம், துன்பம், தாற்பரியம் விளங்கிக்கொள்ள முடியும். இந்தச் சமூகத்தால் புறக்கணித்து ஒதுக்கப்படும் வலுவளர் சவால்களை எதிர்கொள்வோரை ஒதுக்கி வைக்காது அவர்களை வாழவைக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவிக்கரம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். எழுத்தாளர்கள் சார்பில் நளினி கோடீஸின் உரையும் இடம்பெற்றது. அவர் வலுவளர் சவால்களை எதிர்நோக்குவோருக்கு உதவுவது பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

வன்னித்தமிழ்ச் சமூக கலாசார அமையத்தின் முன்னாள் தலைவரும் கொம்பறை மலரின் பதிப்பாசிரியர் சபா. இராசேஸ்வரன் சங்கம் மேற்கொள்ளும் வன்னிப்பிரதேச கல்வி நிதிச் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தமையும் அவற்றைக் கேள்வியுற்றிராத பலரின் கவனத்தை ஈர்ந்திருந்தது என்பதோடு பலர் தாம் இதற்கு உதவுகின்றோம் என முன்வரவும் தூண்டுகோலாக அமைந்திருந்தது.

**த. சிவபாலு, எம். ஏ.**

நூல்வெளியீட்டைத் தொடர்ந்து 'ஓ சம்போ' என்னும் பாடலுக்கு நடனமே கற்றுக்கொள்ளாத வலுவளர் சவால்களை எதிர்கொண்டிருக்கும் செல்வி மீரா தர்மலிங்கத்தின் நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சகானாவின் நடனத்தோடு விழா நிறைவுற்றது.

# முதியோர் பங்குகொண்ட வசந்தவிழா

ஹார்மனி கோல் (Harmony Hall) நிலையத்தினரின் ஏற்பாட்டில் அதன் உறுப்பினர்களாக உள்ள தமிழ் முதியோர்கள் இணைந்து மேற்கொண்ட 'வசந்த விழா' யூலை 5ம் திகதி மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதியோர்களும் குழந்தைகளும் குணத்தால் ஒன்று என்பதற்கு அமைவாக அவர்கள் ஆடிப்பாடி, மகிழ்ச்சியாக நிகழ்ச்சிகளைத் தந்து குதூகலிப்பாக இருந்த காட்சி அவர்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை மனமகிழ வைத்துள்ளதற்கு மேலாக எம்மாலும் இது முடியும் என்ற மனத் திருப்தி அவர்களுக்கு மேலான மகிழ்வைத் தந்திருந்ததனை அறியமுடிந்தது. 'உளத்து இன்பம் உன்னத வாழ்வைத்தரும்' என்பதைத் தாரக மந்திரமாக்கியது இந்த விழா.

**- த. சிவபாலு -**

இந்த நிகழ்விற்கு அந்த நிலையத்தின் தலைவர் டேவிட் லீபர்மான் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் முதியோர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும், அவர்களைக் கவனிப்பதற்கு நண்பர்கள், இந்த நிலையம் என்பன உண்டு என்பதனை எடுத்துரைத்து அனுபவமும், ஆற்றலும் மிக்க முதியோர்களை மனம் நோகாதா வண்ணம், மனவெறுப்பு, விரக்தி அடையாமல் அவர்கள் சுறுசுறுப்பாக நடந்துகொள்ள இந்த நிலையம் உதவுகின்றது. போக்குவரத்து வசதிகளையும், சுற்றுலாக்களையும், பொழுது போக்கு வாய்ப்புக்களையும் அவர்களுக்குப் பெற்றுத்தரும் ஒரு சிறந்த நிலையமாக இது விளங்குகின்றது என்றுரைத்தார்.

தமிழ் முதியோர் மேடையில் ஏறி 'அலைபாயுதே கண்ணா' என்ற பாடலை பாடிய காட்சியும், அவர்கள் ஆடிய தீப நடனமும், பாட்டுக்குப் பாட்டு போட்டி நிகழ்ச்சியும் மெய் சிலிர்க்கவைத்த காட்சியாக அமைந்தன. நடன ஆசிரியர் வாசு சின்னராசாவின் நெறியாழுகையில் இடம்பெற்ற தீப நடனத்தையும் அவர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

இவற்றிற்கு மேலாக பேரக்குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகள் சதங்கை நர்த்தனாலய மாணவி யரின் நடன நிகழ்ச்சிகள், பேரக்குழந்தைகளின் திரை இசை நடனம், இரா. தணியின் நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார் தொழிலதிபரும் கணேசன் சுகுமார் அவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மீனா அவர்கள் கலந்துகொள்ள முடியாமையால் அவரின் செய்தி ஒன்றையும் அவர் கொண்டுவந்திருந்தார். முதியோர்களுக்கான பல செயற்றிட்டங்களைக் கனடிய அரசு செயற்படுத்தி வருகின்றது. வாழ்க்கையில் உழைத்து ஓய்ந்து போனவர்களை முடங்கி இருக்கவிடாது அவர்களைச் செயற்பட வைத்து ஊக்கப்படுத்தி வருகின்ற முக்கியமான பணியை இந்த நிலையம் ஆற்றி வருகின்றது. அந்தப்பணி நான்கு சுவர்களுக்குள் முடங்கி விடாது சமூகத்தோடு ஒட்டி உற்சாகமாக இருக்க, செயற்பட இத்தகைய நிலையங்கள் உதவி வருவதனை நான் நன்கு அறிவேன். எனவே இங்கு கலந்துகொண்டுள்ள முதியோரையும், அவர்களுக்குப் பணியாற்றி வாய்ப்புக்களை நல்கும் பணியாளர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன் என்றுரைத்தார். பணியாளர்கள் சார்பில் ஊர்மிளா செல்வநாயகம் உரையாற்றினார். மேலும் திருமதி மங்கை சின்னையா, எம். குணரட்ணம், இரா. தணி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவின் நிகழ்வுகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் மிக அடக்கமாகவும் சிறப்பாகவும் தந்தார் பிரபல மெல்லிசைப் பாடகி செல்வி அனுஷா சிவலிங்கம், தமிழில் மதன் காந்தன் அவர்கள் மேற்கொண்டார். அவரது தமிழ் தொகுப்புச் சற்று அதிகமானதாகவும், மிகைப்படுத்தப்பட்டதாகவும் காணப்பட்டது. 'முதியோரைக் கட்டி மேய்ப்பது' என்பது கடினம் என்ற சொற் பிரயோகம் பல முதியோர்களின் மனதைக் கருத வைத்தமையை எனக்குப் பக்கத்தில் இருந்தவர்களே சொல்லி வேதனைப்பட்டமையை அறியமுடிந்தது. எதிலும் அடக்கம் தேவை என்பதனை அந்த நிலை தந்திருந்தது என்பதனை பொதுவாக அறிவிப்பாளர்களாக மேடையில் தோன்றுவோர் கைக்கொள்ளுதல் அவர்களுக்கு நல்ல பெயரைத் தக்கவைக்கும் என்பதனைக் கருத்திற் கொள்ளுதல் வரவேற்கத்தக்கது.

இந்த விழாவிற்கு மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயம், சிரிபிசி இளையபாரதி உட்பட பலரும் தங்களாலான ஆதரவை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


APPLEMORE AUTOMOTIVE

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6




# கடவுள் எப்போதும் பதிலளிக்கிறார்

நீங்கள் இறந்தவுடன் வாழ்க்கை நின்றுவிடாது என்பதை சிறிது அறிவுடைய எவரும் பார்க்கமுடியும். ஒரு விநாடி கண்களை மூடி உங்களுக்குள் பார்த்தால் இது முடிந்துவிடாது என்பதை நீங்கள் உணர முடியும். இந்த உடல் இயக்கம் நின்றுவிடலாம். மனம் நின்றுவிடலாம். ஆனால் வேறேதோ ஒரு இயக்கம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அப்படியானால் அடுத்தது என்ன என்று பார்க்க வேண்டியது ஒவ்வொருவரின் பணி. அதைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அவர்களுக்கு யார் அந்த வழியைக் காண்பிக்கப் போகிறார்கள்? யாரும் அவர்களுக்கு அந்த வழியைக் காண்பிக்க மாட்டார்கள். உங்களுக்குள் தேவையான உந்தல் இருந்தால் நீங்கள் எங்கிருந்தாலும் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பிரபஞ்சத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் நீங்கள் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்வீர்கள். உங்கள் உந்தல் உண்மையானது என்றால் சரியான இடத்திற்குப் போய் சேர்வீர்கள். ஆனால் உந்தல் இருப்பதும் மறைவதுமாக இல்லாமல் நிரந்தரமாக இருக்கவேண்டும்.


உண்மையான தேடலுடன் இருக்கும் ஒரு நபர் தனக்குள் அதீத உந்தலை ஏற்படுத்திக் கொள்ளும் ஒருவர் தன் குருவை எப்போதும் கண்டு கொள்கிறார். அவர் தன் குருவை ஒரு ஆணில் கண்டுகொள்ள முடியும் ஒரு பெண்ணில் கண்டுகொள்ள முடியும் அல்லது ஒரு மலையக்கூட தன் குருவாகக் கண்டுகொள்ள முடியும். எங்காவது அவர் தன் குருவைக் கண்டுகொள்வார். அதைப்பற்றி ஒரு சந்தேகமும் இல்லை.

கேட்கும்படி நீங்கள் அழைத்தால் கடவுள் எப்போதும் பதிலளிக்கிறார். கேட்கும்படி யாரும் குரல் கொடுப்பதில்லை என்பதுதான் உண்மை. தர்க்க அறிவுடன் நீங்கள் அழைத்தால் கடவுள் பெயரை சத்தமாகக் கூறி அழைத்தாலும் கடவுள் ஒரு போதும் செவி சாய்க்க மாட்டார். அன்புக்கு அவர் உடனே பதிலளிப்பார். சிலரின் ஒவ்வொரு பிரார்த்தனையும் செவி சாய்க்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.



சத்குரு ஜக்கி வாசுதேவ்


## புதிய குடிவரவாளருக்கு ஒரு நல்ல ஆரம்பத்திற்குத் தேவையான சேவைகளை வழங்கல்



கனடா அரசாங்கம் குடிவரவில் நம்பிக்கை கொண்டது. மேலும் குடிவரவாளர்கள் எங்களுடன் சேர்ந்து கனடாவின் எதிர்காலத்தின் ஒரு முக்கிய பகுதியாக இருப்பதை நாங்கள் விரும்புகின்றோம். ஆனபடியாற் தான் நாங்கள், எங்கள் குடிவரவு முறையை பின்வருமாறு முன்னேற்றுகின்றோம்.

1.குடிவரவுத் தேவைகளை பூர்த்திசெய்யக் கூடிய விதத்தில் விதிகளை எழிதாக மாற்றி வளைந்து கொடுக்கக் கூடிய, நியாயமான அத்துடன் பொறுப்பான ஒரு குடிவரவு முறையை. உருவாக்கல்

குடிவரவுச் சட்டங்களுக்கான மாற்றங்கள், கனடாவிற்கு மிகத் தேவையான நிபுணத்துவமுடைய தொழிலாளர்களை கவர்வதையும் அத்துடன் குடும்பங்கள் வேகமாக மீண்டும் ஒன்றுசேர்வதையும் உறுதிப்படுத்த உதவும்.

2. வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவுதல்

தங்களுடைய நற்சாட்சிப்பத்திரங்களை கனடாவில் அங்கீகரிக்கச்செயவதற்குத் தேவையான தகவல்களை, புதிய குடியிருப்பாளர்கள் பெறுவதற்கு உதவுவதற்காக வெளிநாட்டு நற்சாட்சிப்பத்திரங்களை ஆலோசனைக்கு அனுப்பும் காரியாலயம் 2007ல் உருவாக்கப்பட்டது.

3. குடியேறுதலுக்கான நிதிக்கொடுப்பை அதிகரித்தல்.

மொழிப் பயிற்சி அத்துடன் வேலை தேடல் அத்துடன் புதிய குடிவரவாளர்கள் காரிய சித்தியடைந்து கனடாவில் ஒரு புதிய வீட்டை உருவாக்க உதவுதல் உட்பட குடியேறுதலுக்கான நிதிக்கொடுப்பில் மேலும் $1.4 பில்லியனை கனடா அரசாங்கம் முதலீடு செய்துள்ளது.

4. நிரந்தர குடி உரிமைக்கான கட்டணத்தைக் குறைத்தல்

மத்திய அரசாங்கம் நிரந்தர குடி உரிமைக்கான கட்டணத்தை $975 ல் இருந்து $490 ஆக குறைத்துள்ளது.

www.cic.gc.ca யில் மேலும் தகவல்களை அறியவும் அல்லது 1 800 O-Canada (1-800-622-6232) யை அழைக்கவும். TTY: 1-800-926-9105.

Citizenship and Immigration Canada
Citoyenneté et Immigration Canada

Canada



**Raphael Maharaja**
**Barrister, Solicitor & Notary Public**

**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



**Tel: 416-847-7077  Fax: 416-847-7088**

# அரிஸ்ரோற்றில்

கிறிஸ்துவிற்கு முன் 384 க்கும் 322 ற்கும் இடையில் வாழ்ந்த கிரேக்கத்தின் தத்துவஞானி. மகா அலெஸ்சான்டருக்கு ஆலோசகராக இருந்தவர் எனக் கருதப்படும் இவர் பிளாட்டோவின் மாணவர் என அறியப்படுகின்றார். தமது காலத்தின் ஏறக்குறைய எல்லாத்துறையிலுமே விற்பன்னராக இருந்த அரிஸ்ரோற்றில், தமது மாணவர்களுக்கு சரித்திரம், அரசியல், விஞ்ஞானம், வானியல், நாடகம், கவிதை என்பவற்றைக் கற்பித்தாலும், தத்துவமே இவரது பிரதான பாடம். பல புத்தகங்கள் (நூல்கள்) கூட எழுதியுள்ளார். நல்லதொரு ஆசிரியராகவும் இனம் காணப்பட்டுள்ளார்.

## பிரபஞ்சம் - 21

தமது காலத்தில் பௌதீகம், வானியல், உயிரியல் போன்ற விஞ்ஞானப்பாடங்களில் பல புதிய விளக்கங்களை, விபரங்களை கற்பித்திருக்கின்றார். புத்தகங்களிலும் எழுதியுள்ளார். இவர் ஒரு விஞ்ஞானியோ அல்லது வானவியலாளரோ இல்லை. தமது கருத்துக்களை எல்லாம் எல்லாம் தர்க்க ரீதியில் விளங்கிக் கொள்ள முயற்சித்தவர். இவர் பௌதீகத்தில், வானியல், உயிரியல் அக்காலத்தில் கூறிய விபரங்கள் எல்லாம் தவறானவை என இந்நாளில் அறியப்பட்டுள்ளது. ஆனாலும் இன்றைய முடிவுகள், தெளிவுகள் என்பன அரிஸ்ரோற்றின் கருத்துக்களை மையமாகக் கொண்டுதான் பெறப்பட்டவை என்பது மறுக்கமுடியாதது. எதிர்த்தன்மையான முடிவுகள் கூட, அரிஸ்ரோற்றலின் கருத்துக்களை ஆய்ந்த பின்னவர்கள் பெற்ற முடிவுகளே! எமது தத்துவ சிந்தனைகளின் ஊடாக பேரண்டக்கதை எப்படிப்பார்த்தார்? எப்படி விளங்கிக் கொண்டார்? என்பதை பார்க்கப்போகின்றோம். எனது பேரண்டக்கதையின் இரண்டாவது நாயகன் அரிஸ்ரோற்றலே தான்.

தனக்கு முன்னதாக 150 வருடங்களின் முன் வாழ்ந்த பைதகரசின் பேரண்டம் பற்றிய விளக்கத்தில் இருந்தே அரிஸ்ரோற்றில் தமது பேரண்டத்திற்கான விளக்கத்தைக் கொடுத்தார். அரிஸ்ரோற்றில் பேரண்டத்தையும், அதன் அமைப்பையும், அதன் இயக்கத்தையும் தத்துவார்த்த முறையிலேயே பார்த்தார். இப்படி ஒன்று இருக்கவேண்டுமாயின், அது இன்ன இன்ன இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். இந்தவகையாகத்தான் இயங்கவேண்டும் போன்ற தர்க்கரீதியிலான கேள்விகளை எழுப்பி அவற்றின் விடைகளில் இருந்தே முடிவுகளைப் பெற்றார், கூறினார் அரிஸ்ரோற்றில். அவரின் இந்தச் சிந்தனைச் சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே, இவரின் பின்னர் வந்த விஞ்ஞானிகள் தமது ஆய்வுகளைச் செய்தனர். முடிவுகளைப் பெற்றனர். இன்றும் கூட வானவியலாளர்களினால் இம்முறையே பின்பற்றப்படுகின்றது என்பது மிகச் சிறப்பான விடயமாகும். அரிஸ்ரோற்றலின் முடிவுகள் சரி, பிழை என்பவற்றிற்கும் அப்பால், இவரின் இந்தவகையான முயற்சியே, இவரினால் முன்வைக்கப்பட்ட பேரண்டக்கொள்கையானது, அவரின் பின்னால் 2000 ஆண்டுகளுக்கு மாற்றப்படாமல் மாற்றப்பட முடியாமல் இருந்தது எனலாம்.

சரி, இனி அரிஸ்ரோற்றில் கண்ட பேரண்டத்தைப் பார்ப்போம். அவரது வாதத்தின்படி பூமியானது பேரண்டத்தின் மத்தியில் தான் இருக்க வேண்டும் என்றாகியது. பூமியானது கோளவடிவினது என்பதில் அரிஸ்ரோற்றில் மாறுபட்ட கருத்து எதனையும் கொண்டிருக்கவில்லை. பேரண்டத்தின் மத்தியில், மையத்தில் உள்ள இந்தப்பூமியானது ஒரு சீரான தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்றார் அரிஸ்ரோற்றில். கலப்படமான பொருட்களால் ஆன பூமியானது, காலத்திற்கு காலம் மாற்றமடையக் கூடியது என்று கூறினார். ஆனாலும் என்னதான் பூமியில் மாற்றங்கள் நிகழ்ந்தாலும், அது கோளவடிவினதே என்பது அவரது வாதம். பூமியை இவ்விதமாகக் கூறிய அரிஸ்ரோற்றில் வான்பரப்பினையும் தமது முறையில் விளங்கப்படுத்தினார்.

பைதகரசின் வழியே, பூமியின் மேலாக வானத்தில் சந்திரன், புதன், வெள்ளி, கதிரவன் (சூரியன்), செவ்வாய், வியாழன், சனி என்ற ஏழு வான்பொருட்களும் ஏழு வெவ்வேறான பளிங்குக் கோள ஓட்டில் இருக்கின்றன என நம்பினார். வெவ்வேறு தூரங்களில் உள்ள இந்த வான்பொருட்கள் வெவ்வேறு கதிகளில், மேற்குப்புறமாக அசைகின்றன (அதாவது அசைக்கப்படுகின்றன) என்பது அரிஸ்ரோற்றலின் விளக்கமாக இருந்தது எனலாம். இதனாலேயே சந்திரன் முற்றாகப் பூமியை வலம்வர 30 நாட்களும், கதிரவன் பூமியை வலம்வர (?) ஒரு வருடமும் மேலும் சனி சுற்றிவருவதற்கு இன்னமும் அதிக காலம் எடுக்கின்றது எனவும் கூறினார் அரிஸ்ரோற்றில்.

இந்த ஏழு வான்பொருட்களும் கோளவடிவினவை என்பதும் அரிஸ்ரோற்றலினால் காட்டப்பட்டது. இதற்கு கிரகணங்களின் வடிவினை ஆதாரமாகக் காட்டினார். இந்த ஏழு வான்பொருட்களும் பூமியை போலல்லாது, மாற்றமடையாது நிலையான வடிவுடையது என்றார் அரிஸ்ரோற்றில். அதன்படி இந்த வான்பொருட்கள் எல்லாம் (எட்டாவது பளிங்குக் கோளத்தில் பதிக்கப்பட்டிருந்த விண்மீன்கள் உட்பட) பூமியில் இல்லாத ஈதர் எனும் பதார்த்தத்தினால் ஆனவை என ஊகித்தார். வான்வெளியானது பூரணமான, பூமியை விட மிகப்பெரிய அளவில் இல்லாத ஒரு வானியல் பொறி அல்லது வானியல் இயந்திரம் என்பது அரிஸ்ரோற்றலின் கருத்து. அதுமாத்திரமல்ல, இந்த வான் அமைப்பானது முற்றிலுமே பௌதீக விதிகளுக்கு கட்டுப்பட்டு இயங்குகின்றது என்றார் அரிஸ்ரோற்றில். இவரைக் கடவுட் கொள்கைக்குப் புறம்பானவர் எனச் சிலர் கூறுவதும் இதனால்தானோ என்னவோ.

ஆனாலும் இவரது பேரண்ட அமைப்பானது சமயங்களினால் தத்தெடுக்கப்பட்டு பேரண்டமானது பௌதீக விதிகளினால் அல்ல, கடவுளின் ஆணைப்படியேதான் உள்ளது, இயங்குகிறது எனக் கூறப்பட்டது. அதற்கு ஏற்பதாக, அரிஸ்ரோற்றலின் பேரண்ட அமைப்பானது அமைந்துவிட்டது.

அடுத்த தடவையில் பேரண்டக்கதையின் அடுத்த நாயகனான தொலமி பற்றிப் பார்ப்போம்.



**- கனி -**

# வாழ்வெனும் எமது ஆன்மீக யாத்திரை

எனது ஆன்மீக யாத்திரைக்கு வழிகாட்டிட, இங்கு இப்போ நீ வாசித்துக் கொண்டிருப்பதைப் போன்ற புத்தகப் போதனைகளாலோ வேறு எவராலுமோ முடியவே முடியாது. எனது இதயத்து உள்ளுணர்வு தான் என்னை வழிநடத்தி செயற்பட வைக்க வேண்டும் என்பதை இன்று நான் நன்கு புரிந்து கொண்டேன்.

ஆமாம்! உனது மனது சேகரிக்கும் ஆன்மீகம் நிச்சயம் உன்னை ஒருபோதும் காப்பாற்றாது. வழக்கமாக பலமக்கள் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காக ஆன்மீகத்தை நாடுவதுண்டு. வெளிப்புற லௌகிகத்தைப் புரிந்து கொள்ளவும் ஆன்மீகத்தை அண்மிப்பதுண்டு. ஒரு கட்டுரை, ஒரு புத்தகம், ஒரு சொற்பொழிவு, ஓர் ஆராதனை, பூஜை போன்ற ஏதாவது ஒன்று உனது ஆன்மீகத் தேடலின் உந்துசக்தியாக இருக்கலாம். இதில் ஏதாவது ஒன்று உனது இதயத்தைத் தொட்டு, 'ஆமாம்' இது தான் எனது ஆன்மீகப் பாதை, என ஊக்குவித்திட நீ மேன்மேலும் ஆழமாக அதற்குள் அமிழ்ந்து ஊறி முன்னேறலாம். ஆனால், அரிவரி படிக்கும் பிள்ளைகள் வீடு கட்டி விளையாடும் மரத்துண்டுகள் போல இப்பஜனை, பூஜைகள் கொஞ்ச நாளைக்கு மட்டுமே மனநிறைவைத் தரும். பின் ஆன்மீக முன்னேற்றமில்லாத வெறும் அறிவுபூர்வமான அநுபவமாகி விடும் என்பது உண்மை.

அன்பானவர்களே! என் வாழ்வில் நான் கண்டறிந்த அநுபவபூர்வ உண்மை இது. இலங்கையின் மாத்தளையில் Hunugalla ஹுனுகல தேயிலைத் தோட்டத்தில், 1971 ஆம் ஆண்டு புத்தகங்கள் மூலம் ஆரம்பித்த எனது ஆன்மீகத் தேடல், சாயி பஜனையினால் வளர்ந்து சில ஆண்டுகளின் பின் தியானத்தின் மூலம் தான் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றது.



ஆகவே நாம் ஒவ்வொருவரும் சுயமாக, எமது தனிமனித ஆளுமை வளர்ச்சியைப் போஷித்து, எமது ஆன்மீகப் பாதையை நாமே எமக்குகந்த மாதிரி புதிதாக வெட்டி அமைத்துத் தான் முன்னேற வேண்டும். மற்றவரைப் பின்பற்றினால் தேக்கம் ஏற்படும். சுயமுயற்சி தான் முன்னேற்றம் தரும்.

உங்கள் விருப்பப்படி கோவிலுக்கோ, பஜனைக்கோ, தேவாலயத்திற்கோ நீங்கள் போக வேண்டாமென்று நான் இங்கு சொல்ல வரவில்லை. உங்கள் ஆன்மீகத்தைப் போஷித்திடும் நிகழ்வுகளுக்குப் போக வேண்டாம் என்றும் சொல்லவில்லை. ஆனால் இத்தகைய நிகழ்வுகளால் நீங்கள் சேகரிக்கும் அநுபவம் நிச்சயம் உங்களைக் காப்பாற்றிட முன்னேற்றப் போவதில்லை. ஆன்மீக வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்ற அறிவு வேறு, அதைச் செயற்படுத்துவது வேறு, இரண்டும் ஒன்றல்ல. வாசிப்பது அறிவைத் தருகின்றது. செயற்படுவது அநுபவத்தைத் தருகின்றது. ஆனால் உனது செயற்பாட்டு ஆன்மீக அநுபவம் தான் இறுதியில் உன்னைக் காப்பாற்றக் கைகொடுக்கும் என்பதைத் தெரிந்து கொள். உனக்கு ஆன்மீக நியமங்கள், கோட்பாடுகள் நன்கு தெரிந்திருந்தால் மட்டும் போதும் என நீ இன்றுவரை நம்பி இருந்திருக்கலாம். இன்று உனது ஆன்மீக அறிவை உனது இதயத்துள் புகுத்தி அதன் சொற்படி செயற்பட ஆரம்பி. மறந்து விடாதே. உனக்குக் கஷ்டமாயிருந்தால் இறைவனின் உதவி கேட்டு பிரார்த்தித்துக் கொள். நிச்சயம் உதவி வரும். வாழ்வில் உனது ஆன்மீக யாத்திரையின் பாதையை உனக்கு விருப்பமான மாதிரி நீயே புதிதாக வெட்டி அமைத்துக் கொள். பிறரைப் பின்பற்றி நீ செயற்பட வேண்டியதில்லை. எனது முயற்சியினால் மட்டுமே நான் முன்னேறலாம். என்னை முன்னேற்றக்கூடிய ஆன்மீகப் பாதையை, நானே புதிதாக கஷ்டப்பட்டு வெட்டி அமைத்திடுவேன் என இன்று கங்கணம் கட்டிக்கொள்கிறேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 130

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி


# கடன்... பணம்

கடன் பிரச்சினையில் மூழ்கித் தவிக்கிறீர்களா?

நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண நாடுங்கள்




**BANKRUPTCY** செய்து

கோடுத்தலும் ஆலோசனையும்

**LINE OF CREDIT**

**PERSONAL LOAN**

**DEPT CONSOLIDATION**

'Score' குறைவுக்கு கவலை வேண்டாம்

அழையுங்கள் - **416-317-9785**

# முரளியின் சுழல்ஜாலம் எங்கே மும்மூர்த்திகள்?

## விளையாட்டுத் தகவல்கள் 242

கொழும்பு ரெஸ்ரின் மோசமான தோல்வி, இந்திய அணிக்கு அவமானத்தை ஏற்படுத்தி உள்ளது. பேட்டிங், பவுலிங், பீல்டிங் என அனைத்திலும் சொதப்பிய இந்தியவீரர்கள் பரிதாப தோல்விக்கு வழிவகுத்தனர்.

இலங்கை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, மூன்று ரெஸ்ற் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் ரெஸ்ற் போட்டி கொழும்பில் நடந்தது. இப்போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியை பதிவு செய்தது. உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேன்களை உள்ளடக்கிய இந்திய அணி, இலங்கை மண்ணில் தடுமாறி உள்ளது. இத்தோல்விக்கு ஐந்து காரணங்கள் முக்கியமானவைகளாக அமைந்தன.

**அவை வருமாறு**

• இந்திய அணி வெற்றி பெற்ற ரெஸ்ற் போட்டிகளில் அணியில் கும்ளேவின் சுழற்பந்து வீச்சும் ஒரு முக்கிய காரணமாக அமையும். ஆனால் கொழும்பு ரெஸ்ரில் கும்ளே 120 ஓட்டங்களை இலங்கைக்கு விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. ரெஸ்ற் அரங்கில் 100 ஓட்டங்களுக்கு மேல் விட்டுக் கொடுத்து விக்கெட் வீழ்த்தாமல் இருப்பது கும்ளேவுக்கு இது ஐந்தாவது முறை. ஐந்தில் நான்கு போட்டிகளில் இந்திய அணி தோல்வி அடைந்துள்ளது.

• தோனி இல்லாத காரணத்தால், விக்கெட் கீப்பிங் வாய்ப்பு பெற்ற தினேஷ், கார்த்திக் சொதப்பினார். பலமுறை கேட்ச் வாய்ப்புகளை நழுவ விட்ட இவர், இலங்கை 600 ஓட்டங்கள் குவிக்க வழி வகுத்தார். தவிர, பேட்டிங்கில் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து வெறும் 9 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றம் அளித்தார்.

• இலங்கை வீரர்கள் வர்ணபுரா, சமரவீரா ஜெயவர்த்தனா, தில்ஷன் என நான்கு வீரர்கள் சதம் கடந்து அணிக்கு வலு சேர்த்தனர். இவர்களின் அபார ஆட்டத்தால் இலங்கை 600 ஓட்டங்களை எட்ட முடிந்தது. முதல் இன்னிங்சில் இலங்கை பதிவு செய்த மிகப் பெரிய இலக்கே இந்திய அணிக்கு பேரிடியாக அமைந்தது.

• இந்திய அணியின் மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் சச்சின் (27,12), கங்குலி (23,4), டிராவிட் (14,10) மூவரும் பெரும் ஏமாற்றம் அளித்தனர். இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து இவர்கள் எடுத்தது வெறும் 90 ஓட்டங்களே.

• தங்களது மாயாஜால சுழற்பந்துவீச்சில், இந்திய பேட்ஸ்மேன்களை நிலைகுலையச் செய்தது இலங்கையின் முரளிதரன், மெண்டிஸ் சுட்டணி. இவர்கள் 20க்கு 19விக்கெட்டுகளை வீழ்த்தி, இந்திய அணியின் தோல்விக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

**கடும் கண்டனம்** - இந்திய அணியின் தோல்விக்கு கண்டனம் தெரிவித்துள்ளார் கிரிக்கெட் போர்டு செயலர் நிரஞ்சன் ஷா. இவர் கூறுகையில், 'கொழும்பு ரெஸ்ரில் சச்சின், கங்குலி, டிராவிட், லட்சுமண் போன்ற சீனியர் வீரர்களின் செயல்பாடு அணிக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தி உள்ளது. இலங்கை தொடருக்கு இந்திய வீரர்கள் தீவிர பயிற்சி மேற்கொண்டு தான் தயாராயினர். இருப்பினும் மோசமான தோல்வியை சந்திக்க நேர்ந்து விட்டது. முதல் போட்டியின் தோல்விக்கு அடுத்த இரண்டு போட்டகளில் பதிலடி கொடுக்க வேண்டும். இந்திய சுழற்பந்து நேர்ந்து விட்டது. முதல் போட்டியின் தோல்விக்கு அடுத்த இரண்டு போட்டிகளில் பதிலடி கொடுக்க வேண்டும். இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள், இலங்கை சுழற்பந்து வீச்சாளர்களுக்கு நிகரான பந்து வீசுவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

முரளிதரன் மெண்டிஸ் சுழல் வித்தை காட்ட,

### புள்ளிவிபர பட்டியல்

முதல் இன்னிங்ஸ் இலங்கை 600 / 6 டிக்ளேர்
இந்தியா

காம்பிர்(கே) சமரவீரா(ப) முரளிதரன் 39(55)
சேவக்(கே) வர்ணபுரா (ப) குலசேகரா 25(16)
டிராவிட்(ப) மெண்டிஸ் 14(35)
சச்சின் (ப) முரளிதரன் 27(46)
கங்குலி (கே) குலசேகரா(ப) முரளிதரன் 23(57)
லட்சுமண்(ப) மெண்டிஸ் 56(118)
கார்த்திக்(கே) (ப) முரளிதரன் 9(16)
கும்ளே எல்.பி.டபிள்யு, (ப) மெண்டிஸ் 1(15)
ஹர்பஜன்(கே) வர்ணபுரா(ப) முரளிதரன் 9(9)
ஜாகிர் எல்.பி.டபிள்யு...(ப) மெண்டிஸ் 5(16)
இஷாந்த் அவுட் இல்லை 13(54)
உதிரிகள் 2
மொத்தம் (72.5 ஓவரில் ஆல் அவுட்) 223

விக்கெட் வீழ்ச்சி 1 36 (சேவக்), 2 79 (காம்பிர்) 3-79 டிராவிட், 4-123(சச்சின்), 5 -138 (கங்குலி), 6-147 (தினேஷ் கார்த்திக்), 7-170 (கும்ளே), 8-181 (ஹர்பஜன்), 9-188 (ஜாகிர்), 10-223 (லட்சுமண்).

பந்துவீச்சு, வாஸ் 5 -0-23-0, குலசேகரா 11-2-42-1, மெண்டிஸ் 27.5, 72-4 முரளிதரன் 2--4-84-5.

இரண்டாவது இன்னிங்ஸ் (பாலோ ஆன்)
இந்தியா

காம்பிர்(ஸ்டெ) பிரசன்னா(ப) முரளிதரன் 43(9)
சேவக் எல்.பி.டபிள்யு (ப) முரளிதரன் 13(17)
லட்சுமண் எல்.பி.டபிள்யு, (ப) மெண்டிஸ் 21(26)
சச்சின்(கே) தில்ஷன்(ப) முரளிதரன் 12(30)
டிராவிட்(கே) தில்ஷன்(ப) முரளிதரன் 12(30)
டிராவிட்(கே) வர்ணபிரா(ப) மெண்டிஸ் 10(30)
கங்குலி(கே) தில்ஷன் (ப) முரளிதரன் 4(12)
கார்த்திக்(கே) ஜெயவர்த்தனா (ப) முரளிதரன் 0(6)
கும்ளே(ப) முரளிதரன் 12(24)
ஹர்பஜன்(ப) மெண்டிஸ் 15(28)
ஜாகிர்(ப) மெண்டிஸ் 15(28)
இஷாந்த் அவுட் இல்லை 5(1)
உதிரிகள் 0
மொத்தம் (45 ஓவரில் ஆல் அவுட்) 138
விக்கெட் வீழ்ச்சி 1.25 (சேவக்) 2-53 (லட்சுமண்), 3-82 (சச்சின்), 4-95 (காம்பிர்), 5-103 (கங்குலி), 6-103 (டிராவிட்), 7-103 (கார்த்திக்), 8-120 (கும்ளே), 9-133 (ஜாகிர்), 10-138 (ஹர்பஜன்)

பந்துவீச்சு, வாஸ் 5-0-27-0, குலசேகரா 9-3-25-0, மெண்டிஸ் 18-3-60-4, முரளிதரன் 13-3-26-6.

கொழும்பு ரெஸ்ரில் இந்திய அணி ஒரு இன்னிங்ஸ் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. சச்சின் டிராவிட், கங்குலி உள்ளிட்ட அனுபவ பேட்ஸ்மேன்கள் இரண்டாவது இன்னிங்சிலும் சொப்பினர். அசத்தல் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் 1 -0 என முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ரெஸ்ற் தொடரில் விளையாடி வருகிறது. முதல் ரெஸ்ற் போட்டி கொழும்பில் நடந்தது. முதல் இன்னிங்சில் இலங்கை 6விக்கெட் இழப்புக்கு 600 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆடிய இந்திய அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்திருந்தது. லட்சுமண் (19), கும்ளே (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

**'பாலோ - ஆன்'** இந்நிலையில் நான்காம் நாள் ஆட்டம் துவங்கியது. ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் கும்ளே (1) மெண்டிஸ் பந்து வீச்சில் வெளியேறினார். அடுத்து வந்த ஹர்பஜன் (9) முரளியிடம் விக்கெட் பறிகொடுத் தார். ஜாகிரும் (5) நிலைக்கவில்லை. லட்சுமண் ஆறுதல். ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்தாலும், இஷாந்த் சர்மா உதவியுடன் ரெஸ்ற் அரங்கில் 34வது அரை சதத்தை கடந்தார். லட்சமண் 56 ஓட்டங்கள் சேர்த்த லட்சுமண், மெண்டிஸ் பந்து வீச்சில் கிளீன் போல்டாக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த இந்திய அணி 223 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 'பாலோ ஆன்' பெற்றது. இலங்கை தரப்பில் முரளிதரன் 5, மெண்டிஸ் 4விக்கெட் கைப்பற்றினர்.

**மீண்டும் சறுக்கல்** - 'பாலோ ஆன்' பெற்ற அணி, இரண்டாவது இன்னிங்சை துவக்கியது. இந்த முறை வெகுவிரைவாகவே சுழற்பந்து வீச்சை கையில் எடுத்தார். இலங்கை அணித்தலைவர் ஜெயவர்த்தனா. 13 ஓட்டங்கள் எடுத்த சேவக், முரளிதரன் சுழலில் வெளியேறி மோசமான துவக்கம் ஏற்படுத்திக் கொடுத்தார். அடுத்த வந்த அனுபவ வீரர் லட்சுமனும் (21) பெரிதாக கைகொடுக்கவில்லை.

**'ரொப் 3' தடுமாற்றம்** - துவக்கம் தடுமாறிய நிலையில், மிடில் ஆர்டரில் அணியை காப்பாற்ற வேண்டிய 'ரொப் 3, வீரர்களான சச்சின், டிராவிட், கங்குலி இம்முறையும் பெரும் ஏமாற்றம் அளித்தனர். தனது சுழல் ஜாலத்தால், மீண்டும் ஒருமுறை சச்சின் (12), கங்குலி (4) இருவரையும் சொற்பரண்களுக்கு வெளியேற்றினார் முரளிதரன். மென்டிசிடம் சரணடைய இந்தியாவின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியானது. விக்கெட் வீழ்சிக்கு இடையே ஆறுதல் அளித்த காம்பிர் 49 ஓட்டங்கள் சேர்த்து அவுட்டானார்.

இனிங்ஸ் தோல்வி - பின்வரிசையில் கும்ளோ (12) முரளி பந்து வீச்சில் போல்ட் ஆனார். மென்டிஸ் தனது பங்குக்கு ஹர்பஜன் (15) ஜாகிர் (3) இருவரின் ஸ்ரெம்பைத் தகர்க்க இந்திய அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாவது இனிங்சில் இந்திய அணி 138 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. இதையடுத்து ஒரு இன்னிங்ஸ், 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து முரளிதரன் 11, மெண்டிஸ் 8 விக்கெட் கைப்பற்றி அசத்தினர்.

இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரெஸ்ற் தொடரில் இலங்கை 1 - 0 என முன்னிலை பெற்றுள்ளது. இவ்விரு அணி களுக்கு இடையிலான இரண்டாவது ரெஸ்ற் போட்டி வரும் 31ஆம் திகதி காலையில் துவங்குகிறது.

**சூப்பர் வெற்றி** - அதிக வெற்றி வித்தியாசத்தின் அடிப்படையில், கொழும்பு ரெஸ்ரின் வெற்றி இலங்கைக்கு மூன்றாவது இடத்தை பெற்று தந்தது. இதற்கு முன் 2003 - 04 ஆம் ஆண்டு ஜிம்பாப்வே அணிக்கு எதிராக விளையாடிய முதல் (இன்னிங்ஸ், 254 ஓட்டங்கள்) மற்றும் இரண்டாவது (இன்னிங்ஸ், 240 ஓட்டங்கள்) ரெஸ்ற் போட்டிகளில் இலங்கை தனது சிறப்பான வெற்றிகளை பதிவு செய்திருந்தது.

• இந்தியாவுக்கு எதிராக இலங்கையின் சிறப்பான வெற்றியும் இதுவே. இதற்கு முன் 2001 - 02 ஆம் ஆண்டு இலங்கை இன்னிங்ஸ் 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியிருந்தது.

• இந்தியாவுக்கு எதிராக இலங்கை நான்காவது ரெஸ்ற் வெற்றியை நேற்று பதிவு செய்தது. இதுவரை இந்தியாவுடன் 27 ரெஸ்ற் போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி, 4 வெற்றி 10 தோல்வி 13 டிராவை பதிவு செய்துள்ளது.

**19 வது முறை** - கொழும்பு ரெஸ்ரில், 11 விக்கெட்டுகள் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வித்திட்ட இலங்கையின் முத்தையா முரளிதரன் 19வது முறையாக ஆட்ட நாயகன் விருதை நேற்று கைப்பற்றினார். நேற்று இரண்டு இன்னிங்சிலும் (5,6) 5 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் 65 முறை ரெஸ்ற் அரங்கில் 5 விக்கெட் வீழ்த்தி அசத்தியுள்ளார்.

• கொழும்பு ரெஸ்ரில் இந்திய அணியை சுழற்பந்து வீச்சில் நிலைகுலையச் செய்தது முரளிதரன் (11 விக்), மெண்டிஸ் (8விக்) கூட்டணி. இவர்கள் மொத்தம் 19 விக்கெட்டுகள் கைப்பற்றி அணிக்கு சூப்பர் வெற்றி தேடிதந்தனர்.

**மெண்டிஸ் சாதனை** - இந்தியாவுக்கு எதிராக 8 விக்கெட்டுகள் கைப்பற்றி, பங்கேற்ற முதல் ரெஸ்ற் போட்டியிலேயே அதிக விக்கெட் வீழ்த்தி இலங்கை வீரர் என்ற சாதனையை படைத்தார் அஜந்தா மெண்டிஸ். இதற்கு முன் 1985 - 86 ஆம் ஆண்டு இலங்கை வீரர் குருப்புராச்சி பாகிஸ்தானுக்கு எதிராக 7 விக்கெட் வீழ்த்தியதே சிறப்பான பந்து வீச்சாக இருந்தது.

• இலங்கை அணிக்கு எதிராக 10வது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற பெருமையை இந்தியாவின் லட்சுமண் - இஷாந்த் சர்மா ஜோடி பெற்றது. இந்த ஜோடி முதல் இன்னிங்சில் 35 ஓட்டங்கள் சேர்த்தது. இதற்கு முன் 2001 - 02 ஆம் ஆண்டு ஜாகிர் கான், வெங்கடேஷ் பிரசாத் ஜோடி இலங்கை அணிக்கு எதிராக 30 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

### ICC CHAMPION TROPHY
### *PAKISTAN 2008*

சாம்பியன்ஸ் டிராபி தொடரை சர்ச்சைக்குரிய செப், 11இல் துவங்குவதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதையடுத்து ஒருநாள் தாமத-மாக செப், 12 இல் துவங்கும் என தெரிகிறது.

வரும் செப்டம்பரில் பாகிஸ்தானில் சாம்பியன்ஸ் டிராபி (மினி உலக கோப்பை) தொடர் நடக்க உள்ளது. பாதுகாப்பு பிரச்சினைகளை கடந்து இத்தொடரை நடத்த ஐ.சி.சி அனுமதி அளித்தது. இந்த மகிழ்ச்சியில் இருந்த பாகிஸ்தானுக்கு இன்னொரு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இப்போட்டி செப், 11ம் திகதி துவங்க இருந்தது. இந்த நாளில் தான் 2001 இல் அமெரிக்காவின் இரட்டை கோபுரம் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டது. எனவே துவங்கும் நாள் சரியில்லை என ஐ.சி.சி உறுப்பினர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். இதையடுத்து ஒரு நாள் தாமதமாக செப், 12 இல் போட்டி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கவலை இல்லை** - இதற்கிடையே சாம்பியன்ஸ் டிராபி தொடரிலிருந்து வீரர்கள் விலகுவதைப் பற்றி தங்களுக்கு கவலையில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு (பி.சி.பி) தெரிவித்துள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**



**எஸ். கணேஷ்**

# அடமானக்கடன் கொடுப்பதில் இறுக்கம்

அரசின் மேலதிக சட்டங்களினால் அடமானக்கடன் பெறுவதில் மேலதிக நெருக்கடி ஏற்படலாம். அமெரிக்காவில் அண்மைக் காலங்களில் நடந்துவரும் வீட்டின் விலையின் தொடர்ச்சியான இறக்கம், நிதிநிறுவனங்களால் பொறுப்பேற்று விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புகள் போன்றவை கனடிய நிதிநிறுவனங்களின் மிகக்கடுமையாக நடந்து கொள்வதற்கு காரணமாகக் கொள்ளலாம். அமெரிக்காவில் வீட்டின் விலையின் இறக்கம் தொடர்ச்சியாக ஏற்பட்டே வருகின்றது. எப்பொழுது இந்த இறக்கம் நிற்கும் என்பது இதுவரை எவரினாலும் கூறமுடியாமல் உள்ளது. ஆனால் தொடர்ச்சியாக இறக்கம் ஏற்படலாம் என்பதில் சகல பொருளாதார வல்லுனர்களும் ஒத்துள்ளார்கள்.

இந்த நிலைமை கனடாவில் ஏற்படாமல் இருப்பதற்காக கனடிய அரசும், நிதி நிறுவனங்களும் மிகவும் கவனமாக, நிதானமாக செயல்படுகின்றன. இதன் ஏற்பாடாக 40 வருடங்களில் அடமானத்தை திருப்பி கொடுப்பதாக இருந்த காலத்தை (Amortization Period) ஐ 35 வருடங்களாக குறைக்கப்பட உள்ளது. அத்துடன் முதலீடு இன்றி (Zero Downpayment) வாங்கக்கூடியதாக இருந்த நடைமுறையையும் நிறுத்தப்பட இருக்கின்றது. இந்த இரு இறுக்கமான நிலைப்பாடுகளும் ஒக்ரோபர் 15, 2008 இல் இலிருந்து நடைமுறைக்கு வருகின்றன. இந்த ஏற்பாட்டால் பூச்சியத்துடனான முதலீட்டுடன் வாங்க இருப்பவர்கள் ஒக்ரோபர் 15, இற்கும் முன்பாக வாங்க எத்தனிப்பார்கள், அதற்கு முன்பாக வீடு விற்பனையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும்.

முக்கியமாக கல்கறி, ரொறொன்ரோ போன்ற நகரங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளினால் நீண்டகால (40 வருட) கடனைத் திருப்பி கொடுக்கும் காலம் தேவைப்படலாம். இதனால் மாதாந்த கட்டுப்பணம் கணிசமான அளவு குறையும். இதுவும் உடனடியாக வீடு வாங்குவதற்கு சில வாங்குனர்களை தூண்டும். இதனால் ஒக்ரோபர் 15, 2008 வரை விற்பனையில் அதிகரிப்பு ஏற்பட்டு பிற்பாடு குறையும் என எதிர்பார்க்கலாம். இருந்தும், சில பொருளாதார ஆலோசகர்கள், கனடிய அரசு காலம் தாழ்த்தி இந்த முடிவை எடுத்துள்ளதாக குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இதுவரை கனடிய வீட்டுச்சந்தை ஓரளவு ஆரோக்கியமானதாகவே காணப்படுகின்றது.

போதியளவு முதலீடு இல்லாதவர்களை வீடு வாங்குவதனை ஊக்குவிற்பதற்காக அடமான கடனிற்குரிய காப்புறுதி (Mortgage Insurnce) 1954 ஆம் ஆண்டு முதன் முறையாக CMHC இனால் அறிமுகப்படுத்தப்பட்டது. முன்பு 25% முதலீடு செய்யும்போது இந்தக்காப்புறுதி தேவையில்லை. இப்பொழுது 20%



முதலீட்டுடன் காப்புறுதி இல்லாமல் வீடு வாங்கலாம்.

இப்பொழுது மூன்று நிறுவனங்கள் Genworth Financial Canada, AIG United Guaranteed Canada, மற்றும் The PMI Group Canada என்பன CMHC உடன் போட்டி போட்டு காப்புறுதியை செய்கின்றன. அரசாங்கம் CMHC உடன் போட்டி போட்டு காப்புறுதியை செய்கின்றன. அரசாங்கம் CMHC இன் 100% இற்கான கடனிற்கும் மற்றைய நிறுவனங்களின் கடனின் 90%இற்கும் உத்தரவாதமளிக்கின்றது.

குறிப்பு - செவ்வாய் யூலை 15, 2008 கனடிய மத்தியவங்கி வட்டிவீதத்தினால் எதுவித மாற்றத்தையும் செய்யாமல் விட்டுள்ளது. இப்பொழுது மத்தியவங்கிகளின் வட்டிவீதம் 3.25% ஆகவும் முதன்மை வட்டிவீதம் 4.75% ஆகவும் காணப்படுகின்றது. இதேநேரத்தில் இந்திய மத்திய வங்கியின் வட்டிவீதம் 6.0% ஆகவும் காணப்படுகிறது.

இன்று உலகநாடுகளில் ஆஸ்தி விற்பனையில் இறக்கம் காணப்படுவது அனேகரும் அறிந்ததே. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் 2006 இல் ஏற்பட்ட அதிகூடிய வீட்டு விலையில் இன்றுவரை கிட்டத்தட்ட 20% சராசரி இறக்கம் ஏற்பட்டுள்ளது. சில மாநிலங்களில் அதிகமான விலை இறக்கம் ஏற்பட்ட போதும் சில மாநிலங்களில் குறைவான இறக்கமும் ஏற்பட்டுள்ளது. மேலும் ஐக்கிய இராச்சியத்தில் (United Kingdom) 6% சராசரி இறக்கமும் காணப்படுகின்றது. இருந்தும் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (Toronto Real Estate Board பகுதியில்) வீட்டின் விலை அதிகரித்தே உள்ளது. இதுவரை ரொறொன்ரோ பெரும்பாகத்தில் இப்பொழுதுள்ள சராசரி விலையே வீட்டுச் சரித்திரத்தில் அதிகூடிய சராசரி விலையாகக் காணப்படுகின்றது. இப்பொழுது ரொறொன்ரோ வில் வீட்டின் சராசரி விலை $379,072 ஆகும்.

இந்த பெறுமதி முன்னைய காலத்தில் (1989) உள்ள அதிகூடிய விலையை விட கிட்டத்தட்ட $100,000 அதிகமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக ரொறொன்ரோப் பகுதியில் (416) வீட்டின் சராசரி விலை $419,199 ஆகக்காணப்படுகின்றது. அதாவது 2008 இல் முதல் ஆறு மாதங்களில் சராசரி வீட்டு விலை முந்திய ஆண்டை விட அதிகரித்துள்ளது. இதே நிலைமை தொடரும் என்று கூறமுடியாது. இருந்தும் பங்குச் சந்தையில் ஏற்பட்ட விலை இறக்கம் முதலீட்டாளர்களை வீட்டுச்சந்தையில் முதலிட ஊக்குவிப்பதுபோல தோன்றுகின்றது.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 279**


ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**Business Space for Sale / Lease**
*Suitable for Optician / Optometrist / Air Travels / Restaurant ( Dine - In / Take Out) Dentist, Chiropractor & much more... Rent starts $1100. Sale Price starts $144,900 Location: GTA Square (Finch / Middlefield*

**Brand New Condo. for sale**
- Kennedy & Denison
- 2 bedroom
- about 1000 sqft
- Price $289,900

**Condo. for sale**
- Neilson & Mclevin
- 2 bedroom
- corner unit
- One of largest
- 2 parking
- Asking $169,900

**Condo. for sale**
- Pharmacy & Finch
- 2 bedrooms
- Corner Unit
- Renovated
- $134, 900

**Townhouse for sale**
- Neilson & Sheppard
- 5 bedrooms
- Walk out
- $164, 900

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# நாடகமேதை சேக்ஸ்பியர்

கடந்த இதழ் தொடர்ச்சி...


***The Lord Chamberlain's Men***

1594ல் நாடகங்கள் மீண்டும் அரங்கேறத் தொடங்கியபோது இரிச்சட் பேபேஜ் தலைமையிலான The Lord Chamberlain's Men என்ற கம்பனியில் சேக்ஸ்பியர் சேர்ந்து கொண்டார். நடிப்பாலும் எழுத்தாலும் அவருக்கு வருவாய் பெருகியது. வருவாயை நாடகக் கம்பனிகளில் இட்டு அவற்றிற் பங்காளராகினார். காணி நிலங்களிலும் முதலீடுசெய்து செல்வந்தரானார். அவரது நாடகங்களின் உரிமையை அவற்றை மேடையேற்றிய கம்பனிகளே வைத்துக்கொண்டன.

சேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றை மேடை யேற்றிய பெருமை The Lord Chamberlain's Men என்ற கம்பனிக்கே உரியது. இக்கம்பனி 1599ல் குளோப் நாடக மண்டபத்தை தேம்ஸ் நதியின் தென்கரையில் சுவான் நகரத்துக்கு அண்மையிற் கட்டிமுடித்தது. மண்டபம் 3000 பார்வையாளரைக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பிரமாண்டமாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. சேக்ஸ்பியரின் பெயர்பெற்ற ஹம்லட், மன்னன் லியர் போன்ற துன்பியல் நாடகங்கள் இங்குதான் அரங்கேற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று நம்பப்படுகின்றது.

## அரச ஆதரவு

சேக்ஸ்பியர் எலிசபெத் மகாராணியை மகிழ்விக்கவே பெரிதும் எழுதினார். எலிசபெத் மகாராணி 1558 - 1603க்கு இடைப்பட்ட 44 ஆண்டுகள் இங்கிலாந்தையும் அயர்லாந்தையும் ஆண்டவர். பெயரளவில் பிரான்சுக்கும் இராணியாக இருந்தவர். திருமணம் செய்யாததால் கன்னிராணி' என்று போற்றப்பட்டவர். கலைவளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு அளித்தவர்.



இவர் 1603ல் அமரத்துவமாக முதலாம் யேம்ஸ் அரசரானார். அதன்பின் அவருக்காகவும் நாடகங்கள் எழுதப்பட்டன. இரிச்சட் பேபேஜ் என்பாருக்கும் அவரது கம்பனிக்கும் மன்னர் அமோக ஆதரவு அளித்தார். அதனால் இரிச்சட் தனது The Lord Chamberlain's Men என்ற நாடகக் குழுவின் பெயரை The King's Men என்று மாற்றினார். அதனைத் தொடர்ந்து அது யேம்ஸ் மன்னரை மகிழ்விக்கும் தலைமை நாடகக் குழுவாயிற்று.

## படைப்புகள்

சேக்ஸ்பியர் 1595ல் நாடகங்கள் எழுதத் தொடங்கினார். தொடர்ந்து ஏறத்தாழ 20 வருடங்களில் அவர் எழுதிய நாடகங்களின் பெயர்கள் வருமாறு:

| இன்பியல் | துன்பியல் | வரலாறு |
|---|---|---|
| All's Well That Ends Well | Antony and Cleopatra | King Edward III |
| As You Like It | Cardenio | King Henry IV, Part I |
| The Comedy of Errors | Coriolanus | King Henry IV, Part II |
| Cymbeline | Hamlet, Prince of Denmark | King Henry V |
| Love's Labour's Lost | Julius Caesar | King Henry VI, Part I |
| Measure for Measure | King Lear | King Henry VI, Part II |
| The Merchant of Venice | Macbeth | King Henry VI, Part III |
| The Merry Wives of Windsor | Othello, Moor of Venice | King Henry VIII |
| A Midsummer Night's Dream | Romeo and Juliet | King John |
| Much Ado About Nothing | Timon of Athens | King Richard II |
| Pericles, Prince of Tyre | Titus Andronicus | King Richard III |
| The Taming of the Shrew | | Sir Thomas More |
| The Tempest | | |
| Troilus and Cressida | | |
| welfth Night | | |
| The Two Gentlemen of Verona | | |
| The Two Noble Kinsmen | | |
| The Winter's Tale | | |

சேக்ஸ்பியரின் நாடகங்களின் தொகுப்பு ஒன்று முதன்முதலாக 1623ல் வெளியிடப் பெற்றது. அதில் Pericles, The Two Noble Kinsmen என்னும் இரண்டையுந் தவிர மற்றைய எல்லா நாடகங்களும் இடம்பெற்றிருந்தன.

சேக்ஸ்பியர் களப்பிரிவுகளோ காட்சிப் பிரிவுகளோ குறிப்பிட்டுத் தமது நாடகங்களை எழுதவில்லை. அவரது நாடகங்களைக் களங்களாகப் பிரித்தும் காட்சிகளாக வகுத்தும் நடிகர் வருகை, செல்கை முதலிய விவரங்களைக் குறிப்பிட்டும் முதன்முதலில் 1709ல் பதிப்பித்தவர் நிக்கலஸ் றோ (Nicholas Rowe) என்பவரே.

**கவிஞர் வி. கந்தவனம்**




# Credit Recovery Point

**உங்கள் கடன் (Credit) பிரச்சினையால் வாழ்க்கையில் ஏற்படும் சுமையை நாங்கள் இறக்கி விடுகின்றோம்.**

**உங்களுடன் தமிழ்மொழியில் உரையாடி உங்கள் துன்பத்தை துரத்தி விடுகின்றோம்.**

**சகல ஆலோசனைகளும் இலவசம்**

**உங்களுக்கு உடன் உதவிட நாம் தயார்!**
**நீங்கள் தயாரா? எங்களது விசேடமான உதவிகள்**

**வங்குறோத்து (Bankruptcy) அடையாமல் உங்கள் கடனை இலகுவழியில் தீர்க்க சட்டதிட்டங்களுக்கு அமைய வழிமுறைகளைக் கையாளுதல்.**

**அழியாச்சொத்தை வைத்துக் கொண்டு மற்றைய கடன்களிலிருந்து விடுபட உதவிபுரிதல்**

**நீங்கள் கடன் பெற்ற நிறுவனத்தின் தொலைபேசி அழைப்புகளால் உங்களை மனவழுத்தலுக்கு செல்லாமல் தவிர்த்தல்**

**உங்கள் மேல் சட்ட நடவடிக்கையெடுத்து உங்கள் வருமானத்தை இடைநிறுத்துவதை வென்றெடுத்தல்**

**உங்கள் பல கடன்களை ஒன்றாக்கி மாதாமாதம் சிறு தொகை கட்ட ஒழுங்கு செய்தல் மேலும் கூடுதலான வட்டியை நிவர்த்தி செய்தல்**

**உங்கள் கடன் அறிக்கையில் (Credit Report) உள்ள பழைய தகவல்கள்/தவறுகளையகற்றிட உதவிபுரிதல்**

**மீண்டும் நீங்கள் கடன் பெற வழிசமைத்தல்**

**CREDIT RECOVERY POINT**

**WE PROVIDE FREE & PROFESSIONAL ADVISE IN TAMIL & ENGLISH**

**We are the Pioneers of credit Recovery for our Community. Others Imitate we Create.**

**OUR SPECIAL SERVICE**

**MORTGAGES - 1st & 2nd (Bank & Private)**
**Commercial Mortgages - 1st & 2nd ( Bank & Private)**
**Refinancing & Consolidation ( Bank & Private)**
**Mortgage Renewal - Real Estate Needs**
**Buy and Sell Homes & Investment Properties**
**Line of Credit & Credit Cards**

**BANKRUPTCY ADVICE - How to avoid**
**Consumer proposal & Credit Counseling advice**
**Credit Repair - Credit Rehabilitation**

**VARIOUS IMMIGRATION MATTERS**
**Legal Advice - Criminal, Civil & Family Matters**
**CRA - Revenue Canada Tax Issues**
**OSAP - Student Loans Matters**
**Traffic Violations - Criminal & HWY Traffic Act**

Apex Creation-416-297-0707

**www.crpoint.ca** **CR Point**

**Tel : 416-412-6363**
**Cell : 416-856-5154**
**Saba Inthiran**
**Financial Advisor**
**Fax : 416-412-1206**
**5200 Finch Ave. East, Suite 300, Scarborough, ON.**
Email : crpoint300@gmail.com

**ALL CONSULTATIONS ARE FREE**

# வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**







**$689,000**
Brand New Branden Yorkwood Home , Never Lived In! This House Is Appox. 4000 Sq Ft. Lots Of Upgrades, Hardwood Floors In Family, Living And Dining Room, And Hardwood Staircase.

**Barondale/Hurontario**



**$319,900**
Semi Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, Many Upgrades Including Main Floor Hardwood & Ceramics

**Mavis/401/Sombrero**



**$415,900**
Semi Detached 2 story, Bed rooms 4, Washrooms 3, Approx 2200 Sq.Ft.Brick , Double Ebtry Doors

**McCowan / Eglinton**



**$162,500**
Cnddo Apartment, Bed rooms 2+1, Washrooms 2 Split Bedrooms - Balcony - Ensuite Laundry

**Denison/Middlefield**



**$284,900**
2 Story, Bedrooms 3, Washrooms 2 Well Maintained Home 1100 Sq Ft Plus Fin Bsmt, Cres Location, Walk To Plaza.

**Markham/Ellesmere**




**$289,000**
Detached Bungalow 2 Story, Bedrooms 3+1, Washrooms 2 Very Convenient Location. Separate Entrance, Close To All Amenities

**Morningside/Staines**



**$294,000**
Twnhouse 2 Story, Bed rooms 3, Washrooms 2 Spacious 2 Yr. New Mattamy Built Freehold Townhouse With Sep. Ent.

**Rossland & Salem**



**$299,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3 Main Floor Family Room With Gas Fireplace- Eat-In Gourmet Kitchen With Breakfast Bar

**Markham/Steeles**



**$310,000**
Townehouse 3storyt, Bed rooms 3+1, Washrooms 3 Absolutely Beautiful Townhouse With Quality Upgrades. $$$ In Upgrades,

**Middlefield/Denison**



**$339,900**
2 Story, Bedrooms 3, Washrooms 2 Demand Area Approximately 11 Years Old, Well Maintained, Large Enclosed Front Porch,

**Highglen/Middlefield**



**$340,000**
2 Story, Bedrooms 3, Washrooms 3, Close To All Amenities. Steps To Public And High Schools.Impressive Front Porch

**Markham Rd/14 Ave**



**$349,000**
2 Story, Bed rooms 3, Washrooms 3, Extra Wide Driveway, With Flower Garden At Entrance.Near Transit, Go Trains, 407, Schools, Parks,

**Passmore/Markham**




**$354,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 2,All Brick 3 Bedroom Brookside House In A Family Neighborhood.Walk To Ttc, Park, School

**Markham/Buroak**



**$360,000**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3 Oak Stair Case,Gas Fireplace In Family Rm,Access From Garage To Home,

**Steeles / Markham**




**$369,900**
2 Story, Bedrooms 4+2 Washrooms 4, Newer Hardwood Floor, Newer Roof, 2045 Sq Ft Plus Finished Bsmt With Sep Ent

**Sunny Meadow/Sandalwood**



**$379,888**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Just Under 1 Yr. Old. Gorgeous, Fully Upgraded Det. Home. Shows Like A Model.

**Sale Of Business**



**$390,000**
New Look Petro Canada Located On A Busy Hwy 89, Near Honda Plant, Net Income 160,000 Per Year

**Mccowan/Highglen**



**$399,900**
link 2 Story, Bedrooms 4+1, Washrooms 4, Approx 2000 Sq Ft Plus Brand New Never Lived In Bsmt Apt With Sep Ent

**Sheppard/Meadowvale**



**$424,900**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 Great Location!Corner Lot!Oak Hrd Wood Stairs W/Oak Pickets Railing

**Finch/Staines**



**$429,900**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 Over 2452 Sqft. Hardwood On Main Floor. Separate Entrance To Basement

**Bur Oak/ Markham**



**$474,900**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 4 Absolutely Fabulous New Home In A High Dem. Fully Upgraded

**Kennedy/14th Ave.**



**$669,000**
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 Green Park Quality Home. Enclosed Front Porch. Double Door.

**Kennedy/14th**



**$1,380,000**
Detached 2 Story, Bed rooms 5+1, Washrooms 3 Builder As Former Owner. Perfect Design With Best Quality Materials


RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7


**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# உடல் நிலை பாதிப்பால் தொழில் வருமானம் இழந்தவர்களுக்குரிய காப்புறுதி திட்டம்

# வினா விடை தொடர் - 24 -

**வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு உடல் காயம் அடைந்த ஒருவர் தமது வாகன காப்புறுதி திட்டத்தின் ஒரு பிரிவான "மருத்துவ, புனர்வாழ்வு, தாதிகள் பராமரிப்பு நிவாரணம்"**

(Medical, Rehabilitation & Attendant Care Benefit) **என்றால் என்ன?**

**இப்பிரிவில் இருந்து பாதிக்கப்பட்ட ஒருவர் எந்த நிலை வரை நிவாரணம் பெற உரித்துடையவர் ஆவார்?**

வாகன விபத்தில் உடல் காயமுற்ற ஒருவர் மட்டும் வாகன காப்புறுதியின் இந்த பிரிவில் இருந்து பெறும் நிவாரண சலுகைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன -

1. **மருத்துவ நிவாரணம்** (Medical Benefit)
வாகன விபத்தில் காயமடைந்த ஒருவர் தமக்கு ஏற்பட்ட உடல் காயங்கள் காரணமாக உருவாகும் மாகாண மருத்துவ காப்புறுதி திட்ட கொடுப்பனவுகளுக்குள் இயங்காத மருத்துவ செலவுகளுக்கு ஒரு நியாயமான, கணிசமான நிவாரணத்தினை தமது வாகன காப்புறுதியில் இருந்து பெற்று தொடர்ந்து பெற்று கொள்ளலாம். அவையாவன!


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


a) Medical, Surgical, Dental, Optometric, Hospital, Nursing, Ambulance, Audiometric & Speech - Language pathology Services.
மருத்துவ, சத்திரசிகிச்சை, பல் சிகிச்சை, கண் சிகிச்சை, வைத்தியசாலை, தாதிகள் பராமரிப்பு, அம்புலன்ஸ் செலவுகள், குரல்வளங்களில் ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கும் சேவைகள் யாவற்றுக்கும் ஏற்படும் செலவுகள்.

b) Chiropractic, Psychological, Occupational therapy, Physiotherapy services
நரம்பியல், உளவியல், மனித ஆற்றல் திறமைகளை மீள கொண்டு வரும் பயிற்சிகள், உடல் பயிற்சிகள் ஆகியவற்றுக்கான செலவுகள்

c) Medication - மருத்துவ செலவுகள்

e) Dentures & Other Dental Services - பற்சிகிச்சைக்கும், பல் சம்பந்தமான செலவுகள்

f) Hearing Aids, wheel charis or other mobility devices, prostheses, orthotics, & other assistive devices
காது கேட்கும் உதவிக் கருவிகள், சக்கரநாற்காலி நடக்க உதவும் உபகரணங்கள், செயற்கையாக பொருத்தப்பட்ட உடலின் பாகங்கள் மற்றும் உடல் இயங்க வைக்கும் செயற்கை உடல் அமைப்புகள்.

g) Transportation for the insured person and treatment sessions, including transportation for an aid or attendant
சிகிச்சைக்காக போய்வரும் போக்குவரத்து செலவுகளும், உதவுகின்றவருக்குரிய போக்குவரத்து செலவுகள்.

h) Other goods & services of a medical natu-ral that the insured person requires
காயமடைந்தவருக்கு தேவையான ஏனைய மருத்துவ செலவுகள்.

மேற்குறிப்பிட்ட செலவுகளுக்கு உரிய நிவாரணங்கள் வாகன காப்புறுதியில் இருந்து உடல் காயமடைந்தவர் பெற்று கொள்ளலாம்.

**புனர்வாழ்வு சலுகைகள்**
***(Rehabilitation Benefits)***

வாகன விபத்தில் உடல்காயம் அடைந்த ஒருவர் இவ் உடல் காயம் காரணமாக அல்லது இவ் உடல் காயத்திலிருந்து ஓரளவு மீட்சி பெற்ற பின்பும் சில நேரங்களில் தொடர்ந்து தொழில் செய்ய முடியாத அளவுக்கு அல்லது குடும்ப வாழ்வில் இயங்க முடியாத அளவுக்கு பாதிப்புகளை எதிர்கொள்ளலாம். இந்த நிலையில் இருந்து மீள்வதற்காக இவருக்கு புனர்வாழ்வுக்குரிய பல்வேறு வகையான பயிற்சி நெறி திட்டங்கள் தேவைப்படலாம். இப்புனர்வாழ்வுக்குரிய பயிற்சி நெறி திட்டங்களுக்குரிய செலவுகளை வாகன காப்புறுதி திட்டத்தில் இருந்து பாதிக்கப்பட்டவர் பெற்று கொள்ளலாம்.

விபத்து நடந்த நாளில் இருந்து பத்து வருடங்களுக்கு இந் நிவாரணம் சுமார் $100,000 டொலர் வழங்குவார்கள். கடுமையான மீள முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தால் ஒரு மில்லியன் டொலர் வரை பகுதி பகுதியாக இப்பிரிவில் இருந்து நிவாரணம் பெறலாம்.

**மருத்துவ தாதிகள் பராமரிப்பு நிவாரணம்**
***(Attendant Care Benefit)***

வாகன விபத்தில் உடல் காயமுற்றவர் வீட்டில் அல்லது நோயாளிகள் இல்லத்தில் தங்கி யிருக்கும்போது இவர்களை தொடர்ந்து பராமரிக் கும் மருத்துவ தாதிகளின் சேவைக்குரிய செலவு என்பது மிகவும் அதிகமாக இருக்கும். இச் செலவுகளையும் காயமடைந்தவர் வாகன காப்புறுதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிவாரணம் மாதம் $3000 டொலர்வரை வழங்கப்படும். கடுமையான இயங்கமுடியாத அளவுக்கு உடல் நிலைமை விபத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் (Sustained A Catastrophic Impairment) மாதம் $6000 டொலர் வரை இங்கு நிவாரணமாக பெறலாம். உடல் காயமடைந்த நாளில் இருந்து 104 கிழமைக்கு சாதாரணமாக இந்நிவாரணம் பெறலாம். கடுமையான இயங்க முடியாத நிலைமைக்கு பாதிக்கப்பட்டிருந்தால் தொடர்ச்சியாகவும் பெறலாம். சாதாரணமாக பாதிக்கப்பட்டு மருத்துவ தாதிகள் உதவி தேவைப்பட்டோர்ஒரு $100,00 டொலர் வரையும், கடுமையான வாழ்வில் இயங்க முடியாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் ஒரு மில்லியன் டொலர் வரையும் நிவாரணம் பெற உரித்துடையவர்களாவார்கள்.

**வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு உடல் காயமடைந்தவர்களை பார்வையிட என வந்து போகும் உறவினர்களின் செலவுகளுக்கு என (*Expenses for Visitor*) இப்பிரிவில் இருந்து பெறும் நிவாரணம் எது?**

இங்கு உடல் காயமடைந்தவரை பார்வையிட என வருபவர்கள் கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர், பேரன்மார், சகோதரர்கள் என்ற உறவினுள் இருத்தல் வேண்டும்.
அல்லது
உடல் காயமடைந்தோருடன் ஒன்றாக ஒரே வீட்டில் வசிப்பவராக அல்லது காயமடைந்தவர் ஒரு சிறுபிள்ளையாக இருந்தால் அவருக்கு உதவ வரும் ஒரு பார்வையாளராக இருத்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில் காயமடைந்தவருக்கு ஆறுதலுக்காக வந்து போகின்றவர்களின் செலவாக ஒரு சிறு தொகை இக்காப்புறுதி திட்டத்தில் இருந்து பெற்று கொள்ளலாம்.

**வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு உடல் காயமடைந்த ஒருவர் தமது வாகன காப்புறுதி திட்டத்திலிருந்து பெறும் "வீட்டு பராமரிப்பு பேணும் சலுகை" (*House Keeping & Home Maintenance*) என்றால் என்ன?**

வாகன விபத்தில் உடல் காயமடைந்த ஒருவருக்கு உடல் காயமடைந்த தினத்திலிருந்து 104 கிழமைகளுக்கு வழங்கும் ஒரு சிறு மேலதிகமாக நிவாரணம் இதுவாகும்.

அதாவது உடல் காயமடைந்த ஒருவர் தமது வீட்டினை அன்றாடம் துப்பரவாக்கி பேணுவதனை தொடர்ந்து செய்ய முடியாத காரணத்தினால் எவரோ ஒருவரை உதவிக்கு வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் தேவைப்படலாம். இந்த நிலையில் உதவி செய்பவர்களுக்கு வழங்கும் உபகாரமாக கிழமைக்கு $100 டொலர் வரை பெற்று கொள்ளலாம். தங்கள் குடும்பத்தில் உள்ள உறவினர்கள் எவருக்கேனும் ஒரு சிறு சம்பளமாக வ ழ ங் கி யி ரு ந் த ா ல் வழங்கியதற்குரிய ஆதாரங்களை விபத்தில் காயமடைந்தவர் சமர்ப்பிக்கும் போது காப்புறுதி கம்பனி இதனை கொடுத்து தீர்க்கும்.




EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario


# முரளியின் சுழல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பாகிஸ்தானில் விளையாட அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளின் முன்னணி வீரர்கள் மறுத்து வருகின்றனர். இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு தலைவர் நசிம் அஷ்ரப் கூறியது - சமீபத்தில் ஆசிய கோப்பை போட்டிகளை சிறப்பாக நடத்தினோம். ஐ.சி.சி செயலாளர் ஹாருன் லோர்கத்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி கவலை கொள்ளத்தேவையில்லை என தெரிவித்துள்ளார். வெளிநாட்டு வீரர்கள் கூட்டமைப்பை சார்ந்தவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். இங்கு வந்து உண்மை நிலையை பார்வையிடுகங்கள். இங்கு வசிக்கும் ஏராளமான அவுஸ்திரேலிய மக்களிடம் கேட்டுப் பாருங்கள். சில வீரர்கள் விலகுவதால் பெரிய அளவில் வித்தியாசங்கள் ஏற்படுவதில்லை. இவ்வளவு பெரிய தொடரில் கலந்து கொள்ளாததால் இழப்பு அவர்களுக்குத்தான். இதுபற்றி நாங்கள் கவலை கொள்ளப் போவதில்லை.

கடந்தமுறை 'டுவென்டி -20' உலககோப்பையில் இந்திய அணியில் சச்சின், டிராவிட், கங்குலி போன்ற முன்னணி ஆட்டக்காரர்கள் ஆடவில்லை. இருப்பினும் கோப்பை வென்று அசத்தியது. தென்ஆபிரிக்காவின் முக்கிய ஆட்டக்காரர்கள் பங்கேற்காத நிலையிலும் தொடர் மிகப்பெரிய வெற்றி பெற்றது. அதுபோல மினி உலக கோப்பை தொடரும் பெரிய வெற்றிபெறும். இவ்வாறு நசிம் அஷ்ரப் கூறினார்.

பயிற்சியாளர் அழைப்பு - சாம்பியன்ஸ் டிராபி தொடரில் அனைத்து நாடுகளும் கலந்து கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் லாசன் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'தொடரை புறக்கணிக்க இருக்கும் நாடுகள் வெளியில் இருந்து கொண்டு எதுவும் பேசவேண்டாம். உண்மை நிலை என்னவென்று இங்கு வந்து பாருங்கள். போட்டிகளை பாகிஸ்தானில் நடத்துவது என்று ஐ.சி.சி சரியான முடிவு எடுத்துள்ளது. வீரர்கள் பயப்படத்தேவையில்லை. தொடரில் அனைத்து நாடுகளும் கலந்து கொள்ள வேண்டும்' என்றார்.

# பெண்களின் ஆரோக்கியமும் மருத்துவமுறை யோகாசனங்களும்

## நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 24)

நமது, விளம்பரம் பத்திரிகையின் பெண்வாசகர்களே! உங்களின் ஆரோக்கியத்திற்காக இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். உங்கள் உடலில் ஏற்படக்கூடிய சில குறைபாடுகளைப் பற்றியும் அவற்றை மருத்துவமுறை யோகாசனங்கள் எவ்வாறு குணமாக்குகின்றது என்பதனைப் பற்றியும் பார்ப்போம்.



பெண்வாசகர்களே உங்களுக்கு ஏற்பட்டுள்ள மருத்துவ சந்தேகங்களை எனது தொலைபேசியில் பதிவு செய்தால் அதற்குரிய பதிலை விரைவில் அறியத் தருகின்றேன். பொதுவாக பெண்களுக்கு அதிக துன்பம் தரக்கூடிய உடற்குறைபாடு என பார்த்தால்

1. மாதவிடாய் கோளாறு
2. உடற் பருமல்
3. இடுப்புவலி
4. மலச்சிக்கல்
5. உடல் சோர்வு

இவ்வாறு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எவ்வாறு மருத்துவமுறை யோகாசனத்தின் மூலம் எப்படி சீர் செய்வது என்பதனைப் பார்ப்போம்.



**ஒட்டக ஆசனம்**

1. மாதவிடாய் கோளாறு

இதனை நான்கு விதமாக பிரிக்கலாம்.

1. மாதவிடாய் நாட்கள் தள்ளிப்போவது
2. மாதவிடாயின் போது அதிக இரத்தப்போக்கு ஏற்படுவது
3. மாதவிடாய் நாட்களில் சரியானபடி இரத்தமின்மை
4. மாதவிடாய் நாட்கள் முன்கூட்டி வருவது.

இந்த கோளாறுகள் பெண்களின் உடல் வெப்ப நிலைக்குத் தக்கபடியும் ஹோர்மோன்களின் செயல்களுக்குத் தக்கபடியும், உணவு முறைகளுக்குத் தக்கபடியும், உடல் உழைப்புக்குத் தக்கபடியும் ஏற்படுவது. இதில் முக்கிய பங்கு வகிப்பது உடல் உழைப்பு குறைவாக இருப்பதே. ஏனெனில் இந்நாளில் பெண்களின் வீட்டு வேலைகளில் 75 வீதத்தினை இயந்திரங்களே செய்து வருகிறது. அவையும் தேவைதான்.

இவ்வாறு பெண்கள் உடல் உழைப்பு குறையும் போது அவர்களது ஹோர்மோன்களின் செயலும், உடல் வெப்ப நிலையும், உணவு முறையும் சீராக இருக்காது. இவ்வாறு உடல் உழைப்பு குறைந்த பெண்கள் சில குறிப்பிட்ட கீழ்க்கண்ட ஆசனங்கள் செய்து வரும்போது மாதவிடாய் கோளாறுகளை சரி செய்யலாம். இந்த குறிப்பிட்ட ஆசனங்களின் முன்பும் பின்பும் சில அடிப்படை ஆசனங்களை தவறாது செய்து வந்தால் தான் கீழ் குறிப்பிட்ட ஆசனங்களின் முழுப்பலனையும் பெறமுடியும்.

1. பஸ்ஷிமொத்தாசனம்.
2. தணுராசனம்.
3. உசர்ட்டாசனம் (ஒட்டக ஆசனம்)
4. கந்தாராசனம்.
5. மார் ஜாரி ஆசனம்.

இவையே அடிப்படை ஆசனங்களாகும்.

14 ஆசனங்களை (உதாரணம்: சர்வாங்காசனம், விபரீதகரணி, ஜானுசீராசனம், திரிகோண ஆசனம், சிரசாசனம், சலபாசனம், மச்சாசனம்) மேற்கண்ட 5 ஆசனங்களின் முன்பும் பின்பும் செய்துவர வேண்டும். அப்போதுதான் மாதவிடாய் கோளாறுகள் இலிருந்து விடுபடமுடியும்.



**தணுராசனம்**

பயிற்சியின் ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாக இருந்தாலும் போகப்போக அது இலகுவாக இருக்கும். நோய் குணமாகும்வரை தொடர்ந்து பயிற்சி செய்துவர வேண்டும். இதன் தொடர்ச்சியை அடுத்துவரும் இதழ்களில் காண்போம்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm





# மூலிகைப் பொருட்களின் இரச, குண, வீரிய வியாகங்களுக்கு ஏற்ப குணமாற்றும் வியாதிகள்

கடந்த இதழ் தொடர்ச்சி

## கற்பூரவல்லி



இதன் தாவரவியல் பெயர் Anisochilus Carnolls ஆகும். இதனை எங்கும் காணமுடியாது. வீடுகளில் சிலர் கவனத்துடன் உண்டாக்கி வருகின்றனர். உஸ்ண வீரியமும், துவர்ப்புச் சுவையும் கொண்டுள்ளது. இதனுடைய இலைப்பகுதியைத்தான் பாவனைக்கு எடுப்பதாகும். கபத்தன்மையை (சளிப்பிடிப்பு) அகற்றக்கூடியது. உடம்பில் அதிகம் வேர்க்கும் தன்மையை அதிகரிக்கும்.

பாலூட்டும் குழந்தைகளுக்கு இது முக்கியமான மூலிகைச் செடியாகும். குழந்தைகளுக்கு சுத்தமான துப்பரவு செய்த கற்பூரவல்லி இலையை எடுத்து நன்கு சுத்தமான தண்ணீரில் அலசி சாறு உரிய முறையில் எடுத்து கற்கண்டு கூட்டி காலை வேளை கொடுத்துவந்தால் சளித்தன்மை (கபம்) நீங்கி, இருமலும் அகன்றுவிடும். தாயின் முலைப்பாலும் சேர்த்துக் கொடுப்பதினால் விருப்புடன் குழந்தை அருந்திக் கொள்ளும் இம்முறையைக் கையாண்டு நமது தாய் நாட்டில் பலர் திருப்தியடைந்துள்ளனர். இதனைக் கொடுக்கும் போது குழந்தையின் வயது, உடல்நிலை அறிந்து கொடுப்பது சாலச்சிறந்து. (ஒருவயதிற்கு மேல்) பாவிப்பது நன்று. இந்தக் கற்பூரவல்லி மூலிகையானது நல்ல மணமும் அழகும் உடையது. சில சமயங்களில் நமது தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

மதுரத்தில் சிறந்த 'அதிமதுரம்' பற்றிப் பார்ப்போம். இது மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். வேர் பகுதியைத்தான் பாவனைக்கு எடுப்பதுண்டு. சீதவீரியம் கொண்டது. கசப்புடன் சேர்ந்த இனிப்புத்தன்மையான சுவையை யுடையது. குளிர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது. இதன் தாவரவியல் பெயர் Giycyrraiza Glabra ஆகும். உடல் வரட்சியை நீக்கி, சளித்தன்மையை (கபம்) அகற்றவல்லது. மலத்தை இலகுவாக வெளியகற்றும். அத்துடன் உடம்பில் சக்தியை ஊட்டவல்லது.
முத்தாது என்கின்ற வாதம், பித்தம், கபம்



என்பவற்றில் ஏற்படுகின்ற தோசங்களை (வியாதி) நீக்கும். தாகம் தணிந்து கண் பகுதிக்கு குளிர்ச்சியை உண்டாக்கும்.

அதிமதுரத்தைத் துப்பரவு செய்து வாயிலிட்டு மென்று கொண்டிருக்க, இதன் சத்து உமிழ்நீருடன் இரண்டறக்கலந்து உள்சென்று சளியை (கபம்) அகற்றி, இருமலையும் குணப்படுத்தும் திறன் உடையது.



அதிமதுரம், கடுக்காய், மிளகு இவற்றை சமன் கிடையாக எடுத்து துப்பரவு செய்து இளவறுப்பாக வறுத்து பவுடர் செய்து (தூள்) வைத்துக்கொண்டு 4 - 6 நீரும் அளவு (வயதிற்கு ஏற்ப) எடுத்து காலை, மாலை, சுத்தமான தேன் கலந்து பாவித்து வந்தால் கபதோசத்தினால் ஏற்படுகின்ற சளியை வெளியகற்றி இருமலையும் தணியச் செய்யும்.

இதனால் எதுவித தீங்கும் ஏற்படாமல் உடல்நிலை சாதாரண நிலைக்கு வந்துவிடும். இதனை எமது தமிழ் வர்த்தக நிலையங்களில் கடைச்சரக்கு மூலிகையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanaka)
C.D.S - C.N.H.P (Canada)


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:**905.554.4273 / 647.427.1428**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)



**SHAWN TRUCK & FORKLIFT**
**DRIVING SCHOOL**

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



**In Classes**
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: *Pl. Call: Raja / Shan*

**416.913.9574/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



INDEPENDENT ART FILM SOCIETY

iafs

# சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

## ஒக்ரோபர் 18, 2008

சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பரிசுகள்
முதற் பரிசு 500 கனடிய டொலர்கள்.
இரண்டாம் பரிசு 300 கனடிய டொலர்கள்
மூன்றாம் பரிசு 200 கனடிய டொலர்கள்

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ஆம் நாள் (SEPTEMBER 25, 2008)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director
IAFS
1345 Morningside Ave. Unit #8, Toronto, ON M1B 5K3

- மேலதிக தொடர்புகளுக்கு: 416-450-6833 / 416-804-3443
  rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

# பலமான அத்திவாரம்

## ஓடும் நீர் உறைவதில்லை 66

வாழ்வியலில், நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை எண்ணில் அடங்காதவை. ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் கற்க வேண்டும் என்பதும் எவற்றைக் கற்றல் வேண்டும் என்பதும் அவரவரது வாழ்வியல் எதிர்பார்ப்புக்களையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும், வாழ்வியல் நோக்கமும் மற்றவர்களில் இருந்து வேறுபடுவதால் அவரவரது கற்றல் அளவும் வேறுபடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இருவரது நோக்கம் ஒன்றாகக் காணப்படினும் அதன் அளவுப்பரிமாணம் வேறுபட்டதாக அமைவதை யும் காணலாம். எனவே கற்றல் என்பது எவ்வளவு என்பதை கற்பவரில் இருந்து கற்பிப்பவர்வரை வரையறை செய்ய முடியவில்லை. இங்கே கற்றல் எனக் குறிப்பிடப்படுவது வாழ்க்கைக் கல்வியேயன்றி ஏட்டுக்கல்வியல்ல.

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையான அடிப்படைகளை ஏற்றுக்கொண்டவர்களா கின்றோம். இந்த அடிப்படைகள் எம்மால் தரம்பிரித்துப்பார்ப்பதற்கான தகுதியைப் பெறுவதற்கு முன்னர் நாம் வாழ்ந்த சூழலில் தரப்பட்டவை மட்டுமல்ல எந்தவித எதிர்ப்பும் இன்றி எம்மால் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் கூட. இவ்வாறு நாம் ஏற்றுக்கொண்டமைக்கு யார் காரணகர்த்தாக் கள் என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமாயின் பகுத்தறிவும், பிரித்தறிவும் என்ன என்பது பற்றிய கேள்வி ஞானம் கூடப் புரியாத காலப்பகுதியில் எம்மைப் பொறுப்பேற்று வழிப்படுத்தியவர்களும், வழிப்படுத்தியவை களுமாகும். அதாவது எமது ஆரம்ப காலப்பகுதியில் எண்ணங்களையும் நம்பிக்கை களையும் உருவாக்குவதற்குத் துணை புரிந்த சூழல் தான் எமது அடிப்படைகளை உறுதிப்படுத்தியுள்ளன. இந்தச் சூழல் என்பது நமது பெற்றோர்களில் இருந்து ஒவ்வொரு கணப்பொழுதும் எம்மீது செல்வாக்கைச் செலுத்திய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், தொலைக்காட்சி, வானொலி, புத்தகங்கள், பத்திரிகைகள் எனப் பல குறிப்பிடப்படக் கூடியவை. இவையனைத்தும் எவ்வாறான தகவல்களை வெளிப்படுத்தினவோ அவற்றை நாம் ஆரம்பகாலங்களில் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களில் எவை எவை மீண்டும் மீண்டும் எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டவையோ அவை நமது ஆழ்மனதில் உறுதியாகப் பதியப்பட்டுள்ளன. இவ்வாறு பதியப்பட்டுள்ள விடயங்களின் நகர்வாகவே நமது வாழ்க்கை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> *நன்றியுடன் KG Master*

ஆரம்பகாலங்களில் நமது கற்கையானது எவற்றையெல்லாம் அறிந்து கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் அறிவதற்கான வரைய-றையற்ற ஆர்வமாக நமக்கு இருந்தது. கற்கப்படுகின்ற ஒவ்வொரு விடயமும் கவர்ச்சியாக இருந்தது. அவையனைத்தையும் காரணகாரிய வேறுபாடின்றி முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டவை எதிர்காலத்திற் கானவையா அல்லவா என்பது கூடப் புரியாத நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் எமது வாழ்வியல் நகர்வின் போது நாம் எதிர்நோக்கும் விடயங்கள் ஏதோ ஒருவகையான உள்ளுணர்வுத்தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நமது எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்குகின்றன. இந்த உணர்வுகள் ஏற்கனவே நமது ஆழ்மனதில் பதிந்துள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தப் படுவதால் அவற்றுக்கேற்றவாறு நமது இயல்புகளை அமைத்துவிடுகின்றன. இவை அவற்றின் தன்மைக்கேற்ப நேர்த்தியானவை யாகவோ அல்லது எதிர்மறையானவையாகவோ அமைந்து விடுகின்றன.

**KG Master**-*kgmaster@rogers.com*

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது எண்ணங்களும் நம்பிக்கைகளும் நமது பெற்றோர்களுக்கே வியப்பைத் தரக்கூடிய வகையில் அமைந்து விடுகின்றன. எமது பிள்ளை இப்படியிருப்பான் என்று கனவிலும் நினைக்கவில்லை என்று கதறுகின்ற பெற்றோர் பலர். எமது பிள்ளை எதிர்பாராத அளவிற்கு பெருமையைத் தனக்கும் பெற்றோருக்கும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றான் எனப் பூரிப்படையும் பெற்றோர்கள் சிலர். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் நமது பெற்றோர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கு பவர்களாக இருக்கின்றோம். இந்த இரண்டு வகையான ஆச்சரியத்திற்கான காரணங்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுபவை நமது பிள்ளைகள் எந்த வகையான ஆச்சரியத்தைத் தரவுள்ளார்கள் என்பதை முன்கூட்டியே புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும். இதன் மூலம் நாமும் எம்மை மிகவும் தயார்படுத்தி அந்த ஆச்சரியத்தின் தாக்கத்தால் அளவுக்கதிகமாக உணர்ச்சி வசப்படுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பெற்றோரினதும் வாழ்வியல் எதிர்பார்ப்புக்களில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது அவர்களது குழந்தைகளின் எதிர்காலம் பற்றியதே. குழந்தை பிறந்தது முதல் அதன் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்த எதிர்கால எதிர்பார்ப்புக்களின் ஆரம்பம் ஒரு குழந்தையின் உடலியல் ரீதியிலாக அமைகின்றது. குழந்தையானது தனது புரிந்து கொள்ளும் தன்மையை வார்த்தைகளால் அல்லது உடற்பாசையால் வெளிப்படுத்த முடியாத காலப்பகுதிகளில் பெற்றோர்களின் முயற்சியில் பெரும்பங்கு அதன் உடல்வளர்ச்சி யுடன் தொடர்புபடுகின்றது. ஒரு குழந்தைக்கு உணவூட்டும் நேரம், உறக்கத்திற்கான நேரம் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவை கூட அக்குழந்தையானது உடல்நலம் மிக்கதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பேயாகும்.

குழந்தைகளின் மீது அவர்களது ஆரம்ப காலங்களில் உடல்வளர்ச்சியில் கவனம் செலுத்தும் அளவுக்கு அவர்களது உளவளர்ச்சி யில் நாம் கவனம் செலுத்துவதில்லை. இது பெரும்பாலும் அதன் முக்கியத்துவம் தொடர்பான விளக்கமின்மையால் இடம்பெறுகின்து. குழந்தை சிறிதாக இருக்கும்போது, அதனது உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தக்கூடிய நிலையை அடையும்வரை உளவியல் சார்ந்த எந்த விடயத்தையும் அக் குழந்தை கற்றுக்கொள்ளாது என்ற தவறான அல்லது தவறவிடப்படுகின்ற நிலைமை பெற்றோர்களிடம் காணப்படுகின்றது. ஆனால் குழந்தைகள் பிறந்த கணப்பொழுது முதல் அவர்களது கற்றல் இயல்பும் ஆரம்பமாகின்றது என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

குழந்தைகள் படிப்படியாக வளர்ந்து வருகின்றபோது அவர்களது எதிர்காலம் பற்றிய நமது எதிர்பார்ப்புக்களும் வேகமடைகின்றன. ஒவ்வொரு வருடமும் நகர்ந்து செல்லும் போது அவர்கள் எதிர்காலத்தை எப்படிப்பட்டது எனத் தீர்மானத்தில் ஒரு வேகத்தையும், பல்வேறுபட்ட நடைமுறைகளையும் முன்னெடுத்துகின்றோம். இந்த வேகமும் நடைமுறைகளும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பாலான பெற்றோர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவ-தால் ஒப்பீட்டு ரீதியில், மிகக்குறைந்த அளவிலான குழந்தைகளே எதிர்காலத்தை தமக்குச் சொந்தமாக்கக் கூடியவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். உண்மையில் சூழல்களே நமது எண்ணங்களையும் நம்பிக்கை களையும் உருவாக்குகின்றன என்பதால் இந்தச் சூழலின் அமைப்பு முறை ஒன்று வடிவமைப்பதில் மிகச் சில பெற்றோர்களே வெற்றியடைகின்றனர். இதற்கான காரணத்தைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

பெரும்பாலான பெற்றோர்கள் மேற்கொள்ளும் மிகவும் மோசமான தவறு என்னவெனில் தமது குழந்தைகளுக்கான ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்ப முயற்சிப்பதுதான். இந்த முயற்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இரவும் பகலுமாக ஓடி ஓடி ஒழுங்கான ஊனுமின்றி உறக்கமுமின்றி அவதிப்படுகிறார் கள். ஒருவகையில் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து விடுகிறார்கள். குழந்தைகளுக்கான எதிர்காலம் ஒன்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஒரு கற்பனையான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வாயையும் வயிற்றையும் கட்டி வாங்கியிலே வைப்புப்பணம், உயர்கல்விக்கான முதலீடு சொத்துக்கள், அவை இவை எனப்பல விடயங்களைக் உருவாக்குவதில் அல்லும் பகலுமாய் ஈடுபடுகிறார்கள். இங்கே ஒரு அடிப்படை உண்மையை இவர்கள் புரிந்து கொள்ளத் தவறுவதாலேயே இவ்வாறான விடயங்களில் தம்மை முழுமையாக உட்படுத்தி அவதிப்படுகிறார்கள். இங்கே ஒரு முக்கியமான விடயத்தை வாசகர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்திற்காகப் பொருளாதார ரீதியன விடயங்களைக் கட்டியெழுப்புவது தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் குழந்தைகளின் வளர்ச்சிக் காலங்களில் பொருளாதார ரீதியான காரணிகளில் அதிக கவனத்தையும் முயற்சியை யும் மேற்கொள்வது தான் தவறு என்கிறேன். ஏனெனில் குழந்தைகளுக்கான, எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பெற்றோர்களில் அதில் பெரும்பான்மையான பெற்றோர்கள் ஏமாற்றப் பட்டு விடுகிறார்கள் அல்லது அவர்களது எதிர்பார்ப்புக்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு விடுகின்றன. இன்னொரு வகையில் கூறுவதா யின் பெற்றோர்கள் முற்றுமுழுதாகத் தோல்வி யடைந்து விடுகின்றார் கள். அதுமட்டுமல்ல அவர்கள் குழந்தைகளும் முற்றுமுழுதாகத் தோல்வியடைந்து விடுகிறார்கள். ஏனெனில் குழந்தைகளுக்கு ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவது என்பது முற்றிலும் ஒரு பலமற்ற அத்திவாரமாகும்.

இப்போது குழந்தைகளுக்கான ஒரு பலமாக அத்திவாரத்தை அதாவது உறுதியான எதிர் காலத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பதைப் பார்ப்போம். எதிர்காலம் என்பது எதிர்வுகூறல் மூலம் அல்லது ஒரு ஊகத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவது. நமது எதிர்பார்ப்புக்கள் ஒரு கற்பனை அடிப்படையில் முன்வைக்கப்படுவது எந்தவிதமான உறுதிப் பாடும் உத்தரவாதமும் இன்றிக் காணப்படுவது. இதனால்தான் பௌதீக, பொருளாதார அடிப்படையிலானவற்றின் வெளிப்பாடுகள் ஒரு அனுமானத்தின் அடிப்படை யிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டியவை. ஆனால் குழந்தைகளின் எதிர்காலமானது ஒரு அனுமானத்தின் அடிப்படையில் அமையக் கூடாதவை. ஒரு உறுதியான, திட்டவட்டமான எதிர்காலம் அவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதற்குப் பெற்றோர்களின் பங்கு முதன்மையானதாகும். இதற்குப் பலமான அத்திவாரம் ஒன்று அவர்களுக்கு அவசியமாகின்றது.

### ஆம் வாசகர்களே!

உறுதியானதும், திட்டவட்டமானதும் சிறப்பானது-மான எதிர்காலம் என்பது ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சொந்தமானது. இந்த எதிர்காலத்தை தமக்கு சொந்தமாக்குவதற்கான அத்தனை தகுதிகளும் குழந்தைகளுக்கு உண்டு. குழந்தைகள் இந்தத் தகுதியை பெறுவதற்குப் பெற்றோர்கள் செய்யவேண்டியது ஒன்றேயொன்று தான். அதாவது குழந்தைகளுக் கான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக குழந்தைகளை எதிர்காலத்திற்காகக் கட்டியெழுப்புங்கள். நேர்மை, நெஞ்சுத்துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றில் உங்கள் குழந்தைகளைக் கட்டியெழுப்புங்கள். இவையே குழந்தைகள் மீதான உங்கள் முதலீடு களாகட்டும். ஏனெனில் இவையே ஒரு பலமான அத்திவாரத்திற்கான அடிப்படைகளாகும். அதுமட்டுமன்றி நேர்மை, நெஞ்சுத்துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றின் சொந்தக்காரர் களுக்கு மட்டுமே எதிர்காலமும் சொந்தமானதாகும்.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Expressvu Channel - 219 |




# வாசித்தீர்களா? கலகலப்பு நகைச்சுவை இதழ் 6 சிரிப்பவர்களுக்கு மட்டும் இலவசம்










Grand Opening on August 16, 2008

# 1st South Asian Indoor Mall






## All your shopping and Services Under One Roof











- Law Office
- Doctor Office
- Pharmacy
- Mortgage/ Tax
- Coffee & Sandwiches
- Party Supplies
- Gift Items
- Photocopy Shop
- Cool Bar
- Custom Design Clothes
- Spa/ Facial for Ladies
- Electronics
- TV/ Computer Repairing
- Kids Clothing
- Printing Services
- Ink Toner Cartridges Sales
- Office Supplies
- Ladies Garments
- Real Estate Inspection
- Baby Items
- Dry Cleaning
- Accounting Services
- Tax Services



- Newspaper Office
- Real Estate Office
- Dollar Store
- Physiotherapy
- Convenience Store
- Video Games
- Tours
- Printing
- Book Store + Video
- Mortgage/ Investment/ Financing
- Bakery
- Computer Store
- Jewellery Store
- Salon
- CD/ Video & Audio- Stores
- Textiles
- Telecommunications
- Cell Phone
- Tailoring
- Money Transfer
- Many more Stores...























5215 Finch Ave. East
Scarborough, ON M1S 0C2
(Finch & Middlefield)







# சுகவாழ்வுக்கு ஒரு திறவுகோல்

## (A Key to Healthy Life)



உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளும் விரும்புவது சந்தோச வாழ்வு. ஆனால் அனேகமான மனித சமுதாயம் சந்தோசத்தை தாமாகவே தொலைத்துவிட்டு தவிப்பதை நாமறிவோம். இதற்கு காரணம் மனிதரின் அலையும் மனநிலை என்பதை எவரும் அறிந்துகொள்வது அவசியம். ஒருவர் இந்த உலகில் பிறந்த உடனேயே இறப்பும் நிசட்சயமாகிவிட்டது என்பதை ஆறு அறிவுடைய எவரும் அறிவர். ஆனால் இந்த உண்மையை பலரும் ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை. பிறந்த அன்றே இறந்த குழந்தைகளை நாமறிவோம். பிறந்து சிலகாலத்தில் மடிந்த குழந்தைகள், சிறுவயதில் இறப்பவர்கள், வாழ்ந்து அனுபவித்தபின் இறப்பவர்கள் ஆகியோரையும் நாமறிவோம். 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்பது எவரும் அறிந்த உண்மை. இதை நன்கு அறிந்திருந்தும் நாம் எப்போதும் மரணத்தைப்பற்றி எண்ணியபடியே இருப்பதில்லை. இயல்பாக ஒவ்வொருவரும் தம்தம் கருமத்தில் ஈடுபடுவதே உலகவழக்கம். ஆனால் சிலர் இதை மறந்து தம்மைப்போல் சந்தோசமாக வாழப்பிறந்த சகமனி தர்களை துன்புறுத்துவதையும், தம் சந்தோசத்திற்காக பிறர் சந்தோசத்திற்கு பங்கம் விளைவிப்பதையும் நாம் அறிவோம். இது மிருகத்தனம் என்பதை பகுத்தறிவுடைய எவரும் உணர்ந்துகொள்வது எளிது. எனவே 'நீயும் சந்தோசமாக வாழ், பிறரையும் சந்தோசமாக வாழ உன்னால் இயலுமான உதவிசெய்' என்பது சான்றோர் கூற்று. ஒருவர் தனது மனதில் எழும் ஆசைகளை பகுத்தறிவுடன் சிந்தித்து கட்டுப்படுத்தி அளவுடன் பொருள் ஈட்டி திருப்தியுடன் வாழ்ந்து பிறருக்கும் உதவி செய்து சந்தோசமாக வாழ்வதே சான்றோரால் உயர்ந்த வாழ்க்கையெனக் கருதப்படுகிறது. மனத்தை தூய்மையாக வைத்து எவருக்கும் தீங்கு நினைக்காமல் எமது கருமத்தில் கருத்தாக இருந்து உழைத்து அந்த ஊதியத்தில் சந்தோசமாக நாமும் வாழந்து பிறரையும் வாழவைத்தலே எமது குறிக்கோளாக இருக்கவேண்டும். 'அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது' என்பர் யோகிகளும் முனிவர்களும்.

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PPh.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022 /E.Mail -
DRVPS@Hotmail.com

அதாவது அண்டமென்னும் உலகத்தில் (பிரபஞ்சத்தில்) உள்ள பஞ்சபூதங்களான நிலம், நீர், வாயு, தேயு, (வெப்பம்) காசமென்னும் ஐந்தாலும் உருவானதே எமது உடம்பு என்னும் பிண்டம். இதை நல்ல நிலையில் வைத்திருந்தாலே அதில் தங்கியுள்ள உயிர் என்னும் ஆத்மா நிலைத்திருந்து செயற்பட்டு பல சாதனை படைக்கும். இந்த உடம்பை பாதுகாப்பதற்கு சத்தான உணவு, சுத்தமான காற்று, நீர், போதிய உடற்பயிற்சி, மனதை திடப்படுத்த தியானம் பிரணாயாமம் ஆகியவை அவசியம். காற்று - சுத்தமான காற்றை நன்கு உள் இழுத்து, முற்றாக வெளிவிட வேண்டும். பெரும்பாலும் மூன்றில் ஒருபங்கு சுவாசப்பையே எமக்கு செயற்படுகிறது. மிகுதி காலியாக இருந்து அதில் சளிதேங்கி பல நோய்கள் உருவாகின்றன. எனவே நாம் ஆழமாக மூச்சை உள் இழுத்து முற்றாக வெளிவிட வேண்டும். தொப்புள் என்னும் நாபி (Naval)வரை மூச்சை உள் இழுத்து, தொப்புளுக்கு கீழ் வயிற்றை கைகளால் அழுத்தியபடி வெளிவிட்டு பின்கைகளை அகற்றியபின் மூச்சை மீண்டும் உள் இழுக்கும்போது தொப்புழும் வயிறும் மேல்வரவேண்டும் இப்படி ஒரு முறைக்கு 15 தரம் செய்தால் சுவாசப்பை படிப்படியாக பலப்பட்டுவிடும். நாம் உளஇழுப்பது காற்றுமட்டுமல்ல, இந்தப்பிரபஞ்சத்திலுள்ள பிரபஞ்ச சக்தியும் உள்ளே சென்று உள்ளே இருக்கும் அத்தனை உறுப்புக்களுக்கும் புத்துயிர் கொடுக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். இதனை ஸ்திரப்படுதுவதற்கு உதவுவதே பிராணாயமம் என்னும் சுவாசப் பயிற்சியாகும். வாயையும், கண்களையும் மூடி ஆழ்ந்து சுவாசிக்கும்போது சுவாசத்தை நன்கு அவதானித்தல் அவசியம். இப்படி அவதானித்தால் உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களும், மனம் உட்பட எல்லாமே தளர்ச்சியடைந்துவிடும் (Relax). இதனால் மனதிலும், உடம்பிலும் ஒரு புத்துணர்வு உருவாகும். அடிக்கொருதரம், ஆறுமுறையாவது ஆழமாக மூச்சை உள் இழுத்து விடுவதால் எவருக்கும் நற்பயன் கிடைக்கும் என்பது எமது மூதாதையர்களாக-ிய சித்தர்களதும், யோகிகளினதும் கருத்தாகும்.

நீர் - எமது உடம்பில் 75 வீதம் நீர் உள்ளது. குருதி, நிணநீர் போன்ற அத்தனை சாதனங்களும் திரவ உருவில் உள்ளன. இவை நன்கு செயற்படாவிடில் உயிர் வாழ முடியாது. எனவே சுத்தமான சுட்டு ஆறிய நீர் உட்கொள்வது அவசி யம். தினம் 8 முதல் 10 கிளாஸ் நீர் பருகவேண்டும். இது பழரசமாகவும் இருக்கலாம். இந்த நீரானது குருதியையும், நிணநீர்மூலம் பல அத்தியாவசியாவசிய ஜீவசத்துக்களையும் உப்புக்களையும் பல்வேறு பாகங்களுக்கும், உறுப்புகளுக்கும் எடுத்துச செல்வதுடன், அப்பாகங்களில் தேங்கும் கழிவுப் பொருட்களை கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் ஆகியவற்றிற்கு கொண்டுசென்று அகற்றுவதற்கும் உதவுகிறது.

உணவு - வாழ்வுக்கு உணவு அவசியம். இந்த உணவு இலகுவில் ஜீரணமாகக்கூடியதாகவும் சத்துள்ளதாகவும் இருக்கவேண்டியது அவசியம். உணவை நன்கு மென்று உண்ண வேண்டியது அவசியம். காலை உணவு உண்பதற்கு கடைசி 15 நிமிடமும் பிரதான உணவான மதிய உணவு உண்பதற்கு கடைசி அரைமணிநேரமும், இராப் போசனத்திற்கு மென்மையானதாக, பழவகை கூடுதலாக உள்ளதாகவும் அதை உண்பதற்கு கடைசி 15 நிமிடமும் ஒதுக்குதல் அவசியம். உணவை ருசித்து, நன்கு மென்று உண்ண வேண்டும். மனம் துக்கமாகவோ, பதட்டமாகவோ இருந்தால், பசியிருந்தால் நீராகாரம் அருந்தலாம். எதுகாரணத்தாலும் திண்ம, கடினமான உணவு உண்ணக்கூடாது. அப்படி உண்டால் அஜீரணமாகிவிடும். உணவு ஜீரணமாவதைப்பற்றி சுவராஜ்யமான கதை ஒன்று உள்ளது. முற்காலத்தில் அசுரர்கள் தவம் செய்யும் முனிவர்களை தந்திரமாக அழித்து விடுவார்களாம். வராகன், இடும்பன் என்று இரண்டு அரக்கர்கள். இந்த அரக்கர்களுக்கு தாம் நினைத்த பொருளாக மாறி மீண்டும் தமது சுயரூபத்தை பெறும் ஆற்றல் இருந்ததாம். இவர்களில் வராகன் ஒரு கடின-மான லட்டாக மாறிவிடுவானாம். அதை இடும்பன் முனிவரிடம் கொடுப்பானாம். எவரொருவர் உபசாரத்துடன் ஒரு முனிவருக்கோ யோகிக்கோ உணவுப்பொருள் கொடுத்தால் அதை பெற்று உண்ணாவிடில் அது அவர்களுக்கு தோசமாகி, தவம் கெட்டுவிடுமாம். இப்படி கொடுத்த லட்டை முனிவர் உண்டு மூன்று மணித்தியாலத்தின்பின் இடும்பன் வந்து அரக்கர் சிருஷ்டி மந்திரத்தை செபித்து 'வராகா! வா, வா, வா!' என்று மூன்று முறை அழைத்ததும் முனிவரின் வயிறு வெடித்து வராகன் வந்துவிடுவானாம். முனிவர் இறந்துவிடுவாராம்!. இந்த அரக்கர்கள் அகத்திமாமுனிவரிடம் வந்து வராகன் 'பொரி விளாங்காய்' என்னும் கடினமான சீனிப்பாகில் செய்த மாப்பொருளாகமாறி, அதை இடும்பன் உபசாரத்துடன் கொடுத்தான், அரக்கனின் நோக்கத்தை அகத்தியர் ஞான திருஷ்டியால் அறிந்துகொண்டார். பொரிவிளாங்காயை கையில் எடுத்து நன்கு உருட்டிப்பார்த்துவிட்டு, ஒரு கடிகடித்து நன்கு மென்று 'ஓம் நமசிவாய' என்று விழுங்கிவிட்டு, மிகுதி பொரி விளாங்காயை கையில் வைத்துக்கொண்டார். மூன்று மணிநேரம் கழித்து இடும்பன் வந்து அகத்தியரிடம் பொரிவிளாங்காயைத்தின்று விட்டீர்களா? என்று விசாரித்தான். அதற்கு அகத்தியர், பொரிவிளாங்காய் கடினமாக கல்லுப்போல் இருக்கிறது, வயதுபோன எனக்கு மெதுவாகத்தான் உண்ண முடியும். இதைவிட பொரிவிளாங்காய் பல நாட்கள் கெட்டுவிடாமல் இருக்குமே. எனவே நான் மெதுவாக மென்று, மென்று உண்கிறேன் என்று கையில் இருந்த முக்காற்பங்கு கடித்துத்தின்ற பொரிவிளாங்காயைக் காட்டினாராம் அகத்தியர். அரக்கன் செய்வது அறியாது அதிர்ந்துவிட்டானாம்!. உணவானது 3 மணிநேரம் வயிற்றுக்குள் இருந்தபின், செமிகுடலாகி சிறுகுடலுட்குள் சென்று ஜீரணமாக ஆரம்பித்து விடும். இதை இடும்பனும் அறிவான். எனவே இடும்பன் உரத்தகுரலில் 'வராகா வா வா' என்று கூப்பிட்டானாம். மறுகணம் அகத்தியர் கையிலிருந்த மாவுருண்டை தலையில்லாத வராகனின் உடல் முண்டமாக இருந்ததாம். பதட்டமடைந்ததுபோல் காட்டிய அகத்தியர் அதை தன் முன் எரிந்து கொண்டிருந்த ஓமகுண்டத்தல் போட்டுவிட்டார். அது எரிந்து சாம்பலாகியது.

இதைக்கண்ட இடும்பன் அகத்தியரைத்தாக்க முயன்றானாம். அகத்தியர் 'ஓம் சக்கரதாரி கிருஷ்ணபரமாத்மா நமஹா!' என்னும் மந்திரத்தை செபித்ததும், கிருஷ்ணரின் சக்கராயுதம் தோன்றி ஆயுதம் ஏந்திய இடும்பனின் தலையை அறுத்து ஓமகுண்டத்தில் போட்டு கங்கையில் நீராடி பாவமோசனம் பெற்று மீண்டதாம். சக்கராயுதம் ஆயுதம் ஏந்திய எவரின் தலையையும் கொய்துவிடும் என்பது சரித்திரச்சான்று.

இந்தக்கதையிலிருந்து எந்த உணவையும், மென்மையாக மென்று தின்றால் உடன் ஜீரணித்துவிடும் என்பது தெளிவாகிறது. எமது சுகவாழ்வுக்கு தரமான உணவு அத்தியா அவசியம். உணவின் பெருமையை திருவள்ளுவர் தமது தெய்வ நூலில் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்துவது அற்றது போற்றி உணின்!" எனக்குறிப்பிட்டுள்ளார்!. இதன் அர்த்தம் நாம் தகுதியான உணவை முன்பு உண்டவை நன்கு ஜீரணமாகி பின் மலமாக கழிந்துவிட்டதா என்று தெரிந்தபின் உண்போமானால் எமக்கு மருந்து தேவைப்படாது என்பதாம். நாம் உண்ணும் உணவு எமது ஜீரண உறுப்புக்களில் ஜீரணமாகி அது சக்தியாக (Energy) மாற்றப்பட்டு அத்தனை உடம்பிலுள்ள கலன்களையும் இயக்க பெரிதும் உதவுகிறது. நாம் உண்ணும் உணவில் மாச்சத்து, புரதம், கொழுப்பு ஆகியவை அடங்கும். ஓரளவு குறிப்பிட்ட உணவிலிருந்து மாச்சத்து ஒரு மடங்கு வெப்பத்தை (Calorie) உருவாக்கினால் அதே அளவு புரதத்திலிருந்து இருமடங்கு வெப்பமும், அதே அளவு கொழுப்பு மூன்று மடங்கு வெப்பமும் உருவாக்கும். நாம் உண்ணும் உணவுகள் போதிய உடல் உழைப்பு இல்லாவிடில் உடம்பில் கொழுப்பாகச்சேர்த்து வைக்கப்படும். இதனால் பல இருதயநோய்களும் தோன்றும் ஆபத்து ஏற்படும். தினந்தினம் ஏதாவது உடற்பயிற்சி செய்வது எல்லோருக்கும் அவசியம். உடல் உழைப்பு இல்லாவிடில் உண்ணும் உணவு கொழுப்பாக மாறி ஆங்காங்கு தேக்கமடைந்து இரத்த குழாய்களை சிறுகச்செய்து இரத்த அமுக்கம் ஏற்படுத்தி பலவித இருதய நோய்களை தோற்றுவிக்கும். நாம் உண்ணும் உணவானது இலகுவில் செமிக்க வல்லதாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும். உணவில் சக்தி உருவாக்கும் உணவுகளில் சக்தி உருவாகுவதுடன் முக்கிய தாதுப்பொருட்களும் ஜீவ சத்துக்களும் இருப்பது அவசியம். கொழுப்புச்சத்து 30 சதத்திற்கு கூடக்கூடாது. இத்துடன் உண்ணும்பொழுது நன்குமென்று வேறு எதிலும் கவனம் செலுத்தாது உணவு அருந்துதல் ஆரோக்கியத்திற்கு பெரிதும் உதவும். மாச்சத்து சக்தியாகச் சேர்க்கப்பட்டு அது உடல் உழைப்பால் விரையமாகாவிடில் அது உடம்பில் கொழுப்பாகவே சேகரித்து வைக்கப்படும்!. இந்தக்கொழுப்பு உடம்பைப் பலவிதத்திலும் பாதிக்கும். எடையைக்கூட்டும், பலவித இருதயம் சம்பந்தமான நோய்களை உருவாக்கும். உண்டிக்காயைச் செயல-ிழக்கவும் செய்யும். இப்படியான ஆபத்துக்களை ஏற்படுத்தும். ஒரு மனிதருக்கு தினம் 50-60வீத மாச்சத்து (Carbohydrate); நார்ச்சத்தாக (Fibre) 10-20கிறாம்), புரதம் (Protein) 20-30 சதவீதம், கொழுப்பு (Fats) 30 சதவீதமும் இருத்தல் அவசியம். இதற்கு கூடினால் அதிக உடல் உழைப்பு இல்லாதவர்களுக்கு அது உடம்பில் கொழுப்பாகவே சேர்க்கப்பட்டு எடை-யக்கூட்டிப்பெரும் ஆபத்தை விளைவிக்கும். இதைத்தவிர தினந்தினம் சுமார் 7-8 குவளை சுத்த நீர் அருந்த வேண்டும். உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களுக்கும் இரத்தமே சத்துக்களையும் கொண்டு செல்கிறது! இந்த இரத்தம் நீர்த்தன்மை வாய்ந்தது என்பதை எவரும் அறிவர்.



- தொடரும்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# துறல்

**வானரன்**

# நாயைப் போல் எனது வாழ்க்கை

# *My life as a dog*

பரதனின் ரதிநிர்வேதம் போன்றன Hollywood

தனி தாய்மாரது வாழ்க்கை பல கடினங்களைக் கொண்டது. தந்தை-கணவன் அற்ற இவர்களது வாழ்க்கை பணத்திற்கு அப்பால் பள்ளங்களைக் கொண்டது. எங்களது சமூகத்தில் தனித் தாய்மாரை பல சமயங்களில் பணம் காய்க்கும் மரமாக பார்ப்போர் அதிகம். ஏனெனில் சமூகக் கொடுப்பனவுகள் அதிகம். இதற்காகவே சேர்ந்து வாழும் குடும்பங்களும், பிரிந்து வாழ்வதாக காட்டிக் கொள்வது இன்று எமது சமூகத்தில் இயல்பு வாழ்வாக மாறிவிட்டது. பொதுவாக போரின் பின்னால் பல சமூக கொடூரங்களை இயல்பாக ஏற்றுக் கொண்டுவிட்டோம். வங்கிக் கொள்ளைகள் தொடங்கி, இன்று கிரடிட் காட், வங்கி அட்டைகள் கொள்ளை என்பனவற்றையும், எமது இயல்பு வாழ்விற்கான காரணிகளாக ஏற்றுக் கொண்டு விட்டோம். இவற்றிக்கான எதிர் நிலைகளை இது வரை நாம் வெளிப்படுத்தவில்லை. இதன் வெளிப்பாடு எமது அடுத்த சந்ததியையே சென்றடைகின்றது. அவர்கள் தான் இதன் பலாபலன்களை அனுபவிக்கின்றார்கள். வட அமெரிக்காவில் குற்றம் புரியும் இளைஞர்கள், இளைஞிகளில் குறிப்பிடத்தக்க விகிதத்தினர் தனித் தாய்மார்களால் வளர்க்கப்பட்டவர்கள் என்ற கருத்து நிலைக்கு சாதகமான சூழலே இன்றுள்ளது. இவ்வாறான இச்சூழலில் தனித்தாயால் வளர்க்கப்படும் இரு சிறுவர்களைப் பற்றிய சுவீடன் நாட்டுப் படமே "நாயைப் போல் எனது வாழ்க்கை". 1987 ல் வெளிவந்த இப்படம் உலக சினிமாவில் குறிப்பிடத்தக்க படம். இதனை சிறுவர்களுக்கான பிரச்சினையாக பார்க்காது ஒரு சீரிய பிரச்சினையாக இப்படத்தில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.


இரயிலில் தனித்துப் பயணிக்கும் இக்மரின் கேள்விகள் எல்லாம் "சந்திர மண்டலத்திற்கு, தனித்து அனுப்பப்பட்ட நாயைப்பற்றியது. நாயின் அனுமதியின்றி போதிய உணவின்றி நாயை அனுப்பியுள்ளார்கள்". இவன் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கின்றான்? அவனது நினைவுகள் பின்னோக்கிச் செல்கின்றன.. தந்தை வாழைப்பழ ஏற்றுமதி வியாபாரி. கப்பலில் வாழ்க்கை. இவர்களுடன் இல்லை. பிரிந்து சென்று விட்டார். தாய் இக்மரையும், அவனது அண்ணனையும் வளர்க்கின்றார். இயல்பான குறும்புகள். ஒரு தடவை தனது நண்பர்களுக்கு பிள்ளை உருவாக்கம் பற்றி விளக்கமளித்துக் கொண்டிருக்கும் அண்ணனின் பரிசோதனைக் கருவியாக, இக்மர் செயல்பட போத்தலை தனது ஆண் குறிக்குள் புகுத்தி போத்தலை வெளியே எடுக்க முடியாமல் திணற, தாயால் காப்பாற்றப்படுகின்றான். தாய்க்கும் இவனுக்குமான நெருக்கம் அதிகம். தாய்க்கு கச நோய் வந்துவிடுகின்றது. தாய்க்கு ஓய்வும் அமைதியும் அவசியம். தாய் தனது இரு பிள்ளைகளையும் திசைக்கு ஒன்றாக, இக்மரை தனது ஒரு சகோதரனிடமும், எரிக்கை மற்றொரு உறவினரிடமும் அனுப்புகின்றாள். இக்மரின் புது வாழ்வு ஆரம்பம் சிறப்பானது. புது உறவு, நம்பிக்கை உற்சாகம் தருகின்றது.

தாயைப் பார்ப்பதற்கு திரும்புகின்றனர் சகோதரர்கள். தாயுடன் இருந்த ஒரு சில நாட்களிலேயே தாய்க்கு நோய் முற்றிவிடுகின்றது. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படு கின்றாள். தாயை வைத்தியசாலையில் பார்க்கும் இக்மர் கிறிஸ்மசுக்கு என்ன வேண்டும் எனக் கேட்கின்றான். அவனுக்கு தாய் மரணத்தை நோக்கி செல்வது தெரியாது. மீண்டும் சகோதரர்கள் பிரிந்து செல்கின்றனர். இப்பொழுது இக்மருக்கு புதிய பிரச்சினைகள். இக்மர் தங்கியிருந்த மாமாவின் வீடு, மாமாவின் தொழிற்சாலைக்கு சொந்தமானது. அங்கு வேறு தொழிற்சாலை விருந்தினர்கள் தங்கி யிருக்கின்றனர். பகலில் மாமாவுடனும், இரவில் மாமியின் தாய் தங்கியிருக்கும் சிறு வீட்டிற்குமாக அலைகின்றான். மாமா தங்கியிருந்த வீட்டு பின் புறத்தில் நாய்கள் தங்குவதற்காக கட்டப்பட்ட வீடு ஒன்றுள்ளது. இப்பொழுது இக்மரின் வீடாக அது மாறிவிட்டது. ஒரு நாயைப் போல் அவனது வாழ்வும் அந்தரத்தில் தொங்குகின்றது. எதுவும் நிரந்தரமற்று அலைகின்றான். தாயின் இறப்புச் செய்தி அவனை உழுக்கிவிடுகின்றது. இப்பொழுது முதன் முறையாக தாயின் இழப்பின் கொடூரத்தை உணர்கின்றான். தாயுடன் கழித்த காலங்களை நினைத்துப் பார்க்கின்றான். அவனது நினைவுகளில் வெளிப்படுவது, "தாயை தான் கொடுமைப்படுத்திவிட்டேனோ" என்பது. நினைவுகள் பசுமைக்குப் பதிலாக கேள்விகளையே எழுப்புகின்றன. எனது வாழ்வு எப்படிப்பட்டது.? சந்திரமண்டலத்திற்கு செல்லும் நாயுடன் ஒப்பிட்டு சமாதானம் காண்கின்றான். இப்படத்தின் கதை 1950களை மையமாகக் கொண்டது. 57ல் சோவியத் யூனியன் லைக்கா என்ற நாயை ஸ்புடினிக் என்ற விண்கலத்தில் அனுப்பியது.

படத்தில் இக்மரின் வாழ்வு ஒரு் நிரந்தரமற்ற வாழ்க்கையுடன், அவனது வயதில் ஏற்படும் பருவ மாற்றங்களுக்கான தேடலையும், அது ஐரோப்பிய சூழலில் பெரியோரால் மாசுபடுத்தப்பட்ட பிம்பங்களாக இச்சிறுவர்களை சென்றடவதையும் பதிவு செய்துள்ளது. மிக முக்கியமான விடயம் படமாக்கப்பட்ட முறை பார்வையாளர்களையோ இப் படத்தை பார்க்கும் சிறுவர்களையோ பரவசப்படுத்தவோ, உணர்வுகளை தூண்டும் விதத்திலோ படமாக்கப்படவில்லை. இது கொலிவூட் தளத்திலும், இந்திய தளத்திலும் இருந்து மாறுபட்டுள்ளது. தேவையற்ற குளோசப் காட்சிகள் இல்லை. பாத்திரங்களுக்கும், சூழலுக்குமான இடைவெளி மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது காட்சிகள் மீதான பார்வையாளர்களுக்கான நெருக்கத்தை அதிகரித்துள்ளது.

இக்மரின் தாய் புத்தகங்களுக்குள் தனது நோயை மறைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார். நீண்ட வாசிப்பு அனுபவம் கொண்டவர். நோயின் உச்சத்தில் தாயின் புத்தகங்களை தட்டும் இக்மருக்கு கிடைப்பதெல்லாம் தூசியே. மற்றொரு காட்சியில் தாயின் கட்டிலில், தாய் புத்தகங்கள் வாசித்துக் கொண்டிருப்பார். இக்மர் கட்டிலில் குத்துக் கரணம் அடித்துக் கொண்டிருப்பார். இயல்பான காட்சிப் படிமங்கள். இக்மரின் உளவியலையும், தாயின் அக உளைச்சலையும் அழகாக பதிவுசெய்துள்ளது. படம் 50 களில் உள்ள சுவீடன் புறநகர் ஊடாக பயணிக்கின்றது. உதைபந்தாட்ட வீரர்கள், தொழிற்சாலை, நிர்வாண மொடல்கள், குளிரில் நீந்துபவர்கள் என்ற மத்திய வர்க்க சமூகத்திற்கு ஊடாக இக்மரை காவிச் செல்கின்றது. இங்குதான் இக்மர், தான் ஓர் அனாதையாக்கப்பட்டவன் என்பதை தெரிந்து கொள்கின்றான். அதனை உணர்கின்றான். அதே சமூகத்தில் தான் மரணத்தின் விளைவுகளையும், செக்சின் பரிமாணங்களையும் கற்றுக் கொள்கின்றான். லைலா நாயுடன் தன்னை ஒப்பிட்டு அமைதி காணும் இக்மர், நாய்க்கும், தனக்குமான சுதந்திரம் ஒன்றுதான் என்பதனை கண்டு கொள்கின்றான். சிறுவர்களிடம் அவர்களது விருப்பு வெறுப்புக்களை நாம் கேட்பதில்லை.

80களில் வெளிவந்த பாலுமகேந்திராவின் "அழியாத கோலங்கள்" என்ற படமும் சிறுவர்களின் செக்ஸ் தேடலை பதிவு செய்துள்ளது. இப் படத்தை பார்த்த பின்னர் பாலுவின் படத்தை மீண்டும் வீடீயோவில் பார்த்த




பொழுது பாலு செக்சினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் பார்வையாளர்களிடம் தோன்றவேண்டும் என்ற நோக்கத்துடனேயே காட்சிகளை பதிவு செய்துள்ளார். இதனை ஒரு வியாபார யுக்தியாகவே பார்க்கக்கூடியதாக உள்ளது. பாலுவிடம் சமூக நோக்கம் இல்லை என்று கூறவில்லை. ஆனால் அது வெளிப்படுத்தப்படவில்லை. இக்மருக்கு தனது மாமாவின் தொழிற்சாலையில் வேலை பார்க்கும், அதேசமயம் பகுதி நேர நிர்வாண மொடலின் நட்புக்கிடைக்கின்றது. அப் பெண்மணி மொடலாக வேலை செய்யும் இடத்திற்கும் செல்கின்றான். அவன் தள்ளியே வைக்கப்பட்டுள்ளான். ஒரு மனித உந்தலில் கூரையூடாக பார்க்க முற்படுகின்றான். கீழே விழுந்து காயங்களுக்குள்ளாகின்றான். மொடலின் உடல் காட்டப்படவில்லை. வெகு தூரத்தில் இருந்து அவளது வெளிப்பிம்மம் ஒரு மெழுகுச் சிலையின் வெளிக் கோடுகள் போலவே காட்டப்படுகின்றன. இவ்வாறான காட்சிகளை தமிழ்த்திரைப்படமோ, கொலிவூட்டோ எடுத்திருந்தால் வேறுவிதமான விளைவுகளை நுகர்வோர் மீது ஏற்படுத்தி இருப்பார்கள்.

படத்தில் இறுதி வரை அவர்களது தந்தை காட்டப்படவில்லை. இப்படத்தின் மூல நூலில் தந்தை பற்றிய குறிப்புக்கள் இறுதியில் உள்ளன. ஆனால் இயக்குனர் நூலின் தழுவலாகவே இதனை பதிவு செய்துள்ளார். தந்தையர், ஆண்களுக்கும் குடும்பத்துக்குமான உறவுகள் மீதான விமர்சனமாகவே தான் இதனை கருதுவதாக இயக்குனர் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். இன்றைய குடும்பத்தில் ஆண்கள் ஒரு காட்சிப் பொருளாகவே காணப்படுகின்றனர். ஆண்கள் குடும்பத்தை ஒரு சமூக அந்தஸ்துக்குரிய பொருளாகவும், பாலியல் தேவைக்குரிய பொருளாகவுமே கொள்கின்றனர். இது ஜமேக்காவில் இருந்து யாழ்ப்பாணம் வரை வேறுபடவில்லை.

படத்தின் இறுதியில் இக்மர் "Why did you not want me, Mama?" எனக் கேட்டு தலையணையுள் முகம் புதைத்து அழுகின்றான். இது மிகவும் பயங்கரமான கேள்வி. இக்மரின் அகத் தேடலில் மரணம் பற்றிய கருத்துக்களுடன், இயக்குனரும் இந்த கேள்வியை எமது அகத்திலும் தேடவைக்கின்றார். விடை இலகுவானது எனினும், அது எழுப்பியுள்ள பாதிப்புக்கள் அதிகம். இதனால்தான் இப்படம் இதுவரை வெளிவந்த சிறுவர் பற்றிய படங்களில் மிக முக்கியமானது என விமர்சகர்கள் கருதுகின்றனர். இப்படத்துக்காக இயக்குனர் Lasse Hallstrom க்கு ஒஸ்கார் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டது. Anton Glanzelius இக்மராக சிறப்பாக நடித்துள்ளார். இப்படத்தின் மூல நூல் Mitt Liv Som Hund - My Life as a Dog , இதனை எழுதியிருப்பவர் Reidar Jonsson.

ஒரு குழந்தைப் பருவத்தின் கொடுமையான நினைவுகளின் இயல்பான பதிவு இது. இப்படத்தை ரொரண்ரோ பெரும்பாக நூலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். கட்டணம் இலவசம்.


**For all your Commercial, Official & Residential Moving**

- *Moving* (local & long distance)
- *Pick- up & delivery*
- *Courier service*




உங்கள் உள்ளூர் வெளியூர் இடமாற்றத் தேவைகள், பொருட்களை ஓர் இடத்தில் எடுத்து இன்னோர் இடத்தில் கொடுத்தல் போன்றவற்றை பாதுகாப்பாகவும் துரிதமாகவும் இடமாற்றம் செய்ய அழையுங்கள் *416.897.3195*



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 225    July 15, 2008

1. If A's together [A A] 2 3 4 5 6 7 8 9 10
   $= \frac{10!}{2!\,2!} = 907{,}200$ words can be formed.
2. t in the 1st place and other 4 letters from 7 = $7\,P_4 = 840$
   t also can occupy 4 other places.
   Therefore the total arrangement = 840x4 = 3360.
3. $V=x^2h$ [Let x be the width and h – the height]
   $98=x^2h$, $A=x^2+4xh$, $=x^2+4x.\frac{98}{x^2}$  $[h=\frac{98}{x^2}]$
   $A=x^2+\frac{4\times 98}{x}$, Differentiating $A^1=2x-\frac{392}{x^2}$
   $=\frac{2x^3-392}{x^2}$., For A to be minimum $\frac{2x^3-392}{x^2}=0$.
   $\therefore\ 2x^3=392,\ x=3\sqrt{196}=5.8$,
   $\therefore$ The dimensions are 5.8 x 5.8 x 2.9
4. $xy = 9,\ y=\frac{9}{x}$ Differentiating $y^1=\frac{-9}{x^2}$, Slope $=\frac{-9}{(-1)^2}$ = -9
   $\therefore$ Eqn is y = -9x + b, Since it passes thro. (-1, -9)
   y = --9 (--1) + b, --9 = a + b, b = --18.
   $\therefore$ Equation is y = -- 9x –18, 9x + y + 18 = 0
5. $\left(14/3\right).\left(10/2\right)$ = 364 x 45, =16,380 different teams

## Questions - 226 - August 01, 2008

1. If $y=\frac{1}{(x+1)(x+2)(x+3)}$, find the slope of the tangent to the curve at x=0
2. In Lotto 649, six numbers are choosen randomly without displacement from 49 numbers. You win 1st prize if you choose all six numbers that are drawan. What is the probability that you will win first prize?
3. Two cars are approaching an intersection. Car A travel west at 45km/h and car B travels north at 60km/h. Determine the rate of change of the distance between the two cars when car A is 0.6 km from the intersection and car B is 0.8 km from the intersection.
4. Differentiate $f(x) = \sqrt{1-\sin^2 x}$
5. Find the work done by a force acting in the direction of the of the vector a=(2,3,4) which moves an object from A(1,- 4,5) to B(2,-1,3). The distance is in metres.

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774**


**SMART TUTOR** *(Math & Science)*

*Classes by well experienced Tutor* - **Contact: (416) 278-4742/ (416) 335-1818**

**Grade 5 to Grade University students**

- Math
- Physics
- Chemistry
- General Science
- Applied & Academic Math
- Functions
- Calculus
- Finite
- Advanced Functions
- Geometry
- Algebra
- Homework Help

***Individual and group classes available at Markham and Scarborough east area***

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier Classes available at Scarborough & Stouffville

**CONTACT: 416 - 431- 6774** (Scarborough)
**647.831.0070** (Stouffville)


# கனடாவில் மனித நேயம் நம்பிக்கை ஸ்தாபனம் உதயமாகிறது

மனித நேயம் நம்பிக்கை ஸ்தாபனம் 1999ம் ஆண்டு இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதை தொடர்ந்து அதன் கிளைகள் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா ஆகியவற்றில் ஆதரவற்றவர்கள், உடல் மற்றும் உள்ளம் குறைபாடுடையோர், முதியோர், தொடரும் உள்நாட்டு சண்டையால் பாதிப்படைந்தோர் போன்றோருக்கு உதவவும், அவர்களின் துன்பதுயரத்தை குறைக்கவும் ஸ்தாபிக்கப்பட்டது.

இவர்கள் ஆதரவளிக்கும் திட்டங்களில் சில:
சிறுவர் விடுதிகள் - அநாதை மற்றும் ஆதரவற்ற சிறுவர்களுக்கானது

சக்தி இல்லம், செல்வா இல்லம் மற்றும் பையன்கள் விடுதி - இரத்மலானை
இளைஞர் யுவதிகளுக்கான மகாதேவா ஆசிரமம் - கிளிநொச்சி
மாணிக்கவாசகர் இளைஞர் தங்குமிடம் - மட்டக்களப்பு

உள, உடல் மேம்பாட்டு நிலையம்
உள, உடல் மேம்பாட்டு புனர்வாழ்வு சங்கம் - கிளிநொச்சி
சிவபூமி பாடசாலை - யாழ்ப்பாணம்

பார்த்தல், கேட்டல் குறைபாடுடையோர் விடுதி
இனிய வாழ்வு இல்லம்
முதியோர் இல்லம்
சிவபூமி முதியோர் இல்லம்
யோகர் சுவாமிகள் திருவடி நிலையம், கிளிநொச்சி

தொழிற்பயிற்சி நிலையம்
சித்திவிநாயகர் கல்லூரி விடுதி மற்றும் தொழிற்பயிற்சி நிலையம்.

கனடாவில் இயங்கும் அரசாங்க சார்பற்ற நிறுவனமாக கனடிய அரசாங்க சேவைகள் அமைச்சின் அங்கீகாரம் பெற்று வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் படைத்துள்ளது "மனித நேயம் ஸ்தாபனம்'. Revenue Canada வினால் தர்ம ஸ்தாபனம் என்ற அந்தஸ்த்துக்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் அதேவேளையில் ஜுலை 11ந்திகதி வெள்ளிக்கிழமை 100 விருந்தினர் முன்னிலையில் இவர்களது செயற்பாட்டு கூட்டம் ஆரம்பமானது.

"மனித நேயம்" இன் தலைவரின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியதை, அடுத்து மேற்படி இல்லங்களின், பார்வையாளர்களின் மனதை உருக வைத்த விவரண படக்காட்சி காண்பிக்கப்பட்டது. அடுத்து பெயர்பெற்ற கொடையாளியாகியும், விசேஷ விருந்தினருமான வினிப்பெக்கை (Winnipeg) சேர்ந்த Kathy Knowles அவர்களின் முக்கிய உரை நிகழ்த்தப்பட்டது. கானா நாட்டின் ஏழை சிறுவர்களுக்கு கல்வி அறிவூட்டல் மூலம் வசதி வாய்ப்பை காண உதவியதன் காரணமாக கானடாவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சர்வதேச மனித நேய செயற்பாட்டாளராவார் இவர். அன்றைய மாலையில் நடந்த இன்னொரு சிறப்பான நிகழ்ச்சி வாத்திய இசையும் கலாசார நாட்டியமும் ஆகும்.

இலங்கையில் தொடரும் உள்நாட்டு யுத்தத்தினை இட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, "மனித நேயம் ஸ்தாபனம்" இன் உறுதியான தொடரான செயற்பாட்டை விளக்கி காண்பிப்பதை நோக்காக கொண்டது அன்றைய செயற்பாடு.

மனித நேய ஸ்தாபனம், கடந்த சில வருடங்களில் உதவி தேவைப்பட்ட பலருக்கு கீழ் காணும் வகையில் உதவி புரிந்துள்ளது.

இரத்மலானை விடுதியில் தங்கியிருக்கும் 129 பையன்களும் பெண்களும் அனுமதிக்கப்படும் பொழுது பயங்கர பயப்பிராந்திக்கும், கவலைக்கும், துன்பத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகியிருந்தார்கள். அவர்களுடன் உறவாடி அன்பு செலுத்தி, பாசம் காட்டி, ஆலோசனை வழங்கி, கல்விகற்றல் உதவியும் செயயப்பட்டது. இன்று பெரும்பாலோர் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், வாழ்க்கையில் முன்னேறி, ஆசிரியர்களாகி, இதுபோன்ற ஸ்தாபனங்களில் உள்ள ஆதரவற்றவர்களுக்கு உதவ விருப்பம் கொண்டவர்களாகவும் உள்ளார்கள்.

ம.நே.ஸ். இனிய வளவு இல்லத்தில் உள்ள கேட்டல், பார்த்தல் குறைபாடுள்ள பிள்ளைகளின் பாவனைக்கு 26 Braille இயந்திரங்களை அன்பளிப்பு செய்துள்ளது. அதன் பின்னர் 7 பிள்ளைகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ளார்கள்.

சிவபூமி பாடசாலையில் உள்ள மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, பூட்டிய அறையில் முன்னர் வைக்கப்பட்டிருந்தார்கள். இன்று அவர்கள் கிட்டத்தட்ட சாதாரண வாழ்க்கை வாழுமளவிற்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பான விளக்கமான தகவல்கள், படங்கள், காணொளி படங்கள், சமகால நன்கொடைத்திட்டங்கள் பற்றிய தகவல்களை பெற விரும்புவோர் இவர்களது வெப் தளத்திற்கு செல்லவும்.

WWW.MANITHANEYAM.ORG
தொடர்புகளுக்கு: cantrust@manithaneyam.org

# “நல்ல சினிமா வந்தால் தமிழ் ரசிகர்கள் வரவேற்பார்கள்”

## நேர்காணல் - “சுப்பிரமணியபுரம்” இயக்குனர் சசிக்குமார்

தமிழ் திரைப்படத் துறையில் இன்று மிக அதிகம் பேசப்படும் நபர் சசிகுமார்தான். முன்னணி நடிகர்கள், தொழில்நுட்ப ஜாம்பவான்கள், இசையமைப்பாளர் என எந்தப் பெரிய பின்புலமும் இல்லாமல் சத்தமில்லாமல் வந்து, சாதனை செய்திருக்கும் “சுப்பிரமணியபுரம்” படத்தின் இயக்குநர். அதுமட்டுமல்லாமல் நடிகர், தயாரிப்பாளர், விநியோகஸ்தர் என “சுப்பிரமணியபுரம்” படத்தில் சசிகுமாரின் பங்களிப்பு மிக அதிகம். இயக்குனர்கள் பாலா, அமீர் இருவரிடமும் உதவியாளராக இருந்தவர். வெகுஜன வியாபார தமிழ் திரைக்குள் ஒரு சலனத்தை ஏற்படுத்தி இருக்கிறார் சசிகுமார்.

சசிகுமார் அலுவலகத்தில் விளம்பரம் இதழுக்காக சந்தித்தோம். முதலில் சசிகுமாரே பேசத் தொடங்கினார்...

**- சிவதாணு -**

சசிகுமார்: கனடா வாழ் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். இந்த நேர்காணல் பதிவு செய்யப்படும் இப்போது, என் படம் கனடாவில் வெளியாகி இருக்காது. ஆனாலும், இந்த நேர்காணல் அச்சில் வரும்போது படம் வெளியாகி இருக்கும். நீங்களும் பார்த்திருப்பீர்கள் என நம்புகிறேன். இனி நீங்க கேளுங்க சார்...

கேள்வி: உங்கள் குருநாதர்களைப் போல், முதல் திரைப்படத்திலேயே கவனிக்கப்படும் இயக்குநராக மலர்ந்துள்ளீர்கள். வாழ்த்துகள். முதலில் திரைத்துறையை நோக்கிய உங்கள் பயணத்தைச் சொல்லுங்கள்?

சசிகுமார்: சின்ன வயசில் இருந்தே சினிமா இயக்குனராக வேண்டும் என்ற கனவு என்னுள் வந்துவிட்டது. இந்த ஆசையை என்னுள் விதைத்தவர்கள் என்று இருவரைச் சொல்லலாம்... ஒருவர், மகேந்திரன் இன்னொருவர், பாலுமகேந்திரா. என்னை மதுரையில் இருந்து சென்னையை நோக்கி பஸ் ஏற்றியவர்கள் இவர்கள்தான். இந்த மேதைகளின் படங்களை தொடர்ந்து பல தடவைகள் பார்த்திருக்கிறேன். இவர்களைப் போல நாமும் யதார்த்தமான சினிமா எப்போது எடுப்போம் என்று ஏங்கி இருக்கிறேன். நான் சென்னைக்கு வந்து உதவி இயக்குனராக பணியாற்றிய முதல் படம் பாலா இயக்கிய “சேது”. அந்தப் படத்தின் தயாரிப்பாளர் என் சித்தப்பா. அப்போது பாலாவிடம் உதவி இயக்குனராக இருந்தவர் அமீர். அவர் தனியாக வந்து இயங்கிய “மௌனம் பேசியதே” படத்தில் நான் பணியாற்றினேன். அதற்குப் பிறகு அமீரோடு “ராம்”, “பருத்திவீரன்” இரண்டு படங்களிலும் வேலைப் பார்த்தேன். “ராம்” படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் போதுதான் “சுப்பிரமணியபுரம்” படத்துக்கான கதையை எழுத ஆரம்பித்தேன்.

கேள்வி: தமிழ் திரைப்பட இளைஞர்கள் என்றால், நிச்சயம் அவர்கள் கல்லூரி மாணவர்களாகத்தான் இருப்பார்கள். நீங்கள் அந்த வரையறையை மீறி, இளைஞர்களின் வேறு பகுதியைக் காட்டி இருக்கிறீர்கள். இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா?


சசிகுமார்: ஆமாம், நீங்கள் சொல்லுவது மிகவும் சரி. இளைஞர்களின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எடுக்கப்படும் படம் என்று தீர்மானமானதும் நான் முதலில் எடுத்த முடிவு, அது ஏற்கெனவே தமிழ் சினிமாவில் திரும்ப திரும்பக் காட்டப்பட்டு ஆகிவிட்ட இளைஞர் படமாக இருக்கக்கூடாது என்பதுதான். இளைஞர் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்று பல தமிழ் சினிமாக்களில் காட்டிவிட்டார்கள். நாம் அவை எல்லாவற்றில் இருந்தும் மாறுபட வேண்டும் என திட்டமிட்டு, இந்த கதையை உருவாக்கினேன். தமிழ் சினிமாவில் காட்டப்படாத இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை பதிவு செய்ய தீர்மானித்தேன். படிக்காம, வேலை வெட்டி இல்லாத இளைஞர் இங்கே அதிகம். அவர்களுடைய உளவியலைச் சம்பந்தப்படுத்தி படம் எடுக்கணும் என்று நினைத்தேன். அது படமாக இருக்ககூடாது, பாடமாக இருக்கணும் என்று விரும்பினேன். அதில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன் என்றுதான் நினைக்கிறேன். அவர்களுடைய இருட்டு வாழ்க்கையை சுப்பிரமணியப்புரத்தில் பதிவு செய்துள்ளேன்.

கேள்வி: ஏன் ஒரு முன்னணி நட்சத்திரம்கூட இல்லை?




சசிகுமார்: கதை இருப்பத்தியேழு வருடங்களுக்கு முன்னால், அதாவது 1980இல் நடக்கிறது. 1980 என்று ஓர் எழுத்தைக் காண்பித்துவிட்டால் போதும் என நினைக்காமல், 1980 காலகட்டத்தை அப்படியே மறு உருவாக்கம் செய்யவேண்டும் என ஆசைப்பட்டேன். அந்த காலகட்ட நடை, உடை பாவனைகளுக்கு யார் நடித்தால் நன்றாக இருக்கும் என யோசித்த போது, புதுமுகங்கள் நடித்தால் மட்டுமே சரியாக இருக்குமே என்று தோன்றியது. அப்படியே நடிகர்கள் தேர்வானர்கள். நிச்சயமாக ஏற்கெனவே படம் பண்ணிக் கொண்டிருக்கும் தயாரிப்பாளர்கள், இந்தக் கதையை படமாக எடுக்க முன்வரமாட்டார்கள். எனவே, அதற்கான முயற்சியில் ஈடுபடாமல் நானே தயாரிக்க முடிவு செய்தேன். ஒரு ரிஸ்க் எடுத்தேன். இன்று இப்படம் வெற்றியடைந்து இருக்கிறது.

ரசிகர்கள் விரும்புகிறார்கள் அதனால்தான் இதுமாதிரி படங்களைக் கொடுக்கிறோம் எனச் சொல்லிக்கொண்டு வந்தவர்கள் வாயடைத்து நிற்கிறார்கள். நல்ல படங்கள் வந்தால் தமிழ்



ரசிகர்கள் வரவேற்பார்கள் என்பதை “சுப்பிரமணியபுரம” மீண்டும் நிரூபித்திருக்கிறது.

கேள்வி: நீங்களே ஒரு கதாநாயகனாகத் தோன்றி, முதல் படத்திலேயே நடிப்பிலும் இறங்கி விட்டீர்கள்?

சசிகுமார்: அது ஒரு விபத்துதான். முதலில் நான் இந்தப் படத்தில் நடிக்கவேண்டும் என்று நினைக்கவில்லை. அந்தப் பாத்திரத்துக்கு ஒரு நடிகருடன் பேசினேன். அவர் ஒப்புக்கொள்ளாததால்தான் நானே நடித்தேன். சினிமாவைப் பொறுத்த வரைக்கும் கதைக்குத்தான் நாயகனே ஒழிய நாயகனுக்காக கதை இல்லை. ஆனால், தமிழ் சினிமா உலகில் இது நேர்மாறாக இருக்கிறது. இது அபத்தம். இந்த நிலை மாறவேண்டும்.

கேள்வி: “சுப்பிரமணியபுரம்” மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. எப்படி உணர்கிறீர்கள்?

சசிகுமார்: உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இந்த மாபெரும் வெற்றி முதலில் எனக்கு சின்ன கலக்கத்தைத்தான் உண்டாக்கியது. அடுத்த படத்தில் எதிர்பார்ப்பு இன்னும் அதிகமாகும். அதை நிறைவேற்ற இதைவிட சிறந்ததாக என் அடுத்த படம் இருக்கணும். கொடுக்க முடியுமா? ஆனால் இப்பொழுது அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டேன். இது எனக்கு சந்தோசமாக இருக்கிறது.

கேள்வி: அடுத்த படம் பற்றி....

சசிகுமார்: இப்போதே கதையை தயார் செய்ய ஆரம்பித்துவிட்டேன். “சுப்பிரமணியபுரம்” போல் அதுவும் ஒரு நல்ல யதார்த்த சினிமாவாகத்தான் இருக்கும் என்பதை மட்டும் இப்போது சொல்லிக்கொள்கிறேன்.


**ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது**

**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**BAYVIEW & ELGINMILLS**
**280,000 Richmond Hill**
கோவில், **Semi House +**
**Basement Income**

**YUNKYARD**
*5 Acre (Metal Scarp)*
*Yard with Big House*
*2 Family Income with Shop*

**Beach Summer Cottage Brick**
**House 40 Acre Farm**
**$300,000**
**HWY 48 (Markham Rd.)**

**Senior Future Home**
**Milton 5 Acre with**
**Hobby Farm**
**$380,000**

**Big land lots Bangalow, 3 bedroom House**
**Airport / Brampton Mississauga, $250 - 300,000**

வீடும் வியாபாரமும் *Business Zoning*

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

HOMELIFE HIGHER STANDARDS

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.





**SMILE**
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**
**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**
24 hrs, 365 days

## BASEMENT RENT

**MIDDLEFIELD & FINCH**

1 Large bedroom bsmt. apt. for rent. Sep. entrance, kitchen, large living room, full washroom, laundry. Close to TTC, mall, school, Aiyappan Temple. Avail. September 1st, 08.
தொடர்புகளுக்கு: 416.293.1777

**BIRCHMOUNT & ELLESMERE**

1 bedroom bsmt for rent. Sep. Entrance. Close to all amenities. Avail. immediately. Family /single lady preferred.
தொடர்புகளுக்கு: 416.262.4176

**BIRCHMOUNT & SHEPPARD**

3 Bedroom Walk-out bsmt. apt. for rent with all facilities. Close to mall, school, bus & stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MARKHAM & DENISON**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, Parking, cable, washer & dryer. All inclusive. Close to mall, school & bus. Available immediately. Call saturday & sunday.
905.249.4786/905.678.9876

**BELLAMY & EGLINTON**

Newly renovated 2 bedroom bsmt. apt. for rent. Sep.entrance, parking, cable, washer, dryer, all inclusive. Close to TTC, subway, mall, Tamil stores. Avail. September 1st, 08.
647.438.6887/416.709.1723

**NEILSON & FINCH**

2 Large bedroom walk-out & look-out bsmt. apt. for rent. Full washroom, living room, parking, cable, laundry. All inclusive. Close to school, bus. Avail. immediately.
416.297.9974/416.318.4256

**BELLAMY & ELLESMERE**

2 Bedroom bsmt. apt. for rent. Sep.ent. Parking, cable, laundry. Close to Mall, school, 24 hrs. bus service. Avail. September 1st, 08.
தொடர்புகளுக்கு: 416.289.6879

**SHEPPARD & MEADOWALE**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Large living room. Washer, dryer, cable & parking. Close TTC, HWY 401, Tamil stores. Avail. from August 5th.
416.282.6282/416.804.6782

**SCARBOROUGH GOLF CLUB & ELLESMERE**

Newly renovated 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, A/C, Laundry. Close to school, mall, Tamil stores. Avail. September 1st, 08.
தொடர்புகளுக்கு: 416.289.6492

**WARDEN & LAWRENCE**

One Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, washer. Close to TTC, mall, Tamil stores, library. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.808.0406

**McCOWAN & ELSON**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry, full washroom. Close to TTC, school, mall. Avail. immediately.
416.276.2618/416.271.3209

**MARKHAM & BRIMORTON**

2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Close to ttc, school, plaza, etc. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.289.6977

**McCOWAN & ELSON**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry, full washroom. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.0046

**MCCOWAN & 16TH AVE**

ஒரு அறை கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. immediately. சிறுகுடும்பம் அல்லது தம்பதியர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**MORNINGSIDE & SHEPPARD**

1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Cable, laundry. Avail. Immediately. Close to ttc, Scar. campus, stores, etc.
தொடர்புகளுக்கு: 647.302.8597

**NEILSON & FINCH**

2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry, utilities. Close to ttc, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.3713

**MIDDLEFIELD & DENISON**

2 bedroom bsmt apt. for rent. New house. Living room. Sep. entrance. Cable, parking, laundry. Room with attached washroom & meals if required in the main floor.
416.939.8656 / 905.471.5047

**McCOWAN & ELSON**

1 Bedroom bsmt. for rent. Sep. entrance, kitchen, living room, full washroom. Close to TTC & mall, School. Avail. immediately Ladies or couple preferred
416.837.0653/416.321.0336

**Brimley & Eglinton**

Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking. Utilities. Close to all amenities. Avail. August 1st.
416.757.3830/647.893.3830

**McCowan & Elson**

2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. September 1st, 08.
தொடர்புகளுக்கு: 416.737.3891

**WARDEN & SHEPPARD**

Newly renovated 1 bedroom walk-out bsmt apt. for rent. Bright & Spacious bsmt. Conveniently located, great condition. Close to TTC, schools, parks, stores. Family preferred. Avail. immediately.
416. 496-0050 /416.458.6012

**MIDDLEFIELD & DENISON**

2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to buses, schools, stores...
தொடர்புகளுக்கு: 905.201.4812

**KENNEDY & FINCH**

Basement இல் ஒரு அறையும், மேல்தளத்தில் ஒரு அறையும் வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு. வாடகை பேசித்தீர்க்கப்படும்.
416.828.6497 / 416.269.4654

**MCCOWAN & LAWRENCE**

1or 2 Bedroom bsmt for rent. Sep. Entrance, parking & laundry. Close to library, hospital, bus, tamil stores & school. Avail. September 1st, 08.
416.509.3555/416.737.8880

**MORRIS & ELLESMERE**

2Bedroom bsmt for rent. Sep. Ententrance, parking, cable, washer, dryer. Close to bus, school, etc. Avail. immediately.
416.283.7861 / 416.846.4382

**McLevin & Neilson**

2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, bus, school, tamil stores. Avail. immediately. Single or couple preferred.
416.286.2208 / 647.294.4939

**MARKHAM & LAWRENCE**

2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, school, mall etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.438.5448

**MORNINGSIDE & SHEPPARD**

Newly renovated 2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance with parking. Close to bus, mall & school. Avail. immediately.
416.269.3798/416.930.3798

**BRIMLEY & EGLINTON**

Newly renovated 2 large bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry, utilities inclu. Close to bus, schools, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.4173

**SCAR. GOLF CLUB & LAWRENCE**

1 large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, washer, dryer. Sep. entrance. Avail. August 01, 08. Close to ttc, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

## HOUSE FOR RENT

**MCCOWAN & LAWRENCE**

3 Bedroom house + 2 Bedroom bsmt with sep. entrance for rent. 4 Parking, 2 washer, 2 dryer, Nice backyard. 24 hours bus service -2 min. walk. Close to all amenities. Near Scarborough General Hospital. No pets, No smoking. Avail.immediately
தொடர்புகளுக்கு: 647.206.8145

**MARKHAM & STEELES**

4 Bedroom house for rent. 4 Washrooms, 2 garage, washer & dryer. Close to school, bus, No Frills. Avail. immediately.
416.450.9152/416.832.3977

## HOUSE FOR SALE

Private Sale

**Meadowale & Sheppard**

End unit freehold town-house for sale. 2½ years old. 3 Bedroom + den, 2½ washroom, 1 garage, 2 parking, large deck, all appliances, gazebo. Close to TTC, HWY 401. Asking Price $324,900. Open house this Sat & Sun 4-6 pm.
தொடர்புகளுக்கு: 416.208.5283

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கம் 21

## SHARING ACCOMMODATION

**FINCH & BRIDLETOWN CIR.**

2 Rooms available in Condo. - Sharing accommodation. Washer. dryer, Sep. washroom, parking. Avail. immediately. Close to 24 hrs. bus, stores, bank, hospital. etc. Individual or couple preferred.
416.499.6437 / 416.844.6437

## CONDO. FOR RENT

**WARDEN & FINCH**

1 Bedroom for rent in a 3 bedroom condo. Apt. Parking, TV, bed, washer & dryer. Avail. immediately. Close to bus, mall, Tamil stores.
416.697.3042 / 416.494.3042

## SPACE FOR RENT

**MIDLAND & FINCH**

Office space available for rent. $300 per month at 50 Silverstar Blvd.
Contact: 416.854.8354

## VAN FOR SALE

1999 Toyota Sienna LE Van for sale. Fully loaded. Asking $8500. Price bargainable.
Contact: 416.662.0592

## PRINTING PRESS FOR SALE

All digital equipment. Full colour copier. Single 4 different colour digital machine and paper cutter. For more details.
Contact: 416.854.8354

## SPACE FOR RENT

**Business Space for rent**

அலுவலகத்திற்கோ / சிறு தொழில் Tax / Mortgage / Insurance offices or cell phone office] அலுவலகங்களுக்கு ஏற்ற வசதியான இடம் KENNEDY & FINCH சந்திப்பிற்கு அருகாமையில் வாடகைக்கு உண்டு. Reasonable Rent. ஆர்வமுள்ளவர்கள்
தொடர்புகொள்ளவும்: 416.464.7228

## BUSINESS FOR SALE

**PORT UNION & HWY 401**

**40** இருக்கைகள் கொண்ட கனடிய காலை, மதிய உணவு வழங்கும் உணவகம் (Restaurant) விற்பனைக்கு உண்டு.
416.759.8070 / 416.283.1743

## JOB JOB JOB

**Part- Time Clean Job**

உணவகம் ஒன்றிற்கு **இடியப்பம் தயாரிக்கும் வேலை,** Rool, Patties, ரொட்டி தயாரிப்பு வேைலைகளில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: 416.288.0303

## SCRAP CARS WANTED

**Cash For Cars**

Dead or Alive. Fast Free Towing 7 days
உங்களிடம் இருக்கும் பழைய பாவிக்க முடியாத வாகனங்களை எங்கள் செலவில் எடுத்துச்செல்வோம்.
அழையுங்கள் : 647.400.1137



***விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com***

# ROOM RENT

**DANFORTH & EGLINTO**
One Room in main floor for rent. Laundry, parking. Close to bus, stores, 5 minutes to Kennedy subway. Single ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**MARKHAM & EGLINTON**
4 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Main floor. அதே Level இல் washroom உண்டு. Parking, laundry, cooking facilities. Close to TTC, school, shopping, தமிழ்கடைகள்.
தொடர்புகளுக்கு: 416.712.9787

**Markham &Steeles**
One Room in main floor for rent. Parking, laundry, sep. washroom, cooking facilities. Close to No Frills & bus. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.5974

**BIRCHMOUNT & EGLINTON**
பகுதியில் 2 அறைகள் கொண்ட APT. இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. தமிழ் வர்த்தக சேவைகள், 24 மணி நேர bus சேவை உண்டு. Kennedy Subway அருகில் உண்டு. Avail. September 01, 08
தொடர்புகளிற்கு: 647.828.5860

**KENNEDY & EGLINTON**
BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. தனிநபர் விரும்பத்தக்கது. Non smoker preferred. Close to bus, stores, subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.757.3303

**Kennedy & Ellesmere**
Kennedy Road இல் அமைந்துள்ளது. Basement இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, internet & phone. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**Finch & Bridletowne Circle**
1 Bedroom in main floor for rent. Parking & all facilities. Furniture optional. Students or officers preferred.
தொடர்புகளுக்கு: 416.502.3033

**Markham & Sheppard**
1 Bedroom in main floor for rent. Attached washroom, cable with TV & phone. Cooking facilities & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.0066
416.292.7552 / 647.219.1424

**MARKHAM & ELSON**
1 bedroom for rent. Parking, laundry. Avail. immediately. தனி நபர் விரும்பத்தக்கது. ஒரு நேரச் சாப்பாடு கொடுக்கப்படும். Rent $350. Close to bus, shopping, etc.
416. 951.0034 / 905.294.7026

**MARKHAM & ELLESMERE**
2 bedroom bsmt for rent. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Sep.washroom, parking, Laundry, etc. Avail. immediately. Close to Bank, TTC, School. Rent $300.
416.438.5249 / 416.888.0421

**Kennedy & Ellesmere**
1 Bedroom in 2nd floor available for rent. Outside parking, gas & electricity included. Rent $400. Avail. immediately
416.609.0349/416.725.3665

**MORNINGSIDE & SHEPPARD**
One bedroom for rent - Main floor. Sep. washroom, sharing kitchen, parking, laundry, utilities. inclu. Avail. immediately. Close to bus, shopping, Scarborough University, etc.
416.286.1282 / 416.605.1282

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

**PHARMACY & LAWRENCE**
2 நேரச்சாப்பாட்டுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. TVI, Tamil One ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, 24 hrs. bus, etc.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom for rent. Kitchen, washroom. Parking, etc. Close to TTC, stores, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**BRIMLEY & EGLINTON**
2 bedroom in bsmt for rent with all facilities. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to ttc, school, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.577.7757

**NEILSON & FINCH** பகுதியில் அமைந்துள்ள வீட்டில் அறை வாடகைக்கு உண்டு. Sep. washroom. உணவு விரும்பினால் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது. Close to bus, mall, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.9913

**MARKHAM & LAWRENCE**
வீட்டில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Master bedroom - main floor. சமையல் அறையைப் பகிர்ந்து கொள்ளலாம். (sharing kitchen). cable, parking. Rent $275. Close to TTC, school, shopping. Available Immediately.
416.439.4076 / 416.728.0807

மேலும் பக்கம் 20

# OFFICE SPACE FOR RENT

**அலுவலக இடம் வாடகைக்கு - MORNINGSIDE & SHEPPARD**

Luxury Office space for rent. Real Estate, Mortgage, Insurance offices போன்ற அலுவலகங்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. முதலாவது, இரண்டாவது மாடியில் Show Room அமைக்கக்கூடிய இடம். 200 தொடக்கம் 400 சதுரஅடி இடம் உண்டு. ***Pl. Call: Murale - 416.569.4065***

# APARTMENTS FOR RENT



***In a NEWLY Renovated High-Rise Apartment Building***
***Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

# அறிவித்தல்

ஸ்காபரோ, இல. 201 மார்க்கம் வீதியில் அமைந்துள்ள சந்திராஸ் உணவகம், தொடர்ந்தும் சந்திரா ஆனத்தராஜாவின் தனியான நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. இதற்கு வேறு பங்காளர்கள் கிடையாது. அத்துடன், எனக்கோ அல்லது எனது பிரதிநிதிகள் யாருக்கும், இதனுடன் எவ்வித தொடர்பும் இல்லை.

டில்யா குவிண்டஸ்

## புன்னாலைக்கட்டுவன், ஈவினை கனடாவாழ் மக்கள் ஒன்றுகூடலும், விளையாட்டு போட்டிகளும் - 2008

மேற்படி ஊர்களின் 2008ம் ஆண்டுக்கான ஒன்றுகூடலும், விளையாட்டு போட்டிகளும், 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நெல்சன் அன் பின்ஞ் (Neilson & Finch) சந்திப்பில் அமைந்துள்ள நெல்சன் பூங்காவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் இவ்வருடமும் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியோர்களுக்கான பல புதுமையான விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அத்துடன் மதியபோசனம் B.B.Q என்பனவும் இடம்பெறும். நிகழ்ச்சி முடிவில் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

மேற்படி ஒன்றுகூடலில் ஊர்மக்கள், ஆசிரியர்கள, பழைய மாணவர்கள, அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு நிர்வாக சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு: த. ரஞ்சன் 416.283..8275 / ச. சிவேஸ்வரன் 416.335.0761 /
மு. சின்னையா 416.321.8454

## நுணாவில்-கனடிய அபிவிருத்திச்சங்கம்

# ஒன்றுகூடல்

கனடா வாழ் நுணாவில் மக்களின் கோடைகால ஒன்றுகூடலும், விளையாட்டு போட்டிகளும் எதிர்வரும் ஆவணிமாதம் (August) 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 6.00 வரை நடைபெறவுள்ளது. அனைத்து நுணாவில் மக்களின் வருகையை அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

இடம்: SUNNYBROOK PARK, Area - 6 , Eglinton Ave./ Leslie Street
தொடர்புகளுக்கு: கதிர் - 416-399-7250 கேதா - 416-677-4707
ராஜன் - 647-203-0363

# சிவரஞ்சனி

## ஒரு பார்வை

சிறிதுகால இடைவெளியின் பின் எம்மவர் திரைப்படம் ஒன்றை பார்க்கும் ஆவலில் சென்றிருந்தேன். பன்னிரண்டு வருட காலவளர்ச்சி எம் திரைப் படத்திலும் ஓரளவாவது பிரதிபலிக்கும் எனும் என் எதிர்பார்ப்பு மிகுந்த ஏமாற்றத்தை தந்திருந்தது. சிறீமுருகனிற்கு இது முதற்படம் அல்ல. இத்துறையில் நீண்டகால முயற்சியிலிருப்பவர் அவர். அப்படியிருந்தும் ....

1. தலைப்புப் பாடல் அருமையான ஒரு முருகன் பாடல். இசையும் சரி பாடியவரும் சரி நிறைவாக செய்திருக்கின்றார்கள். ஆனால் அப்பாட்டிற்கும் படத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதுதான் புரியவேயில்லை. தயாரிப்பாளர் முருகபக்தர் என்ற



ஒரே காரணத்திற்காக மட்டுமே புகுத்தப்பட்ட ஒன்றாகவே உணரக்கூடியதாக இருந்தது. இப்படியான தேவையற்ற திணித்தல்கள் ஒரு திரைப்படத் தோல்வியின் முதல்படியாகும்.

2. படம் ஆரம்பித்தபோது கதை எங்கே நடக்கிறது என்பதில் ஒரே குழப்பம். கனடாவிலா அல்லது இந்தியாவிலா? வீட்டின் உட்பகுதி கனடா போன்றும் பேச்சுவழக்கு இந்தியாபோன்றும் எம்மை மிகவும் குழப்பியபின் இந்தியாதான் என்ற நிலைக்கு வரக்கூடியதாக இருந்தது. இ்.து மிகப்பெரிய ஏமாற்றமே. இது இத்திரைப்படத் தோல்வியின் அடுத்தபடி.

3. சிவரஞ்சனி---எமக்கு எந்த சம்பந்தமுமற்ற ஒரு கதாபாத்திரம். அதனாலேயே திரைப்படத்துடன் எந்த ஒட்டுறவும் எம்மால் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இது தோல்வியின் அடுத்தபடி.

4. இந்த கனேடிய மண்ணிலும் சரி இந்திய மண்ணிலும் சரி கலைஞர்களிற்கு குறைவில்லை. அப்படியிருக்க ஒரு போலித்தன்மையுடனான ஒரு நடன ஆசிரியர், நடனம் பயிலும் பிள்ளைகள்?????????. இதுபோன்ற சாதாரண விடயங்களிலாவது இயல்பைக் காட்டியிருக்கலாம். எத்தனையோ எமக்குத் தெரிந்த முகங்கள்....படத்தில் தலை காட்டுகிறார்கள். தமிழன் வழிகாட்டி செந்தி, கரு கந்தையா, தீசன், வயலின் ஆசிரியை, தயாபரன். இவர்கள் யார்? ஏன் வந்தார்கள்? இவர்கள் எங்கு வசிக்கிறார்கள்? எதுவுமே புரியவில்லை. இப்படி தேவையற்று தெரிந்தவர்களைக் காட்டினாலே படம் ஓடும் என்ற மலிவான முயற்சி தோல்வியின் அடுத்தபடியாகும்.

5. கதை 'திரைக்கதை... ஐயா! எம்முகத்தில் எத்தனை ஆயிரம் கதைகள் கொட்டிக்கிடக்கின்றன. ஆயிரமாயிரம் பிரச்சினைகள் கேட்பாரற்று அனாதையாய் நிற்கின்றன. அவையெதுவும் தங்கள் கண்ணில் படாது வேறு ஒரு சமுதாயத்தின் பிரச்சினை (பெண் சிசு கொலை, கட்டாய கல்யாணம்) கண்ணில் பட்டு அதை இப்படி எடுத்துரைக்க தாங்கள் ஆவல் கொண்ட மர்மமென்ன? அவர்கள் பிரச்சினைகளை எடுத்துக்கூறத்தான் எத்தனையோ ஊடகங்கள், திரைப்படங்கள் எல்லாவற்றையும்விட இருக்கவே இருக்கின்றன அந்த மெகா மெகா சீரியல்கள்? எம்மவர்கள் அதில்தானே ஆழ்ந்து சுயமுன்னேற்றம் மறந்து உழைக்கும் பணத்தையும் சிறுமுதலீடு செய்துவருகிறார்கள். இது போதாது என எண்ணி நீங்கள் இப்படி இன்னுமோர் நாடகத்தை தருவது என்ன நியாயம்? இவையும் நாடகத்தின் மன்னிக்கவேண்டும் இத்திரைப்படத் தோல்வியின் அடுத்தபடியாகும்.

படத்தில் சிவரஞ்சனியின் நடிப்பும் ஆங்காங்கே பின்னணியில் வரும் பாரதியார் பாடல்களும் நன்றாகவே இருந்தன. எத்தனை குறைகள் இருந்தாலும் தயாரிப்பாளரை ஒரு விடயத்திற்காக எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். அது அந்த திரைப்பட முடிவு. எம்மவர்களிடம் இல்லாத அந்த மனப்பக்குவம் வளரவேண்டிய மனப்பக்குவம். திருமணமான பெண்ணை அதிலும் ஒரு குழந்தையுடனான பெண்ணை குடும்பமே அன்புடன் ஏற்றுக்கொள்ளல்.... எம் சமுதாய சூழலில் மிக அவசியமான கருத்து. நன்றியுடன் எனது பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வோர் படைப்பாளியும் தான்சார்ந்து வாழும் சமுதாயத்தை அடிப்படையாக வைத்தே படைப்புக்களை தர முன்வருகிறார்கள். அதுதான் வெற்றியின் திறவுகோலும் தர்மமுமாகும். இப்படியான ஒரு விமர்சனம் சம்பந்தப்பட்டவர்களை புண்படுத்தும் நோக்குடன் எழுதப்படவில்லை. வருங்காலத்திலாவது இத்தவறுகள் இல்லாமல் எமது படைப்பொன்று வராதா என்ற ஆதங்கம்தான். தயாரிப்பிலுள்ள வலிகளும் சிரமங்களும் நான் உணர்வேன். இத்தனை சிரமப்பட்டு ஒரு தோல்வியை சந்திக்கவேண்டுமா?

ஒரு திரைப்படத்தோல்விக்கு மேலே நான் குறிப்பிட்ட காரணங்கள் மிகச்சாதாரணமானவையே. ஒரு தயாரிப்பாளரும் இயக்குனரும் நினைத்தால் இத்தவறுகளை சுலபமாக நிவர்த்திசெய்துவிட முடியும். ஆனால் ஒரு படைப்பின் தோல்வியில் பெரும் பங்கு வகிப்பவர்கள் யார் தெரியுமா?

படைப்பாளி, ஊடகங்கள், மக்கள்.

படைப்பாளி --- என் நண்பன் என் பிள்ளை என்று எண்ணாமல் திறமையானவர்களை ஒன்று சேர்த்து உபயோகிக்கும் புத்திசாலித்தனமும், எல்லோரிடமும் நட்புக்கரம் நீட்டும் இலகு மனமும், படைப்பைப்பற்றிய தெளிவான திடமான முடிவுகளுடன் இருத்தலும் படைப்பின் வெற்றியின் மிக முக்கிய காரணமாகும்.

மக்கள் ----- எமக்கென்றும் ஒரு கடமை உண்டென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். குறைசொல்லி ஒதுக்குவதல்ல நம் வேலை. ஆதரவளித்தலும் விமர்சித்து வளர்த்தலுமே இத்துறை வளர நாம் செய்யும் மிகப்பெரிய உதவியாகும்.

ஊடகங்கள்--- ஒரு படைப்பாளி எத்தனை சிரமத்தின் மத்தியில் ஒரு படைப்பை உருவாக்குகிறான் என்பது ஊடகத்திலுள்ளவர்களால் நன்கு அறியப்பட்ட விடயமே. ஆனாலும் சமுதாய நோக்கோடு படைப்பாளிகளை முன்னிறுத்தி பார்வையாளர்களை பார்க்கத்தூண்டும் அந்த பணியினை எந்த ஊடகமும் செய்ய முன்வருவதில்லை. ஊடகங்கள் நினைத்தால் மக்களிற்கு பாலமமைத்து படைப்பை பார்க்கவைக்கமுடியும். (உதாரணம்: சில வருடங்களின் முன்பு வந்த 'The red dod' எனும் குறுந்திரைப்படம் சிலமணிநேர ஊடக விளம்பரத்தின் உந்துதலால் ஆயிரமாயிரம் மக்களை உடனடியாக ஒன்றுகூடவைத்தமை நீங்கள் அறியாததல்ல. ஆக வெற்றிப்பாதையின் திறவுகோல் ஊடகத்தார் கையில். அவர்கள் மனது வைத்தால் எமக்கென ஒரு திரையுலகம் சாத்தியமே.

T. Sauntharajan
416-441-6134


# சிறீ சிறீ அம்மாவின் 54வது பிறந்த தின அழைப்பிதழ்

**இடம்:**
**Malvern Community Centre**
**30 Sewells Road, Scarborough**
**(Neilson & Sheppard)**
**Beside the Library,** நூல்நிலையத்திற்கு அருகாமையில்
ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மாலை 4:00 மணிக்கு விஷேட வேத மந்திரங்களுடன்
ஜென்ம தினம் ஆரம்பமாகும்.
**அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்**



இந்த (Day of Love) அன்புக்கான நாளை அனுபவிப்பதற்கு உங்களை அம்மா அழைக்கிறார்.
"அந்தக் குழந்தையின் பிறப்பால் பூதேவி புளங்காகிதம் அடைந்தாள். மற்றும் ஒரு முறை அந்த ஜெகத்ஜனனியை பெற்றெடுக்கும் பேறு தனக்குக் கிடைத்ததில் பரவசம் அடைந்தாள். நம் எல்லோரையும் பெற்றெடுத்த தாயானவள் ஒரு தாயின் மடியில் கிடந்து தலாட்டுப் பாடல்களைப் பாடவைத்துக் கொண்டார்"

**விஷேச தீட்சைகள் மகாதீட்சை எடுத்தவர்களால் வழங்கப்படும்**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3.00 மணிக்கு தீட்சைகள் வழங்கப்படுகின்றன.


**வருக வருக முக்தி அடைக!**
**மேலதிக விபரங்களுக்கு: 905-940-4767, 416-638-0687**
**905-887-9835, 416-431-6604**
Oneness for the Goldenage.



# SAFETY TRUCKS
## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course




20 Years Canadian
Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

193

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





காலம் பிழைத்தால்?.

வின்ரரெது? சம்மர் எது?.
மழைக்காலம் எது? வெயில்காலம் எது என்று தெரியாதளவிற்கு கோடைகால குதூகல கொண்டாட்டத்திற்கு காலநிலை விட்டுக்கொடுக்கவில்லை.



ஒன்றுகூடலுக்கு ஆட்டுத்துடையும் கையில் குடையுமாகப் போகவேணுமென்று மெல்லமாக செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல ஆட்டிலறி அன்னம்மா சிரிக்க உலகருக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லை.

கடந்த வாரம் நடந்த கூடிய ஒன்றுகூடல்கள் மழையால்... வெந்தது பாதி வேகாதது பாதி சாப்பிட்டவர் பாதி சாப்பிடாதவர் பாதி. குடித்தது பாதி குடிக்காதது மீதி.



சமயங்கள் தேவையா? தேவையில்லையா? என அவ்வப்போது வானெலிகள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகளில் சர்ச்சைகள் தர்க்கங்கள் வந்தாலும் ஆலயங்களில் கொடியேற்றம், தேர், தீர்த்தம், பூங்காவனம் கலகலப்பாக நடக்கின்றது. எந்தவொரு ஆலயத்திலும் அன்னதானத்திற்கு குறைவில்லை. எங்களுக்கென்ன சாப்பாட்டிற்கு வழியில்லையோ. கோவில்லை வாங்கிச்சாப்பிட என்று சொன்ன ஆட்டிலறி அன்னம்மா, செல்லம்மா என்னெண்டு தெரியேல்லை பிரசாதமெண்டால் அது ஒரு தனி ருசியென்று



வரசித்தி விநாயகர் ஆலய தேரிலன்று மரநிழலில் நின்று சாப்பிடும்போது சொன்னதைக்கேட்டு ராசம்மா தன் மனதுக்குள் சிரித்துக்கொண்டா. வயது வேறுபாடின்றி மக்கள் வரிசையில் வந்து பிரசாதம் பெற்றது மட்டுமின்றி உணவை விரயமாக்காமல் வீணாக்காமல் சென்றது நல்லொரு புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றது. மாணவர்களும் இளைஞர்களும் தொண்டர்களும் இந்தமுறைகளை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும்.

இன்னும் 2 - 3 வாரம்தான். பழையபடி குளிர், பனி, உப்பு... பழைய குருடி கதவைத் திறவடி என்பதை போல வந்துவிடும்.



செக்கண்ட்புளோர் செல்லம்மா அடிக்கடி தனது செல்போனை டயல் பண்ணிக் கொண்டேயிருந்தா. லைன் கிடைத்த பாடில்லை. அன்னம்மாக்கா கொழும்பிலையிருந்து உலகம் முழுக்க சார்க் மகாநாட்டைப்பற்றி செய்தி போகுது. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடுகளுக்கு லைன் கட் பண்ணிப்போட்டினம்.

உலகநாடுகளுக்கு கொண்டாட்டம் உள்ளூராக்களுக்குத் திண்டாட்டம் என்று சொல்லி பெருமூச்சுவிட்டார் உலகர்.



அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஒருபுறம். தீவிரவாதத்தை ஒழிப்போம் எண்டு சொல்லீனம். ராத்திரி கச்சதீவிலையும் கலாட்டாவாம் என முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா.
மீனவர்கள் இடையிடை தங்கிப்போகும் இடத்திற்கே இந்தச் சண்டையென்றால் நாம் பிறந்து வளர்ந்த மண்ணை அமைதி காக்கவந்து அழிவைக்காட்டி துவம்சம் செய்தபொழுது ஒருவரும் கேட்கவில்லை?.

முருகேசர் முதியோரில்லத்திலை என்று அடிக்கடி சொன்ன ஆட்டிலறிஅன்னம்மா இப்போ அடிக்கடி முதியோரில்லங்களுக்கு போய் வருகிறா. அன்னம்மா மட்டுமல்ல பலருக்கும் முதியோரில்லங்களின் தேவையும் அவசியமும் புரிகிறது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என உலகர் இடையிடையே படிக்கப்போகும்போது ஆசிரியர் கூறியது சாதுவாகக் காதில் விழுந்தது.




யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

HERE IS YOUR CHANCE TO WIN

$359,900



Neilson/Mclevin
Well Maintained, Full Brick
4 Br Detached, Finished Bsmt
Engineered Hardwood, Good Location

$359,900



Neilson/Mclevin
Beautiful Detached with 2b/r Bsmt Apt.
Granite Counter top, Freshly Painted
Good Location

வெல்லப்போவது




யாரு?

Register With Us Now




300 Front Street

$169,900



Neilson/Mclevin
2 Bedroom Condominium
corner Unit, 24 Hr Security
2 Parking Spaces , Good Location

$134,900



Finch/Pharmacy
Very Good Location
Walking Distance Shopping
Corner Renovated Unit
Large Balcony, Close To All Amenities

$544,000



Mccowan/Highglen
Good Location, Prestigious Neighborhood
5 Bedrooms, 2900 Sq.Ft, Potlights,
9 Ft Ceiling, Interlocked Driveway
Approx 2900Sqft

1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969

*Independently Owned and Operated *Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# “கார்பெட் பாம்பிங்” தமிழ் திரையுலகின் புதிய அவதாரம்?



பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கும் ஐந்து கோடியே அசாதாரணம் என்றிருந்தது தமிழ் திரைப்பட தயாரிப்பு செலவு இன்று ஐம்பது - நூறு கோடி ரூபாய் என்பதே சாதாரணமாகி விட்டது. எம்.ஜி.ர்., சிவாஜி காலங்களில் ஒரு திரைப்படத்துக்கு அதிகபட்சமாக ஒற்றை இலக்கத்திலேயே “பிரிண்ட்கள்” போடுவார்கள். அவை மாநகரங்கள், பிறகு நகரங்கள், அதன்பிறகு சிறிய நகரங்கள், கடைசியில் சிற்றூர்கள் என்று ஊர் ஊராக மெல்ல பயணப்படும். ஆனால், இன்று 1000 “பிரிண்ட்கள்” சர்வ சாதாரணமாகிவிட்டது. ஒரே நாளில் ஒரே நேரத்தில் உலகம் முழுக்க தமிழ் திரைப்படம் வெளியாகிறது. தமிழ் திரைப்படத் துறையின் வியாபார எல்லை, அதன் ஆரம்பகால நாயகர்களான தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா போன்றோரின் கற்பனைக்கே எட்டாத உயரத்தில் நிற்கிறது இப்போது.
எப்படி இது சாத்தியமானது?

**- ஓர் அலசல்!**



**பிலிம் நியூஸ் கிருஸ்ணன்**

“எல்லாற்றையும் ஒரே வார்த்தையில் சொல்வது என்றால், அந்த வார்த்தை “கார்பெட் பாம்பிங்” தான்” என்கிறார்கள் தமிழ் திரைப்பட விநியோகஸ்தர்கள். விநியோகத்தின் இந்த புதிய உத்தியுடன் ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித் என்னும் மந்திரச்சொற்களும் இணையும் போது கோடம்பாக்கத்தின் வியாபார எல்லைகள் உலகளாவிய அளவில் விரிகின்றன.

## எப்படி?

முதலிலேயே சொன்னதுபோல் எம்.ஜி.ர்., சிவாஜி காலங்களில் ஒரு திரைப்படத்துக்கு ஒற்றை இலக்கத்திலேயே “பிரிண்டகள்” போடுவார்கள். தமிழ் திரைத்துறையினர் மொழியில் சொன்னால், “பெட்டி”. அது வருடக்கணக்காக ஓடி லாபத்தைச் சம்பாதித்துத்தரும். சில வெற்றிப்படங்கள் மூன்று வருட தீபாவளியைக் கண்டிருக்கின்றன. அதன்பிறகு 25 - 50 “பிரிண்ட்கள்” வரை போடப்பட்டன. அவை 100 நாட்கள், 150 நாட்கள் என ஓடும். 50 - 75 - 100 நாள்கள் ஓடினால்தான் அது வெற்றிப்படமாகவும் தயாரிப்பாளருக்கு நஸ்டம் தராததாகவும் கணிக்கப்பட்டது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் ஒரு திரைப்படம் ஐம்பது 50 நாட்கள் ஓடினாலே அதிசயம். 100 நாட்கள் ஓடினால் அது சாதனை. அதிகபட்சமாக நான்கைந்து வாரங்கள் ஓடினால் பெரிய விசயம் என்றாகிவிட்டது. நல்ல தரமான திருட்டு டிசிடிக்கள், இணைய டவுன்லோடுகள் என்று திரைப்படம் வெளியான பத்து நாட்களுக்குள் வீட்டுக்குள்ளேயே மிகக்குறைந்த செலவில் அந்தத் திரைபடத்தைப் பார்ப்பதுக்கான வாய்ப்புகள் அதிகரித்துவிட்டன. கமலஹாசனின் “தசாவதாரம்” வெளியான மூன்றாவது நாள் அந்தப் படத்தின் டிவிடி 25 ரூபாய்க்கு சென்னை தெருக்களில் விற்பனையானது.

இதனாலும் மக்களின் வேகமாக மாறிவரும் ரசனையாலும் ஒரு திரைபடம் வெளியான மூன்றாவது வாரமே அது பழைய படமாகிவிடுகிறது. அப்போது அந்தப் படத்தைப் பார்க்கும் ஆர்வம் மக்களிடையே குறைந்து விடுகிறது. எனவே, முதல் பத்து நாள்களுக்குள் போட்ட முதலை எடுத்துவிடுவது எனத் திட்டமிடுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

இதற்காக அறிமுகமாகியிருக்கும் புதிய உத்திதான் “கார்பெட் பாம்பிங்.” “கார்பெட் பாம்பிங்” என்பது போர்க்காலங்களில் பயன்படுத்தப்படும் வார்த்தை. ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது மாநிலம் அல்லது நாட்டின் இரண்டு இடுக்குகளைக்கூட விடாமல் அழிக்கும் வகையில் குண்டுகளை வீசும் போர் முறை அது. இதே பாணியில்தான் இன்றைக்கு தமிழ் திரைப்படங்களின் விநியோகிக்கப்படுகின்றன. அதாவது ஒரு படத்துக்கு அதிக “பிரிண்ட்களைப்” போட்டு, முடிந்த வரைக்கும் மாநகரங்கள் தொடங்கி சின்னச்சின்ன ஊர்கள் வரைக்கும் எல்லா ஏரியாக்களிலும் ஒரே நேரத்தி வெளியிடுவது. குறுகிய காலத்தில் அதிக லாபத்தை எடுப்பது என்பதுதான் இதன் இலக்கு.

இதைச் சாத்தியப்படுத்த இவர்கள் குறிவைப்பது, படம் வெளியான முதல் நாள் முதல் காட்சி பார்ப்பதைக் கௌரவமாக நினைக்கும் ரசிகர்கள் கூட்டம்தான். ரசிகர்களின் இந்த எதிர்பார்ப்பைப் பயன்படுத்தி டிக்கெட் விலையையும் ஏறுக்கு மாறாக ஏற்றுகிறார்கள். சம்பந்தப்பட்ட நட்சத்திரங்களின் தீவிர ரசிகர்களுக்கு மட்டுமல்லாமல் சாமானிய ரசிகர்கள் மத்தியிலும் இபொழுது இந்த எதிர்பார்ப்பு அதிகரித்திருப்ப தால், படம் வெளியான ஆரம்பக்கட்ட பரபரப்பிலேயே அதிக லாபத்தை எடுத்துவிடுவது தயாரிப்பாளர்களுக்கு மிகச்சுலபமாக இருக்கிறது.

தமிழகத்தில் சனி, ஞாயிறு கிய இரண்டு விடுமுறை நாள்களில்தான் பெருவாரியான அரங்கங்களில் கூட்டம் அலை மோதும். அன்றைக்கு மட்டும் ஒரு நாளில் எட்டு காட்சிகள் வரை திரையிடப்படுகிறது. ஒரு தியேட்டரில் 1000 இருக்கைகள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உதாரணத்துக்கு, டிக்கெட் விலை சராசரியாக 100 ரூபாய் என்றால் ஒரு நாளைக்கு எட்டு லட்ச ரூபாய் வசூல்! சனி, ஞாயிறு இரண்டு நாளும் சேர்த்து 16 லட்ச ரூபாய்! பிற 5 நாட்களிலும் மொத்தமாக 6 லட்ச ரூபாய் வசூல். ஆக எவ்வளவுதான் குறைத்து மதிப்பீடு போட்டாலும் இரண்டு வாரத்துக்குள் ஒரு தியேட்டருக்கு 30 லட்ச ரூபாய் வசூல் செய்துவிடும். என்றால் 100 “பிரிண்ட்கள்” போட்டு ஓடும் படத்துக்கு, தியேட்டர் மூலமாக முதல் இரண்டு வாரத்தில் மட்டும் சர்வசாதாரணமாக 30 கோடி ரூபாய் வந்துவிடும்!

டிக்கெட் விற்பனை மூலமாக வரும் இந்த வருவாய் தவிர பாடல்கள் குறுந்தகடு, மொழி-மாற்றம், சாட்டிலைட் உரிமை போன்ற பல்வேறு உரிமைகள் விற்பனை மூலம் வரும் வருவாய் மிகப்பெரியதாக இருக்கும். இந்த மரபான வியாபாரமுறைகளைக் கடந்து “இன் பிலிம் விளம்பரம்” என்ற புதிய உத்தியும் தமிழ் திரைப்பட துறைக்குள் கால் பதித்துள்ளது.

படத்துக்குள் வரும் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களின் விளம்பரங்கள் தான் அது. படம் வெளியாவதற்கு முன்பே படத்தில் வரும் தங்கள் விளம்பரத்துக்கான பணத்தை அந்த நிறுவனங்கள் கொடுத்துவிடுகின்றன. மேலும் திரைப்பட சுவரொட்டிகள், பத்திரிகை விளம்பரங்கள் ஆகியவற்றிலும் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள கார்பரேட் நிறுவனங்கள் பணத்தை வாரி யிறைக்கின்றன. இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு தமிழ் திரைப்படம் சாதாரணமாக 25 - 50 கோடி ரூபாய் வியாபாரத்தைத் தொட்டுவிடுகிறது.

“சிவாஜி”யில் சங்கரும் “தசாவதாரம்” படத்தில் ஆஸ்கர் ரவிச்சந்திரனும்தான் இந்த முறையை தமிழ் திரையுலகுக்கு அறிமுகம் செய்தார்கள். “சிவாஜி”க்கு கிட்டத்தட்ட 1200 “பிரிண்ட்கள்” வரைப் போடப்பட்டன என்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 275 “பிரிண்ட்கள்” ஆந்திராவுக்கு 260 “பிரிண்ட்கள்” கேரளாவுக்கு 85 கர்நாடகாவுக்கு 80 இந்தி ஏரியாவுக்கு 400 இது தவிர வெளிநாடுகளுக்கு 190. சென்னையில் மட்டும் ஒரே நேரத்தில் 40க்கும் மேற்பட்ட தியேட்டர்களில் “சிவாஜி” வெளியானது. மாயாஜால் திரையரங்கில் உள்ள எல்லா தியேட்டர்களையும் சேர்த்து ஒரு நாளைக்கு 45 காட்சிகள் வரை காண்பித்திருக்கிறார்கள். ஒரு டிக்கெட்டின் விலை 210 ரூபாய். ஆனாலும், டிக்கெட் கிடைக்காமல் திரும்பியவர்கள் கூட்டம் முதல் இருபது நாள்கள் வரைக்கும் குறையவில்லை.

தமிழ் நாட்டில் இருந்து வெளிநாடுகளில் படங்களை வெளியிட்டு நிறைய சம்பாதிக்கலாம் என்பதை முதலில் கண்டுபிடித்தவர் கமலஹாசன் தான். ஆனால், அதில் முதலில் முத்திரை பதித்தவர் ரஜினிகாந்த். ஜப்பானில் ரஜினியின் “முத்து” வெற்றிவாகை சூடியபிறகு அமெரிக்கா, கனடா என்று அவரது படங்களின் ராஜ்ஜியம் விரிய ரம்பித்தது. இதனால், “சிவாஜி” படம் வெளிவந்தபோது, அதன் தயாரிப்புச் செலவு மற்றும் அது ஈட்டிய தொகை இரண்டுமே தமிழ் சினிமாவுக்கென்று இருந்த வியாபார எல்லையை இடித்துத் தள்ளியது. “சிவாஜி”யின் தயாரிப்பு செலவு 80 கோடி! வசூல்... நூறு கோடிக்கு மேல்!

திரைப்படம் வெளியான முதல் இரண்டு வாரங்களில் மொத்த பணத்தையும் அள்ளிவிடுவது என்ற புதிய கருத்தாக்கம் தமிழ் திரையுலகில் மிகச் சிறப்பான முறையில் “சிவாஜி”யில் காலூன்றியது.

“சிவாஜி” யைத் தொடர்ந்து “கார்பெட் பாம்பிங்” விநியோக உத்தியப் பின்பற்றி வந்தது “தசாவதாரம்.” இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர் வெளிப்படையாகச் சொல்லும் கணக்குப்படியே இதற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட “பிரிண்ட்கள்” போடப்பட்டுள்ளன. இந்தப் படம்தான் முதன்முதலில் வெளிநாடுகளில் முத்திரையை மிக அழுத்தமாகப் பதித்த தமிழ்ப்படம்.

கனடாவில் 50 “பிரிண்ட்கள்” போட்டு வால்ட் டிஸ்னி விநியோகம் செய்தது. தமிழ்ப்பட சரித்திரத்திலேயே முதல் முறையாக “தசாவதார”த்தில் நிகழ்ந்தது. நியூயார்க் நகரில் ஐ.நா. சபை அதிகாரிகளுக்காக இப்படத்தின் சிறப்புக்காட்சி போட்டுக் காண்பிக்கப்பட்டு, அவர்கள் கமலின் ஜார்ஜ் புஷ் வேடத்தைக் கண்டு ரசித்தார்களாம். எல்லாவகையில் தமிழ் திரை உலகம் அடுத்தகட்டத்துக்கு சென்றுவிட்டது “தசாவதார”த்தில் உறுதியானது. இப்படம் வெளியாகாத நாடுகளே இல்லை எனலாம்.

துபாய், மலேசியா, லண்டன், கனடா, துருக்கி, ஹாலந்து, தாய்லாந்து என இந்தியாவுக்கு வெளியே மட்டும் 100 நகரங்களில் 210 “பிரிண்டுகள்” போடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் மட்டும் 48 நகரங்களில் படம் வெளியாகியுள்ளது. “கேரளாவில் மோகன்லால், மம்மூட்டி போன்ற பெரிய நட்சத்திரங்களின் படங்கள் 100 நாள்கள் ஓடி எடுக்கும் வசூலை, முதல் மூன்றே நாள்களில் இந்தியா மற்றும் வெளிநாட்டு வியாபாரம் எல்லாவற்றையும் சேர்த்து தசாவதாரம் கடந்து விட்டது” என்கிறார் “தசாவதாரம்” தயாரிப்பாளர் ஆஸ்கர் ரவிச்சந்திரன்.

“விநியோகஸ்தர்களின் புள்ளி விவரங்களின்படி பார்த்தால் ஆந்திராவில் மட்டும் முதல் இரண்டு வாரங்களில் கிட்டத்தட்ட பத்து கோடியை வசூல் செய்திருக்கிறது “தசாவதாரம்”. கேரளாவில் முதல் வார வசூல் 2 கோடி. வெளிநாடுகளிலும் இந்தப் படம் பல வியாபார சாதனைகளை முறியடித்து வருவதாகச் சொல்கிறார்கள். ஆக மொத்தத்தில் முதல் மூன்று வாரங்களில் மட்டும் தசாவதாரம் 100 கோடி வசூல் செய்திருக்கிறது” என்று உற்சாகமாகப் பேசுகிறார் ரவிச்சந்திரன்.

ஏற்கெனவே படத்தின் பாடல்கள் குறுந்தகடு விற்பனை உரிமையின் மூலமாக 2 கோடியும் சேட்டிலைட் உரிமையை கலைஞர் தொலை காட்சிக்கு விற்றதன் மூலமாக 4.5 கோடியும் வந்து விட்டது. நீங்கள் இந்தக் கட்டுரையை படித்துக் கொண்டிருக்கையில் எல்லாம் சேர்த்து மொத்த வசூல் 150 கோடியைத் தாண்டியிருக்கலாம். படத்தின் மொத்த பட்ஜெட் 60 கோடி ரூபாய் என்றால் லாபம் எவ்வளவு, நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள்?

மிகப்பெரிய இந்திய திரையரங்குகள், வெளிநாட்டு உரிமை என்று பறந்து விரிந்த ராஜ்ஜியத்தைத் தன் கையில் வைத்திருக்கும் இந்தி திரைப்பட உலகமே 100 கோடி வியாபாரத்தைத் தாண்டுவது கிடையாது. அந்த விடயத்தில் தமிழில் ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய போக்கு, இந்திய திரைப்பட உலகுக்கே வழிகாட்டி எனலாம்.

குசேலன் பாடல்கள் குறுந்தகடு வெளியீட்டு விழா வில் பேசிய ரஜினிகாந்த், “மலையைத் தூக்கிக் காட்டிவிட்டு (சிவாஜி) கடப்பாரையைத் தூக்கிக் காட்டினால் மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்று யோசித்தேன்” என்றார். ஆனால், அவர் கடப்பாரை என்று குறிப்பிட்ட “குசேலன்” திரைப் படத்தின் தியேட்டர் உரிமைகள் மட்டுமே சுமார் 63 கோடிக்கு வியாபாரமாகி இருக்கிறது. இந்தத் திரைப்படத்தின் பாடல்கள் குறுந்தகடு உரிமை விற்பனை 2.5 கோடியைக் கடந்து விட்டது. அதை வாங்கியிருக்கும் நிறுவனம் வாங்குவதற்கு முன்பே 75 லட்சம் ரூபாய்க்கு “டவுன்லோடு” செய்து தரும் நிறுவனங்களுக்கு விற்றுவிட்டது. மற்றவைகளை எல்லாம் சேர்த்து “குசேலன்” முதல் கட்ட விற்பனையில் 100 கோடியை எட்டிவிட்டது என்கிறார்கள். இதற்கிடையில் ரஜினி மகள் சௌந்தர்யா எடுத்துவரும் “சுல்தான் தி வாரியர்” என்ற அனிமேஷன் படம் விரைவில் வெளிவருகிறது. இந்தப் படம் சுமார் 1300 பிரிண்ட் வரை போடப்பட்டு உலகளாவிய அளவில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவும் 100 கோடியைத் தாண்டி வியாபாரமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ரஜினி மற்றும் கமலஹாசன் என்ற இரண்டு குதிரைகளின் மீது பணத்தை வாரியி றைக்க உற்சாகமாக முன்வருகிறார்கள் தயாரிப்பாளர்கள். ரஜினியின் அடுத்தப் படமான “ரோபோ”வை ஐங்கரன் நிறுவனமும் ஈரோஸ் மல்டி மீடியாவும் தயாரிக்கின்றன. இதன் பட்ஜெட் 100 கோடியைத் தாண்டும் என்கிறார்கள். கமல்ஹாசனின் அடுத்த படமான “மர்மயோகி” பிரமிட் சாய்மீராவிடம் இப்போதே 150 கோடிக்கு ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது.

ஆனால், இந்த முத்திரைகளைப் பதிப்பவர்கள் பெரும்பாலும் முன்னணி நடிகர்கள்தான். “சுப்பிரமணியபுரம்”, “பருத்திவீரன்”, “வெயில்”, “காதல்” போன்ற வெற்றிப் படங்கள் ஐம்பது - நூறு நாள்கள் ஓடினாலும் இந்த வியாபார எல்லையைத் தொடுவது சிரமம்.

இப்பொழுது தெரிகிறதா, மீண்டும் மீண்டும் தோற்றாலும் பெரிய நடசத்திரங்களின் மேலேயே தயாரிப்பாளர்கள் ஏன் பணத்தை முடக்குகிறார்கள் என்று?

# உள்ளத்தின் கதவுகள் கண்கள்



எமது உடம்பின் முக்கிய உறுப்பு கண்கள். அவை பார்வைக்கு உதவுவதுடன், படிப்பதற்கும், நடமாடுவதற்கும், மற்றவர்களை எடை போடுவதற்கும் உதவுகின்றன. முகத்திற்கு வனப்பையும் வசீகரத்தையும் கொடுப்பவை அவை. காதளவு ஓடிய கண்கள், நீண்ட கண்கள், நினைப்பை நிலைப்படுத்தும் மீன் போன்ற கண். மருட்சிக் கண், வாக்குக்கண், மாறுகண், கோழிமுட்டைக்கண் (பெரிது), கடுகுக்கண் (சிறிது) என்பனவும் உண்டு. கண்ணிலான் பெற்றிழிந்தான் என்பதினால் கண்ணின்மகத்துவம் விளங்குகின்றது. கண்பார்வை இல்லாத வாழ்க்கை இருட்டு வாழ்க்கை. ஆனாலும் கண்பார்வை இல்லாதவர் சாதாரண மக்கள் போலவே நடமாடுகின்றனர். ஆட்சி அதிகாரத்திலும் அவர்கள் (திருதராட்டினன்) இருந்ததுண்டு.பார்வையில்லாத கண் - புண் எனப்படுகின்றது. கண்ணாலேயே கதை பேசுபவர்களும் உண்டு. கண்கள் பேசும் கதைகள் ஆனந்தம். உயரிய பொருள்களை கண்ணிற்கு உவமை கூறுவதுமுண்டு. இராமன் காடு செல்ல வேண்டும் என்று வரம் கேட்க கைகேயிடம் அவன் என் கண், என் உயிர், நாடு துறக்கமையை நயந்தருள் என்று இரங்கி ஏங்குகின்றான் தசரதன்.

**நா.க.சிவராமலிங்கம்**

கண் என்ற உறுப்பின் முக்கிய பகுதி விழியாகும். இமைகளும், கண்ணீரும் விழிகளை பாதுகாக்கின்றன. இவை கண்ணின் விழிகளை ஈரப்பசையுடன் வைத்திருப்பதால் தூசியும் பிறபாதிப்பும் ஏற்படாமல் கண்கள் பாதுகாக்கப்படு கின்றன. கண்ணீர் விழிகளுக்கு முக்கிய பாதுகாப்பளிக்கின்றது. இளமையில் கண்ணீர் அதிக அளவில் சுரக்கின்றது. ஆனால் முதுமையில் கண்ணீர் சுரப்பது குறைவதால் கண்கள் உணர்ந்து விடுவது போன்ற உணர்வு உண்டாகும். கண்ணீர் நிறைந்து வழிவதாலும் கண்களுக்கு ஆபத்து உளது. கண்களுக்குரிய அப்பியாசங்களும் உள்ளன. இவற்றை செய்வதன் மூலம் கண்களின் ஆரோக்கியத்தைப் பேணலாம்.

நேர்கொண்ட பார்வை, பக்கப் பார்வை, கள்ளப்பார்வை, கபடப்பார்வை, அதிகாரப் பார்வை, ஆணவப்பார்வை, ஏளனப்பார்வை, ஆச்சரிப்பார்வை, குனிந்தபார்வை, வெற்றிப் பார்வை, சமபார்வை, உறுதியான பார்வை, கலகப் பார்வை, பயப்பார்வை, சோகப்பார்வை, திருட்டுப்பார்வை, ஞானப்பார்வை என்று பார்வை பலவிதமாகும். இவற்றில் மேலானது வெள்ளைப்பார்வை. கபடு, சூதுவாது இல்லாமல் ஒருவரை நோக்குவது வெள்ளைப்பார்வையாகும். எனவே பார்வையின் மூலம் ஒருவரை எடை போட்டு விடமுடியும். அதாவது கண்களைக் கொண்டு ஒருவரை அளந்தறிந்து விடமுடியும்.

கண்களில் தோற்றங்கள் தெரியும் வரையும் கவலையில்லை. தோற்றங்கள் தெரியாத போதுதான் கண்களில் ஏதோ கோளாறு - வருத்தம் - ஊறு உள்ளதாக உணர்ந்து கண் வைத்தியரை நாடிச் செல்கின்றோம். மாலைக்கண், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, புரைநோய் என்பன கண்பார்வை குறைவை உண்டுபண்ணுவனவாகும். சிலருக்கு இருள் கவிந்த பின் பார்வை தெரியாது. சிலருக்கு சூரிய ஒளியை உற்றுப்பார்க்கமுடியாது. கண் கூசும். சிலருக்கு கண்ணில் பூழை தள்ளும். சிலருக்கு அடிக்கடி கண்கலங்கும், நீர்வழியும். விற்றமின் சத்து குறைவு, கிருமிப் பாதிப்பு, போதை மருந்து உபயோகம், நீரிழிவு நோய் போன்றவற்றால் கண்பார்வை பாதிக்கப்படுவது உண்டு. கண்பார்வை குறைபாட்டிற்கு ஆரம்பத்தில் பார்வைக் கண்ணாடியைப் பயன்படுத்தலாம். முற்றிய நிலையில் அறுவைச் சிகிச்சை மூலம் தான் குணப்படுத்தலாம்.

புரை நோய் என்பது கண்களில் ஒரு திரை போன்ற மறைப்பு ஏற்படுவதாகும். இந்தக் குறை முதுமையினால் ஏற்படுத்துவதாகும். இதுமுற்றிய நிலையில் நூற்றுக்கு அறுபது பங்கு எந்தப் பிம்பமும் தெரியாது. உள்ளங்கையைப் பார்த்தால் அதிலுள்ள ரேகைகள் தெரியாத நிலையில் இது முற்றிவிட்டதாக உணரலாம். அப்போது இதனை மருந்தினாற் குணப்படுத்த முடியாது போய்விடும். அறுவைச் சிகிச்சை மூலம் தான் சரி செய்யலாம். இப்பொழுது இது லேசர் சிகிச்சை மூலம் செய்யப்படுகின்றது. லேசர் சிகிச்சை என்பது கண்ணினுள் கண்ணாடி வில்லை பொருத்துதலாகும். கண்ணாடி வில்லையை மடித்து கண்ணுள்ளே வைத்துப் பொருத்துதல் இம்முறையாகும். இந்த நவீன முறையில் ஒரு நாளிலேயே சிகிச்சை முடிந்து விடும். தையல் போட்டுக் கொள்ள வேண்டிய தில்லை. மருத்துவமனையில், தங்கவேண்டிய தில்லை. மறுநாளே இயல்பாகப் பார்க்கவும் படிக்கவும் முடியும்.

கண்பார்வையை சரி செய்வதற்கு இன்னுமொரு வழி மாற்றுவிழியை பொருத்துதலாகும். விபத்தில் அடிபட்டு கண் சேதமுற்றிருந்தால் அல்லது இரசாயனப் பதார்த்தத்தால் கண் கெட்டு விட்டிருந்தால் மாற்றுவிழியைப் பொருத்தலாம். இறந்த ஒருவரின் விழியால் இன்னொருவருக்கு பார்வை கிடைக்கும் முறை இதுவாகும். இறந்த ஒருவரின் கண்களை இறந்த ஆறு மணித்தியாலங்களுள் எடுத்துவிட வேண்டும். கண்கள் கிடைப்பது அரிதாக உள்ளது தான் இதிலுள்ள பெருங்குறைபாடு ஆகும். தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் கண்பார்வை பழுதடையாது. கண் உறுத்தல் ஏற்பட்டால் உற்றுப்பார்த்து கண்களை அகலவிழித்து சரி செய்து கொள்ளலாம். தலைவலியினாலும் கண்பார்வை பாதிப்படை கின்றது எனலாம். மாலை நேரத் தலைவலி கண்பார்வையைப் பாதிக்கும்.

நிம்மதியான நித்திரை, இயற்கையான வெளிச்சத்தில் படிப்பது, எழுதுவது, தூசு, புகை, இரசாயனப்புகை உள்ள இடங்களை தவிர்த்தல், அழுக்கான கைகளால் கண்களைத் தொடுவதையும் கழுவுவதையும் தவிர்த்தல், கண்களை ஒழுங்காகப் பரிசோதனை செய்வது என்பவற்றால் கண்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். காலையில் எழுந்ததும் குளிர்ந்த நீரினால் கண்களைக் கழுவுதல் இதந்தரும். இரு கண்களையும் கைகளால் பொத்திக் கொண்டு உள்ளே தெரியும் இருளை விழித்துப் பார்க்க வேண்டும். தினமும் காலையிலும் மாலையிலும் ஐந்து நிமிடங்கள் இப்படிச் செய்வது கண்பார்வைக்கு நன்மை தரும் பயிற்சியாகும்.

உயிர்ச்சத்து A உள்ள உணவு கண் பார்வைக்கு இதந்தரும். சைவ உணவு அருந்துபவர்கள் காரட், சர்க்கரைவள்ளிக்கிழங்கு பூசணி, பப்பாளி, வெள்ளரி போன்றவற்றை சாப்பிடுவது நல்லது. காலையிலும், மாலையிலும் நடந்து செல்லும் போது பசுமையான இலைகளையும் பூக்களையும் உற்று நோக்கினால் அது கண்ணின் சோர்வை நீக்கும். பசுமை கண்களுக்கு குளிர்ச்சி தரும். வேனிற்காலத்தில் வெய்யிலின் கொடுமையை குறைப்பதற்கு குளிர்ச்சிக்கண்ணாடி அணிவது இதந்தரும்.

கண்களைப் பாதுகாப்பது நமது தலையாய கடமை. கண்தானம் செய்ய உடன்படுவதும் காருண்யமானது. அதனால் இன்னொருவருக்கு பார்வை கிடைக்கிறது. இரண்டு கண்களிலும் முற்றாகப் பார்வை இழந்தவர்களுக்கு வழிகாட்டி நாய் உற்ற தோழனாகும்.

'நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணும் கால் கண்ணல்ல தில்லை பிற' அறிவுடையவர் கண்மூலமே பிறரை அளந்தறிவர்.

'By looking into the eye we can take full inventory of the man'.
'கண்வழி தண்டனை காட்சி வழி.



**நா. க. சிவராமலிங்கம்**

# சிறந்த இணையத்தளங்கள் - 4

17. http://ccat.sas.upenn.edu/plc/tamilweb/
இன்று பெரும்பாலும், புலம் பெயர் நாடுகளில் தமிழை இரண்டாவது மொழியாக பிள்ளைகளுக்கு கற்பிக்க பெற்றார் பெரும் கஸ்ரங்களை சந்திக்கின்றனர். அதனை இலகுவாக்க ஓர் இணையத்தளம். Web Assisted Learning and Teaching of Tamil (WALTT)

பல பிரிவுகளில் தமிழை கற்பிக்கின்றது. வீடியோ பிரதிகள், கதைகள், ஆங்கில தமிழ் சொற்கள், உச்சரிப்பு, எழுத்துத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகள் போன்ற பல விடயங்கள் உள்ளன. இதனை பென்சலேவியா பல்கலைக்கழக மொழியியல் துறையினர் நடத்துகின்றனர்.

**- பதமி -**

18. இது விடுமுறையை கழிக்கும் காலம். எனது நண்பர் ஒருவர் அவுஸ்திரேலியாவுக்கு 1000 டொலருக்கு விமான கட்டணம் கட்டி சென்றதாக கூறினார். அடிக்கடி இங்கிலாந்தில் இருந்து ரொறன்ரோ வரும் பெண்மணி வந்த விமான நிறுவனத்தின் பெயர் "No Name Air Lines". வியப்பாக இருக்கும். உண்மை அது தான். கட்டணம் வந்து போக 100 டொலர். இவர்கள் அனைவரும் பயன்படுத்தியது இணையத் தளங்களையே. அவ்வாறான சில இணையத் தளங்கள் இவை.' தேடு' தளத்தில் தொடர்ந்து தேடினால் நாங்கள் குறைந்த விலையில் பல நாடுகளை சந்திக்கலாம்.
http://www.expedia.com/


இத்தளத்தில் விடுதிகளை கூட முன் கூட்டியே பதிவு செய்யலாம்.
19. Kayak.com
20. Orbitz.com
21.http://www.travelandleisure.com/
22. www.tripmama.com/
23. www.momondo.com/
24. www.cheapoair.com
25. http://www.budgettravel.com/index.html

26. பின்னால் பொதி சுமப்பவர்கள். இவர்கள் ஒரு சிறுபையை முதுகில் சுமந்து உலகையே வலம் வருவார்கள். இவர்களுக்கான தளம் இது. பல நல்ல பயனுள்ள தகவல்கள் உள்ளன.
http://www.backpackers.com/

உங்களது பயணத்தை திட்டமிடவும், நேரத்தை மிச்சப்படுத்தவும், பல நல்ல தகவல்களுடன் உள்ள தளம். http://budgettravel.about.com/



# ஞானகுரு - தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 41








**வழிப்போக்கன்**

பல்வேறு சிறப்புகளையும் தனிப்பெருமைகளையும் கொண்டு, இன்று வழக்கில் இருக்கும் இந்திய மொழிகளிலேயே தனித்துவத்துடன் விளங்குவது தமிழ் மொழிதான் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. தமிழின் மிகப் பழைமைத் தன்மை, அதன் பழங்கால இலக்கிய மேன்மைகள் தவிர நவீன இந்தியாவின் வரலாற்றிலும் தமிழ் மொழிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது இந்திய மொழிகளிலே தமிழ் மொழியில்தான் முதன்முதலில் புத்தகம் அச்சிடப்பட்டது என்பதுதான். இந்தியாவுக்கு முதன்முதலாக அச்சுக்கலையை அறிமுகம் செய்த மொழி தமிழ் என்ற இந்த பெருமை அரங்கேறிய ஊர், தரங்கம்பாடி. தமிழக சுற்றுலாத் துறையால் "பாரம்பரிய நினைவுச்சின்ன"மாக அறிவிக்கப்பட்டுள்ள ஊர்!

தஞ்சாவூரில் இருந்து 105 கிலோமீட்டர் தொலைவில், நாகப்பட்டிணம் மாவட்டத்தில், வங்காள விரிகுடா கடலுக்கு அண்டைக் கட்டியது மாதிரி உள்ளது தரங்கம்பாடி. குலசேகரபட்டிணம் என்பதுதான் இதன் பழங்காலப் பெயர். பிறகு, "சடங்கன்பாடி" என வழங்கி, அதன்பிறகு தரங்கம்பாடி ஆனது. தரங்கம்பாடி பெரிய ஊர் இல்லை. ஒரு கிராமம் மாதிரிதான். ஆனால், ஒரு காலத்தில் இந்தியாவிலேயே மிக முக்கியமான ஊராக மிகவும் பரபரப்பான இடமாக இது விளங்கியிருக்கிறது என்பதை உணரும்போது, மெய் சிலிர்க்கிறது. 1620 முதல் 1825ம் ஆண்டுவரை டச்சுக்காரர்களின் கையிலிருந்தது இந்த ஊர். டச்சுக்காரர்களின் கடல் வணிக வளாகமாகவும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் முக்கியமான கேந்திரமாகவும் அக்காலகட்டத்தில் தரங்காபாடி இருந்தது.

கோரமண்டலக் கடற்கரையில் டச்சுக்காரர்களுக்கு இருந்த ஒரே வர்த்தக மையம் தரங்கம்பாடிதான். ஆங்கிலேயர்களிடம் கி.பி. 1825இல் ஒப்படைக்கும் வரை, இங்குள்ள கோட்டைக் கொத்தளங்களில் டச்சுக்காரர்களின் வணிகம் சுறுசுறுப்பாக நடந்துள்ளது. டச்சுக்காரர்கள் இந்தியாவை ஆண்ட காலகட்டத்தின் வரலாற்று எச்சங்களை இப்பொழுதும் தரங்கம்பாடியில் பார்க்கலாம். அவற்றில் தரங்கம்பாடி கிறித்துவ தேவாலயமும் கோட்டையும் இன்றும் மக்களைக் கவருபவை. டச்சுக்காரர்கள் இந்தியாவில் கால்பதித்து முதன்முதலாகக் கட்டிய கோட்டை இதுதான். 1620ம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கோட்டை கடல் காற்றையும் பல்வேறு கடல் சீற்றங்களையும், கடைசியாக சுனாமியையும் தாக்குப்பிடித்து, வயதான சிங்கம் போல் ஜானுபாகுவாய் கடற்கரையோரம் உயர்ந்து நிற்கிறது. டச்சுக்காரர்கள் காலகட்டத்துக்குப் பிறகு, அரசு ஊழியர்கள் மற்றும் ராணுவத்துறை பயணிகளுக்கான பொதுப்பணித்துறை மாளிகையாக 1977ம் ஆண்டு வரை இந்தக் கோட்டை இருந்தது. 1977இல் அரசால் பாதுகாக்கப்படும் நினைவுச்சின்னமாக கோட்டையை தமிழக அரசு அறிவித்தது.

டச்சுக்காரர்கள் கால கட்டத்தில் மிகவும் முக்கியமானதாக இருந்த தரங்கம்பாடி துறைமுகம், பிற்காலத்தில் சென்னை துறைமுகம் வளர்ச்சியடைந்து விட்டதால், இப்பொழுது செயல்படாமல் உள்ளது.

முதன் முதலாக தமிழை அச்சு ஏற்றியவரும் தமிழ்மொழிக்கு அரும் பணியாற்றியவருமான சீகன் பால்குவின் வீடும் கல்லறையும், தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள். 1682ம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்த சீகன் பால்கு, டென்மார்க் நாட்டின் திருச்சபை சார்பில் கிறிஸ்தவ மதப் பிரசாரப் பணிக்காக கப்பல் மூலம் 1706ம் ஆண்டு தரங்கம்பாடி வந்திறங்கினர். சீகன் பால்க், தரங்கம்பாடி வந்து சேர்ந்ததே ஒருபெரியக் கதை. சீகன் பால்குவையும் அவருடன் வந்த ப்ளுட்சு என்பவரையும் லயத்தில் பிரதிஸ்டை செய்வதற்குக்கூட டென்மார்க்கில் இருந்த பிஷப் மறுத்துவிட்டார். இறுதியில் டென்மார்க் அரசன் நான்காவது பிரடெரிக் இந்த விடயத்தில் நேரடியாக குறுக்கிட வேண்டியதாயிற்று. பின்பு ஒரு லுத்திரன் லயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

அதன்பின்பு 1705ம் ஆண்டு நவம்பர் 30ம் நாள் இருவரும், இந்தியாவுக்கு, பிராட்டெஸ்டெண்டு சபையால் அனுப்பப்பட்ட முதல் மிஷனெரிகளாக தங்கள் பயணத்தை தொடங்கினார்கள். அந்த இரு இந்திய மிஷனெரிகளின் பயணத்துக்கு தடைகள் சொந்த நிலத்தில் மாத்திரமல்ல, கடலிலும் நீடித்தது.

ஏறக்குறைய தொண்ணூறு ஆண்டுகளாக டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனி தரங்கம்பாடியில் வியாபாரத் தொடர்பு வைத்திருந்தது. மிஷனெரி தாகமுள்ள டென்மார்க் அரசன் அந்த இரண்டு இந்திய மிஷனெரிகளைத் தரங்கம்பாடியிலுள்ள டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனியில் வேலைசெய்கிறவர்கள் என்ற பெயரில் அனுப்பினார். ஆனால், இது தங்கள் வியாபாரத்துக்கு இடையூராக அமையும் என கிழக்கிந்திய கம்பனி எதிர்த்தது.

அந்த மிஷனெரிகளை எப்படியாவது இந்தியாவில் இறங்கவிடாமல் செய்ய கங்கணம் கட்டியது. எனவே, தரங்கம்பாடியில் உள்ள தங்கள் அதிகாரிகளுக்கு, அந்த இந்திய மிஷனெரிகளின் வேலையை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று மறைமுகமாக ஆலோசனை கூறியிருந்தது. கம்பெனி. இதன் விளைவாக சீகன் பால்க்கும் ப்ளுட்சும் ஏழு மாத கடல் பிராயணத்தின் முடிவில் தரங்கம்பாடிக்கு வந்து சோர்ந்தபோதும், கப்பலிலிருந்து கடற்கரைக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்கு ஒருவரும் இல்லை. எனவே, இறங்கமுடியாமல் அநேக நாட்களாய் கப்பலிலேயே காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறுதியாக, அந்தக் கப்பல் இருந்த பக்கமாக மீன் பிடிக்க வந்த படகில் ஏறி கரை நோக்கி வந்தார்கள். கப்பலிலிருந்து அவர்கள் தப்பிப்போவதை கண்ட கப்பலின் தலைவன் தன் கையிலிருந்த தடியை உயர்த்தி அச்சுறுத்தினான்.

கரையைச் சேர்ந்த பிறகும் இருவரும் தரங்கம்பாடிக்கு வெளியிலேயே காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை காத்திருக்க வைக்கப்பட்டார்கள். பிறகு, ஒரு அதிகாரி வந்து அவர்களை அழைத்துச்சென்று, பரபரப்பான மார்க்கெட் பகுதியில் விட்டுவிட்டு மறைந்துவிட்டான். மொழி தெரியாத ஒரு அந்நிய தேசத்தில், தெரிந்தவர்கள் - அறிமுகமானவர்கள் ஒருவரும் இல்லாததொரு சூழ்நிலையில், அந்த வாலிபர்கள் இருவரும் அனாதையைப் போல, எங்குபோவதென்று தெரியாமல் தெருவிலே நின்றார்கள். தரங்கம்பாடி டேனியத் தொழிற்சாலை அலுவலர்கள் சீகன் பால்க்கையும் அவரது தோழர் ப்ளுட்சுசாவையும் நடத்திய முறை அடிப்படை மனித தன்மைக்கும் அபிமானத்திற்கும் அப்பாற்பட்டதாயிருந்தது. அவர்களது மிஷனெரி ஆர்வத்தை தணியச் செய்து, பணியை கைவிட்டு பின்னடையச் செய்யும் நோக்கத்தோடு, எந்தக் காரணமுமின்றி மிக அற்பமான காரியங்களைச் சாக்குக் காண்பித்து அவர்களை பகிரங்கமாக கைது செய்தார்கள். நான்கு மாதங்கள் சீகன் பால்கு சிறையிலடைக்கப்பட்டார்.

இப்படி, ஆரம்ப காலத்தில் பல்வேறு விதமானக் கொடுமைகளை சகித்தே இரு வாலிப மிஷனெரிகளும் தங்கள் பணியைத் தொடங்கினர். தரங்கம்பாடியின் கடற்கரை மணல் மீது பள்ளிப் பிள்ளைகளோடு அமர்ந்து, தமிழைக் கற்கத் தொடங்கினார் சீகன் பால்கு. ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகட்கு முன்னர் தரை மணல் மீது தமிழ் எழுத்துக்களை வரைந்து கொண்டிருந்த போது, உண்மையில் அவர், இன்றுள்ள இலட்சக்கணக்கான தமிழ் அச்சுப்புத்தகங்களின், தற்காலத் தமிழ் உரைநடையின் முன்னுரையை எழுதினார் என்றே சொல்லவேண்டும். மணல் மீது வரைந்த அவரது குழந்தைத் தனமான எழுத்துக்களை வெகு விரைவில் தரங்கம்பாடிக் கடலலைகள் அழித்துச் சென்ற போதிலும் அவரது உறுதியான முயற்சிகளெல்லாம் அழியாததொரு முத்திரையைப் பதித்துவிட்டது. தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக சீகன் பால்க் தமிழ் மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து முடித்தார். வேதாகமத்துக்கு முன்னோடியாக, ஒரு சில கைப்பிரதிகளையும் பள்ளி பாட புத்தகங்களையும் பிரசங்கங்களையும் வெளியிட்டார்.

இந்தப் புத்தகங்களை முதலில் கையினாலும் பின்பு 1713ம் ஆண்டு ஜெர்மனிய தேசத்து நண்பர்கள் பரிசாக அனுப்பிய அச்சு இயந்திரத்திலும் அச்சிடப்பட்டது. பொற்கொல்லர்களைக் கொண்டு சிறிய தமிழ் அச்சுகளை உருவாக்கினார். பின்னர் 1715ம் ஆண்டில் தமிழ் மொழியில் முதன் முதலாக புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். தமிழ்ப் பள்ளிகள், பெண்களுக்கான தனிப் பள்ளிகள், 17,000 சொற்களைக் கொண்ட தமிழ் அகராதி... என சீகன்பால்குவின் அறப்பணிகள் இன்றும் அவரது பெருமையை எடுத்துக் கூறுகின்றன. 1718ம் ண்டில் தரங்கம்பாடியில் சீகன் பால்கு உருவாக்கிய ஜெருசலேம் தேவாலயத்தில் இன்றும் வழிபாடுகள் நடக்கின்றன.

டச்சுக்காரர்கள் காலகட்டத்தின் நினைவுச் சின்னங்களாக எஞ்சியுள்ளவைதான் தரங்கம்பாடியை இன்று ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக இயக்குகின்றன என்றாலும், டச்சுக்காரர்கள் வரவுக்கு முன்னாலேயே தரங்கம்பாடி முக்கியத்துவம் பெற்றுதான் இருந்திருக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாசிலாமணி நாதர் கோயில்தான் அக்காலத்தில் தரங்கம்பாடியின் அடையாளமாக இருந்துள்ளது. இக்கோயில் மகாவர்ம குலசெகர பாண்டியனால் கி.பி.1305இல் கட்டப்பட்ட பழைமையான கோயில். ஆரம்பகாலத்தில் கடற்கரையில் இருந்து மிகவும் தூரத்தில்தான் இருந்திருக்கிறது இந்தக் கோயில். காலப்போக்கில் கடல் முன்னேறி முன்னேறி வந்து ஈசனின் இருப்பிடத்தைப் பாதி தழுவிவிட்டது. பூம்புகார் துறைமுகத்தைக் காவு வாங்கிய கடல்சீற்றம் தரங்கம்பாடியையும் தாக்கியது. கடல் சீற்றத்துக்கு எதிராக தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு கடற்கரை கிராமம் நடத்திய நீண்ட போராட்டத்தின் நினைவுச்சின்னமாக இன்று எஞ்சியுள்ளது மாசிலாமணி நாதர் கோயில். கடல் அரிப்புக்குள்ளாகி முழுக்கவே சிதைந்துவிட்ட கோயிலின் மூலஸ்தானம் மட்டுமே எஞ்சியுள்ளது. தற்போதும் கடல் அலைகளோடான இந்தக் கோயிலின் போராட்டம் ஓயவில்லை. கடல் அலைகள் சிதைந்த கோயிலின் மீது மோதித் தெறித்துக்கொண்டே இருக்கின்றன. கடல் அலைகள் கரைத்தாலும் இன்னமும் கரையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் தரங்கம்பாடி மாசிலாமணிநாதர் கோயிலில், எஞ்சியுள்ள பகுதியில் இப்பொழுதும் மக்கள் வழிபாடு செய்கிறார்கள்.

ஒரு காலத்தில் முக்கிய வர்த்தக மையமாக, பரபரப்பாக இருந்த தரங்கம்பாடி, நிலையாமையின் ஆழ்ந்த அழகின் சுவடுகளை தாங்கி, அதன் விழுப்புண்களோடு நமக்கு ஞானத்தை வழங்கும் குருவாக நிற்கிறது.

### எப்படி செல்வது, எங்கே தங்குவது?

நாகப்பட்டிணத்தில் இருந்து 35 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது தரங்கம்பாடி. சிதம்பரம், மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் இருந்து தரங்கம்பாடிக்கு பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை பேருந்து வசதி உள்ளது. வாடகைக்கார்கள், வேன்களும் கிடைக்கும். சென்னையில் இருந்து சிதம்பரம், மயிலாடுதுறைக்கு தினமும் பேருந்து போக்குவரத்தும், மயிலாடுதுறைக்கு ரயிலும் உள்ளன. தரங்கம்பாடியில் சிறந்த தங்கும்விடுதிகள் கிடையாது. எனவே சிதம்பரம், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் தங்கி வந்து செல்வது சிறந்தது.



Niru BRAND ®
FOOD PRODUCTS
நிரு பிரண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
NIRU
PINEAPPLE JAM
Pure Gingelly Oil
(Sesame Oil)
Huile De Sesame Extrite
De Graines De Toute
Premiere Qualite
750ml
Kitul Treacle
CHILLI SAUCE
CONDENSED
Sweetened
300ml.
SPICY COFFEE
175g.
COW GHEE
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# மகாபாரதம்

வியாச மகாபாரதம் அடிப்படையில் ஒரு மதநூல் அல்ல. மதம் என்றால் உறுதியான தரப்பு என்றே வடமொழியில் பொருள். அப்படிப்பட்ட ஒரு தரப்பை முன்னிறுத்தும் நூல் அல்ல அது. நெடுங்காலம் சூதர்களால் பாடப்பட்டு வந்த வம்சவழி 'வீரகதைகள்'. எப்போதோ கிருஷ்ண துவைபாயனன் என்று அழைக்கப்படும் முதல் வியாசனால் தொகுக்கப்பட்டன. பின்னர் குறைந்தது இருமுறையாவது வேறு வியாசர்களால் அது மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளது. வியாசர் என்றால் தொகுப்பாளன் என்றுதான் பொருள். வியாச மகாபாரதம் முழுக்க முழுக்க இலக்கியமே ஆகும்.

எந்த பண்டைப்பேரிலக்கியங்களையும் போலவே மகாபாரதத்தின் பேசுபொருள் 'அறம்' தான். 'தர்மம்' அரச அறம், குடும்ப அறம், தனிமனித அறம் என விரிந்து, "பேரறம்" என்று ஒன்று உண்டா என வினவிச்செல்லும் பயணம் அதில் உள்ளது.

காலப்போக்கில் அந்நூலில் உள்ள அறவிவாதங்களை ஒட்டி தனியான அறநூல்கள் விரித்து எழுதப்பட்டன. அவை அந்நூலிலேயே சேர்க்கப்பட்டன. அதில் ஒன்றே கீதை. அவ்வாறாக மகாபாரதத்துக்கு ஒரு தர்மசாஸ்திரத்தின் இடம் உருவாகியது. கிருஷ்ண வழிபாடு ஒரு பெருமதமாக வளர்ந்தபோது மதநூலாகவே அடையாளம் காணப்பட்டது.

இன்றைய நவீன வாசகன் மகாபாரதத்தை ஓர் இலக்கிய நூலாக மட்டுமே அணுக முடியும். இந்நூற்றாண்டின் முன்னோடித் திறனாய்வாளர்கள் பலர் அத்தகைய விரிவான இலக்கியவாசிப்பை மகாபாரதத்துக்கு அளித்துள்ளனர். மிகச்சிறந்த உதாரணம் கேரள விமரிசகர் குட்டிகிருஷ்ண மாரார் எழுதிய "பாரத பரியடனம்". அது ஒரு மகத்தான நூல்.

வியாசமகாபாரதம் ஒரு செவ்விலக்கிய நூல். 'கிளாசிக்' செவ்விலக்கியம் என்றால் ஓர் அறிவுச்சூழலின் பிற்பாடுவரும் எல்லா ஆக்கங்களுக்கும் அடிப்படையாக அமையக்கூடிய படைப்பு என்று டி.எஸ்.எட்லியட்டின் புகழ்பெற்ற விளக்கம் சொல்கிறது. மகாபாரதம் பல நூற்றாண்டுகளாக தன்னிலிருந்து பெரும்படைப்புகளை உருவாக்கியிருக்கிறது. காளிதாசனின் "சாகுந்தலம்" முதல் பாரதியின் "பாஞ்சாலி சபதம்" வரை இதற்கு ஏராளமான உதாரணங்களைச் சொல்லலாம்.

நவீன இலக்கியத்திலும் மகாபாரதம் தொடர்ந்து மறு ஆக்கம் செய்யப்படுகிறது. தமிழிலேயே கிடைக்கும் நூல்களான வி.ஸ.காண்டேகரின் "யயாதி" 'மராத்தி' ஐராவதி கார்வேயின் "ஒரு யுகத்தின்முடிவு" 'இந்தி' எஸ்.எல்.'பைரப்பாவின் "பருவம்" 'கன்னடம்' பி.கெ.பாலகிருஷ்ணனின் "இனி நான் உறங்கலாமா?" 'மலையாளம்'



**ஜெயமோகன்**

எம்.டி.வாசுதேவன் நாயரின் "இரண்டாமிடம்" 'மலையாளம்' எம்.வி.வெங்கட்ராமின் "நித்ய கன்னி" 'தமிழ்' எஸ்.ராமகிருஷ்ணனின் "உபபாண்டவம்" போன்ற நாவல்களை நீங்கள் வாசித்துப்பார்க்கலாம்.

ஏன் இவை மகாபாரதத்தை அடித்தளமாகக் கொள்கின்றன? இரண்டு காரணங்கள். ஒன்று, மகாபாரதம் அடிப்படை அறவிவாதங்களை வாழ்க்கை சார்ந்து முன்வைக்கிறது. அந்த அற அடிப்படைகளை இன்றைய நோக்கில் மறு மதிப்பீடு செய்ய விரும்பும் படைப்பாளிகள் மகாபாரதத்தை மறு ஆக்கம் செய்கிறார்கள்.

இரண்டு மகாபாரதத்தின் கதைகள் நூற்றாண்டுகளாக சொல்லப்பட்டு நம் மனதில் பதிந்து ஆழ்மனத்தில் ஊடுருவிச்சென்றவை. அப்படி ஆழத்துக்குச் செல்லும் ஒரு விடயம் "ஆழ்படிமமாக" 'ஆர்கிடைப்' மாறுகிறது. அதற்கு நம் மனதில் பற்பல அர்த்தங்கள் உருவாகி வளர்ந்தபடியே உள்ளன. இவ்வாறாக மொத்த மகாபாரதமே ஒரு குறியீடுகளின் பெருவெளியாக மாறியிருக்கிறது. உதாரணமாக அர்ஜுனனின் வில் காண்டீபம். ஆனால் அது நம் மனதில் ஒரு படிமமும் 'இமேஜ்' கூட இல்லையா?

நாம் மரபில் உள் படிமங்களைக் கொண்டுதான் படைப்புகளை உருவாக்குகிறோம். உதாரணம் தாலி. அதைப்போலவே மகாபாரதத்தின் கதாபாத்திரங்களும் பொருட்களும் எல்லாம் படிமங்களாக ஆகியிருக்கின்றன. அவற்றை இன்றைய நோக்கில் இலக்கியப்படைப்புகளுக்கு அடிப்படைகளாக ஆக்கிக் கொள்கிறார்கள் படைப்பாளிகள்.

செவ்விலக்கியங்களின் முக்கியத்துவம் இப்படித்தான் உருவாகிறது. இன்றைய வாசகனுக்கு அடிப்படையான வினாக்களை எழுப்பும் மூலநூல்களாகவும், ஆழ்மனப்படிமங்களை உருவாக்கும் மொழிப்பிராந்தியமாகவும் அவை விளங்குகின்றன.

மகாபாரதத்தை பக்தி பரவசதத்துடன் படிப்பவர்கள் படிக்கட்டும். இலக்கியவாசகன் அதை ஒரு செவ்விலக்கியமாக எண்ணி படிக்க வேண்டும். அது பல்லாயிரம் விதைகள் உறங்கும் ஒரு நிலம். வாசகனின் கற்பனையின் நீர் பட்டு அவையெல்லாம் முளைக்க வேண்டும்.





**AIR LINK TRAVEL LTD.**

5200 FINCH AVE. E., #115, SCARBOROUGH, ON., FINCH & MIDDLEFIELD

TEL: 416.292.6200 FAX: 416.292.7478



**Anton Jeeva, P.Eng.**
*Real Estate Broker*
*Principal Mortgage*

RE/MAX

**வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க**

எந்தவித அடமானக் கடன்களும் பெற

**Direct - 416.575.5055**

**HOUSE FOR SALE**
27 Chicory Lane, Staines Rd./Morningside



- 3 + 1 Bedrooms
- 3 Washrooms
- Fridge & stove

**$309,000 For Sale**



1703 Mccowan Rd. P2
Mccowan & HWY 401

**$184,900**

- Bedrooms 3
- Washrooms 2
- New paint
- Parque Flooring Floors
- Fridges, Stove, Washer, Dryer, Etc.

**$359,000**



Denison & Hillcroft
- 2 storey home, 2000 sqft.
- Bedrooms 3 + 1
- Washrooms 3, Laminate floor
- Double Garage & opener with remote, Sep. entrance

**$353,900**



Power of Sale
- 159 Old Finch Ave.
- Morningside & Old Finch
- Bedrooms 4 • Washrooms 3
- Detached House

***Speciallized in Power of Sale Homes***

**CDN Financial & Mortgages Inc.**
**Authorize Brokerage by FSCO**

**REMAX VISION REALTY INC.**

**COMPUTER REPAIRS & UPGRADES**

- Virus Removal, Internet Sharing Computer Tune Up மற்றும் அனைத்து Computer திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வைத்தோ அல்லது எடுத்துச் சென்றோ திருத்தித் தரப்படும்.
- உங்கள் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப Computer Assembling செய்து கொள்வதற்கும் உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள் - **RAJ Paramasamy**



A+ Certified PC Technician, Microsoft Certified Professional

தொலைபேசி எண் - **416.587.1619** **Free Estimate**

**KEITH APPLIANCE SERVICE**


***Heating & Air Condition***




Service, All makes repair installation for central A/C & furnace.

தொடர்புகளுக்கு: கேதீஸ்

***416-786-6790 / 416.787.4715***



**ELECTRICAL WORKS**



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

**TENNIS LESSONS**

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 35 years of experience. Group Classes & Private Coaching Possible



**David Selvadurai : 416.495.1277**